# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
2023-2024

### மானியக் கோரிக்கை எண். 44

**தா.மோ. அன்பரசன்**
குறு, சிறு மற்றும் நடுத்தரத்
தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2023

## உள்ளடக்கம்


| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை | 1 |
| 2. | தொழில் வணிக ஆணையரகம் | 12 |
| 3. | தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (TANSIDCO) | 82 |
| 4. | தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (TANSI) | 114 |
| 5. | தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம்(EDII–TN) | 123 |
| 6. | தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வசதியாக்கல் நிறுவனம் (FaMeTN) | 150 |
| 7. | தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (TANSIM) | 166 |

# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2023-2024

### 1. முகவுரை

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (MSMEs) இந்தியப் பொருளாதாரத்தின் முக்கியப் பங்காற்றுவதோடு வேலைவாய்ப்பை உருவாக்குவதில் வேளாண்மைக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடம் வகிக்கிறது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அவற்றின் எண்ணிக்கையாலும் பரந்து விரிந்து அனைத்துப் பகுதிகளிலும் காணப்படுவதாலும், நாட்டின் தொழில்துறையில் ஆதிக்கம் செலுத்துகின்றன. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பொருளாதார வளர்ச்சியின் உந்துசக்திகளாக திகழ்கின்றன. உலகளவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் 90 விழுக்காடு வணிகங்களையும் 50 விழுக்காட்டிற்கும் அதிகமான

வேலைவாய்ப்புகளையும் வழங்குகிறது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாடு முழுமைக்கும் பல தரப்பட்ட துறைகளில் வேலை வாய்ப்புகளை வழங்கவும் பின்தங்கிய நலிவுற்ற மற்றும் ஊரகப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் வழிவகைகள் செய்கின்றன.

இந்தியாவில், சுமார் 6.3 கோடி குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், உற்பத்தி துறையில் 45 விழுக்காடும், ஏற்றுமதியில் 45 விழுக்காட்டிற்கு மேலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 28 விழுக்காட்டிற்கு மேல் பங்களிப்பு செய்து நாடு முழுவதும் சுமார் 11 கோடி பேருக்கு வேலைவாய்ப்பையும் வழங்குகின்றன.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வரையறையை முதலீடுகள் மற்றும் விற்றுமுதல் (ஏற்றுமதியிலிருந்து வரும் வருவாய் தவிர்த்து) ஆகியவற்றின் ஒருங்கிணைந்த

அளவுகோல்களை இணைத்து, ஒன்றிய அரசு ஜூலை 1, 2020 முதல் திருத்தியமைத்துள்ளது. திருத்தப்பட்ட வரையறை பின்வருமாறு:

| **நிறுவனங்களின் வகைப்பாடு** | **இயந்திர மற்றும் தளவாடங்களின் முதலீடு (தொகைக்கு மிகாமல்)** | **ஆண்டு விற்றுமுதல் (தொகைக்கு மிகாமல்)*** |
|---|---|---|
| குறு நிறுவனங்கள் | ரூ.1 கோடி | ரூ.5 கோடி |
| சிறு நிறுவனங்கள் | ரூ.10 கோடி | ரூ.50 கோடி |
| நடுத்தர நிறுவனங்கள் | ரூ.50 கோடி | ரூ.250 கோடி |

*ஏற்றுமதி விற்றுமுதல் வருவாய் நீங்கலாக

மொத்தம் மற்றும் சில்லறை வணிக நிறுவனங்கள் முன்னுரிமை அடிப்படையில் கடன் பெறும் நோக்கத்திற்காக மட்டும் ஜூலை 2, 2021 முதல் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வரையறைக்குள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 1.1 தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

தொழில்முனைவோர் மற்றும் தொழில்துறை நடவடிக்கைகளில் தமிழ்நாடு, ஆயிரக்கணக்கான

ஆண்டுகள் பழமையான நீண்ட வரலாற்றைக் கொண்ட மாநிலமாகும். மேலும் ஜவுளி, உலோக வேலைகள், மட்பாண்டங்கள், கப்பல் கட்டுமானம் போன்றவற்றுக்கு பிரபலமானது. இந்தியாவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் எண்ணிக்கையில் தமிழ்நாடு 3வது இடம் வகிக்கிறது. தமிழ்நாட்டில், 49.48 இலட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இருப்பதாக 73 ஆவது தேசிய மாதிரி கணக்கெடுப்பு 2015-16 இன் படி மதிப்பிடப்பட்டுள்ளது. (நாட்டிலுள்ள மொத்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையில் 7.8 விழுக்காடு). மாநிலத்தில் உள்ள இந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் 99 விழுக்காட்டுக்கும் அதிகமானவை குறு நிறுவனங்கள், 0.42 விழுக்காடு சிறு நிறுவனங்கள் மற்றும் 0.003 விழுக்காடு மட்டுமே நடுத்தர நிறுவனங்களாகும். இது தவிர குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் 51.25 விழுக்காட்டுக்கும் அதிகமானவை ஊரகப்பகுதிகளில்

அமைந்துள்ளன. உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்காக, பல்வேறு துறைகளில் பல்வேறு வகையான பல்லாயிரக்கணக்கான பொருட்களை இந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்கின்றன.

தோல் பொருட்கள், பொறியியல் பொருட்கள், வாகன உதிரிபாகங்கள், உலோக வார்ப்புகள், பம்புகள் மற்றும் ஆயத்த ஆடைகள் போன்ற முக்கிய உற்பத்தித் துறைகளில் தமிழ்நாடு முக்கிய பங்கு வகிக்கிறது. மின்வாகனங்கள், நிதித்தொழில்நுட்பம் – மென்பொருள் சேவைகள் மற்றும் புத்தொழில் போன்ற பல வளர்ந்து வரும் துறைகளுக்கான மையமாகவும் தமிழ்நாடு உருவாகி வருகிறது.

## 1.2 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கட்டமைப்பு

**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அமைப்புகள் மற்றும் அவற்றின் பொறுப்புகள் பின்வருமாறு:**

### 1.2.1 தொழில் வணிக ஆணையரகம்

அ. தொழில் கொள்கையை உருவாக்குவதில் உதவுதல் மற்றும் கொள்கையை பங்குதாரர்களிடையே நுணுக்கமாக கொண்டு செல்லுதல்.

ஆ. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான மாநில வியூகத்தை செயல்படுத்துதல் மற்றும் சுயவேலைவாய்ப்பினை ஊக்கப்படுத்திடவும், மாநிலம் முழுவதும் சமச்சீரான தொழில் வளர்ச்சிக்காகவும் மானியங்கள் வழங்குதல்.

இ. வட்டார அளவிலான வங்கியாளர்கள் குழு கூட்டங்கள் மற்றும் மாநில அளவிலான வங்கியாளர்கள் குழு கூட்டங்கள் மூலம் நிதித்தேவைகள் உட்பட குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் குறிப்பிட்ட தேவைகளை பெற வழிவகை செய்தல்.

ஈ. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம், 2006இன் கீழ் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் காலதாமதமாகப் பணம் பெறுவதை குறு மற்றும் சிறு நிறுவனங்களின் வசதியாக்க குழுக்கள் (MSEFCs) மூலம் விரைந்து பெற்றிட உதவுதல்.

உ. தமிழ்நாடு வணிக நடைமுறைகள் எளிதாக்கும் சட்டம், 2018 மற்றும் விதிகளை நடைமுறைபடுத்துதல் மற்றும் ஒற்றைச் சாளர இணையதளத்தில் பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு தீர்வு காண்பதை எளிதாக்குதல்.

ஊ. தொழிற்கூட்டுறவு நிறுவனங்களை மேற்பார்வையிடுதல்.

எ. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட தொழில் மையங்களின் மூலம்

தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுதல்.

ஏ. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை பதிவு செய்திட உதவுதல்.

ஐ. ஏற்றுமதியை ஊக்குவித்தல்.

ஒ. ஆற்றல் தணிக்கை, தரச்சான்றிதழ் மற்றும் அறிவுசார் சொத்து உரிமை போன்றவற்றை ஊக்குவிப்பதன் மூலம் இந்நிறுவனங்களின் தரத்தை மேம்படுத்துவதை ஊக்குவித்தல்.

### 1.2.2 தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TANSIDCO)

அ. தொழிற்பேட்டைகளை நிறுவி பராமரித்தல் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான தொழில் மனைகள் மற்றும் தொழிற்கூடங்கள் வழங்குதல்.

ஆ. தொழில் குழுமங்கள் மற்றும் பொதுவசதி மையங்களை நிறுவுதல் மற்றும் ஊக்குவித்தல்.

இ. புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நலனுக்காக தொழிலாளர் விடுதிகளை நிறுவுதல்.

ஈ. தொழில்களின் நவீன தேவைகளுக்கு ஏற்ப உடனடியாக தொழில் துவங்குவதற்கு ஏதுவான தொழிற்கூட வசதிகள் (Plug and Play) ஏற்படுத்துதல்.

### 1.2.3 தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (TANSI)

அ. மாநில அரசு துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு மர மற்றும் எஃகு அறைகலன்கள் தயாரித்து வழங்குதல்

ஆ. தனியாருக்கு மலிவு விலையில் தரமான மரச்சாமான்களை வழங்குதல்

### 1.2.4. தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII–TN)

அ. மாநிலம் முழுவதும் தொழில் முனைவோர் கல்வி மற்றும் சுயவேலைவாய்ப்பை ஊக்குவித்தல்.

ஆ. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே புத்தாக்கத்தினை ஊக்குவித்தல்.

### 1.2.5 தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வசதியாக்கல் நிறுவனம் (FaMeTN)

கடன், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகள், முதலீடு, திறன், நிலைத்தன்மை மற்றும் துறை சார்ந்த முன் முயற்சிகளை அணுகுவதில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உதவுதல்.

### 1.2.6 தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (TANSIM)

அ. மாநிலத்தில் உள்ள புத்தொழில்களை செயல்படுத்த உகந்த சூழலை உருவாக்குதல்

ஆ. புத்தொழில்களுக்கும் வளர் –காப்பகங்களுக்கும் தேவைப்படும் நிதி உதவி வழங்குதல் மற்றும் நிதி பெற வசதி செய்தல்

இ. பரவலான சமச்சீரான புத்தொழில் வளர்ச்சியினை உறுதி செய்தல்

ஈ. புத்தொழில்களை வழிகாட்டிகளுடன் (Mentors) தொடர்பு ஏற்படுத்தி பயன் பெற வழிவகுத்தல்

## 2. தொழில் வணிக ஆணையரகம்

தொழில் வணிக ஆணையரகம், பின்வரும் 4 முக்கிய செயல்பாடுகளை வழி நடத்துகிறது.

அ. மாவட்டத் தொழில் மையங்கள் (DICs)

ஆ. தொழிற்துறை கூட்டுறவு நிறுவனங்கள்,

i) தமிழ்நாடு சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் கூட்டமைப்பு (INDCOSERVE)

ii) சேலம் ஸ்டார்ச் மற்றும் சேகோ உற்பத்தியாளர்களின் சேவை தொழிற்கூட்டுறவு சங்கம் (SAGOSERVE)

iii) தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கி (TAICO Bank)

iv) பிற தொழிற்கூட்டுறவு சங்கங்கள்

இ. ஆய்வகங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்கள்

i) மத்திய மின் சோதனைஆய்வகம் (CETL)

ii) இரசாயன ஆய்வகங்கள்

iii) பயிற்சி நிறுவனங்கள்

ஈ. தன்னாட்சி அமைப்புகள்,

i) தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வசதியாக்கல் நிறுவனம் (FaMeTN)

ii) தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம் (TANCOIR)

iii) தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண்மை ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (TNAPEx)

## 2.1. மாவட்டத் தொழில் மையங்கள்

### 2.1.1 மாவட்டத் தொழில் மையங்களின் அலுவலகங்கள்

மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டத் தொழில்மையங்கள் (DICs) செயல்படுகின்றன. மாவட்டத் தொழில் மையங்கள் ஒவ்வொன்றும் ஒரு பொதுமேலாளர் தலைமையில் இயங்குகிறது. மாவட்டத் தொழில் மையங்கள் தொழில்

முனைவோருக்கு சாத்தியமான திட்டங்களைக் கண்டறிதல், திட்டஅறிக்கைகளைத் தயாரித்தல், பல்வேறு அனுமதிகள் மற்றும் உரிமங்களைப் பெறுவதற்கு உதவுதல் மற்றும் தொழில்முனைவோருக்கு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவியை எளிதாக்குதல் போன்ற பணிகள் மேற்கொள்கின்றன. சுயவேலைவாய்ப்பு திட்டங்கள், முதலீட்டு ஆதரவு திட்டங்கள் மற்றும் பிற முன் முயற்சிகள் ஆகிய மூன்று முக்கிய வகையான திட்டங்கள் மற்றும் முன் முயற்சிகளை செயல்படுத்துகின்றன. ஆணையரகத்தின் நிதி வசதி முன் முயற்சிகள் FaMeTN மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இது குறித்து FaMeTN கொள்கை குறிப்பின் கீழ் கூறப்பட்டுள்ளது.

## 2.2 சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள்

### 2.2.1. புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS)

புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத்திட்டம் (NEEDS) என்ற மாநில நிதியுதவித் திட்டமானது, படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவாகுவதற்கு வழிகாட்டவும் ஆதரவளிக்கவும் உதவுகிறது. பொதுப்பிரிவு பயனாளிகள் 21–35 வயதுக்குள்ளும், சிறப்புப் பிரிவு பயனாளிகள் 21–45 வயதுக்குள்ளும் இருக்க வேண்டும் (SC/ ST/ BC/ MBC/ சிறுபான்மையினர்/ திருநங்கைகள் / மாற்றுத்திறனாளிகள் / முன்னாள் இராணுவத்தினர் மற்றும் மகளிர் ஆகியோர் சிறப்புப்பிரிவினர்). இத்திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச கல்வித்தகுதி பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி ஆகும். பட்டம் / பட்டயப்படிப்பு / ஐடிஐ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் தொழில் பயிற்சி பெற்ற

விண்ணப்பதாரர்களும் இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்க தகுதியானவர் ஆவார். இந்தத்திட்டத்தில் 50% மகளிர் தொழில்முனைவோர் பயன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII–TN) மூலம் 15 நாட்கள் இணைய வழி மூலம் தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டப்பயிற்சி அளிக்கப்படுகிறது. வங்கிகள் / தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) மூலம் நிதியுதவி பெற உதவி செய்வதுடன், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (Tamilnadu Small Industries Development Corporation Limited) தொழிற்பேட்டைகளில் மனைகள் / தொழிற்கூடங்கள் முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு பெறவும், வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் திட்ட மதிப்பீட்டில் 25% (ரூ.75 இலட்சத்திற்கு மிகாமல்), தனிநபர்

அடிப்படையிலான மூலதன மானியமும் முழுக் கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரை 3% வட்டி மானியமும் அரசால் வழங்கப்படுகிறது. பட்டியல் இனத்தோர் (SC/ST)/ மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு திட்ட மதிப்பீட்டில் 10% கூடுதல் மூலதன மானியம் 2021–22 ஆண்டு முதல் அரசால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன் பெற குறைந்தபட்சம் திட்டமதிப்பீடு ரூ.10 இலட்சம் மற்றும் அதிகபட்ச திட்டமதிப்பீடு ரூ.5 கோடி வரை இருக்க வேண்டும். பயனாளியின் பங்களிப்பு திட்ட மதிப்பீட்டில் பொதுப் பிரிவு பயனாளிகளுக்கு 10% மற்றும் சிறப்புப்பிரிவு பயனாளிகளுக்கு 5% ஆகும்.

2022–23 நிதியாண்டில், தனிநபர் அடிப்படையிலான முதலீட்டு மானியம் ரூ.183.66 கோடியுடன் 939 இறுதி கடன் ஒப்பளிப்பு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. தனிநபர் அடிப்படையிலான மானியமாக ரூ.129.79 கோடியும், வட்டி மானியமாக ரூ.10.28 கோடியும் இந்த

காலகட்டத்தில் தகுதியான பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 2.2.2 வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP)

வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) சுயவேலைவாய்ப்பு மூலம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்காக, குறிப்பாக சமூகத்தின் விளிம்பு நிலை பிரிவினர் பயன் பெறும் வண்ணம் 2010–11 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ், படித்த வேலையற்ற இளைஞர்கள் புதிய உற்பத்தி சார்ந்த தொழில் துவங்க ரூ.15 இலட்சம் வரையிலான திட்டங்களுக்கும், சேவைகள் மற்றும் வணிகம் சார்ந்த தொழில்களுக்கு ரூ.5 இலட்சம் வரையிலான திட்டங்களுக்கும் மானியத்துடன் கூடிய கடன் பெற நிதி நிறுவனங்கள் மூலம் உதவி செய்யப்படுகிறது. பயனாளியின் பங்களிப்பு திட்ட மதிப்பீட்டில் பொதுப் பிரிவு

பயனாளிகளுக்கு 10% மற்றும் சிறப்புப்பிரிவு பயனாளிகளுக்கு 5% ஆகும். இத்திட்டத்தின் கீழ் திட்டமதிப்பீட்டில் 25% அரசு மானியமாக (ரூ.2.5 இலட்சம் வரை) வழங்கப்படுகிறது.

எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 18 வயது முடிந்த தனிநபர்கள் இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்க தகுதி உடையவர்கள் ஆவார்கள். பொதுப்பிரிவினருக்கு அதிகபட்ச வயது வரம்பு 35 வயதும், சிறப்புப்பிரிவினருக்கு 45 வயதும் ஆகும்.

2022–23ஆம் நிதியாண்டில், 2,612 பயனாளிகளுக்கு ரூ.2,527.79 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### 2.2.3 பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)

ஒன்றிய அரசின் திட்டமான பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் (PMEGP), உற்பத்தி தொழில்களுக்கு அதிகபட்சம் ரூ.50 இலட்சம் வரையிலும், சேவைத்

தொழில்களுக்கு அதிகபட்சம் ரூ.20 இலட்சம் வரையிலும் திட்டமதிப்பீட்டில் வங்கிகள் மூலம் கடன் உதவி வழங்கப்படுகிறது.

பயனாளியின் பங்களிப்பு பொதுப்பிரிவினருக்கு திட்ட மதிப்பீட்டில் 10% மற்றும் சிறப்புப்பிரிவினருக்கு திட்ட மதிப்பீட்டில் 5% ஆகும். ஒன்றிய அரசானது திட்ட மதிப்பீட்டில் கீழ்க்கண்ட விகிதங்களில் மானியங்களை வழங்குகிறது.

| **பிரிவு** | **திட்டமதிப்பீட்டில் மானிய விழுக்காடு** | |
|---|---|---|
| | **நகர்ப்புறம்** | **ஊரகப்பகுதி** |
| பொதுப்பிரிவு | 15% | 25% |
| சிறப்புப்பிரிவு (பட்டியல் இனம் / பழங்குடியினர் / இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சிறுபான்மையினர் / மகளிர் / முன்னாள் இராணுவத்தினர்/ மாற்றுத்திறனாளிகள் ) | 25% | 35% |

மொத்த திட்டமதிப்பீட்டில் மீதித் தொகை நிதி நிறுவனங்களால் கடனாக வழங்கப்படுகிறது.

2022–23ஆம் ஆண்டில், 3,850 பயனாளிகளுக்கு ரூ.9,638.23 இலட்சம் விளிம்புத்தொகை உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

### 2.2.4. பிரதம மந்திரி உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் (PMFME)

உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்கள் எதிர் கொள்ளும் சவால்களை திறம்பட கையாளவும், நன்கு செயல்படும் குழுக்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புகள் உணவுப்பதப்படுத்தும் நிறுவனங்களை அமைக்கவும், அவற்றை மேம்படுத்துவதற்காகவும், "பிரதம மந்திரி உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம்" ஒன்றிய அரசு 60 விழுக்காடு மற்றும் மாநில அரசு 40 விழுக்காடு நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 5 ஆண்டு காலத்திற்குள் (2024 – 25க்குள்) ரூ.502.67 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் மொத்தம் 12,000 தனிநபர் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய கூறுகள் பின்வருமாறு:

1. **தனி நபர் மற்றும் குழுசார்ந்த நிறுவனங்கள்**

இத்திட்டத்தின் கீழ் 35 விழுக்காடு மானியமாக அதிகபட்சம் ரூ.10 இலட்சம் வரையிலான மானியத் தொகையுடன் கடனுதவி வழங்கப்படுகிறது. தகுதியான திட்ட மதிப்பீட்டில் இயந்திர தளவாடங்கள் மற்றும் தொழில்நுட்ப கட்டுமானங்கள் ஆகியவை அடங்கும். தொழில்நுட்ப கட்டுமானங்களின் மதிப்பு திட்ட மதிப்பீட்டில் 30 விழுக்காட்டிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். தனிநபர், சுய உதவிக்குழுக்கள் (SHGs), உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPOs) மற்றும் உற்பத்தியாளர்

கூட்டுறவு நிறுவனங்கள் (Co–operatives) அரசு சாரா நிறுவனங்கள், தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறலாம்.

2. **பொதுவான உட்கட்டமைப்பு வசதிகள்**

- இத்திட்டத்தின் கீழ் பொது கட்டமைப்பு வசதிகளை உருவாக்க வேளாண் உற்பத்தி அமைப்புகள் / வேளாண் உற்பத்தி நிறுவனங்களுக்கு ரூ.3 கோடி வரையிலான திட்டங்களுக்கு 35 விழுக்காடு மானியத்துடன் இணைந்த கடன் வழங்கப்படுகிறது. தகுதியான திட்ட மதிப்பீட்டில் இயந்திர தளவாடங்கள் மற்றும் தொழில்நுட்ப கட்டுமானங்கள் ஆகியவை அடங்கும். தொழில்நுட்ப கட்டுமானங்களின் மதிப்பு திட்ட மதிப்பீட்டில் 30 விழுக்காட்டிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். பொது கட்டமைப்புகளான உணவுப் பதப்படுத்தும் பொது வசதி மையம், ஆய்வகங்கள்,

அடைகாப்பான்கள், சேமிப்பு கிடங்குகள், குளிர்பதன கிடங்குகள் போன்றவற்றிற்கான திட்ட மதிப்பீடு ரூ.10 கோடிக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

- உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், மகளிர் சுயஉதவி குழுக்கள், கூட்டுறவு அமைப்புகள் மற்றும் அரசு நிறுவனங்கள் இத்திட்டத்தின் மூலம் கடன் உதவி பெற்று பயன் பெறலாம்.

**3. வர்த்தக முத்திரை மற்றும் சந்தைப்படுத்துதல்**

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், சுயஉதவி குழுக்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு பொதுவான வர்த்தக முத்திரை (Brand), தரநிலைப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகியவைக்காக திட்டமதிப்பீட்டில் 50% வரை மானியமாக வழங்கப்படும். திட்டமதிப்பீடு உத்தேசிக்கும் ஆண்டு விற்றுமுதலை விட 3 மடங்கு இருக்கலாம்.

**4. ஆதார மூலதனம்**

சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு சிறு கருவிகள் மற்றும் மூலப்பொருட்கள் வாங்குவதற்காக மானியமாக தலா ரூ.40,000 சுழல் நிதியாக வழங்கப்படுகிறது.

**5. திறன் மேம்பாட்டு பயிற்சி**

இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் அனைத்து பயனாளிகளுக்கும் தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் உணவு தொழில்நுட்பம் சார்ந்த தொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தினை தமிழ்நாட்டில் செயல்படுத்திட தொழில் வணிக ஆணையரகம் மாநில முகமை நிறுவனமாகவும், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்கள் மாவட்ட முகமை அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2022-23 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் 3,722 உணவு பதப்படுத்தும் நிறுவனங்களுக்கு

ரூ.77.05 கோடி மானியத்துடன் கடன் வழங்கப்பட்டுள்ளது.

### 2.2.5 அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின தொழில்முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வண்ணம், 2023–24ஆம் நிதியாண்டிலிருந்து "அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்" என்னும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் இயந்திரங்களையும், கருவிகளையும் கொள்முதல் செய்வதற்காக, 35 விழுக்காடு மூலதன மானியமும், 6 விழுக்காடு வட்டி மானியமும் வழங்கப்படும். 2023–24 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டமதிப்பீடுகளில் இத்திட்டத்திற்காக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.3 முதலீட்டு ஊக்குவிப்பு

### 2.3.1 முதலீட்டு மானியம்

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு முதலீட்டை மேம்படுத்தவும் ஊக்குவிக்கவும் அரசு மூலதன மானியம் வழங்கி வருகிறது. தொழில்துறையில் பின்தங்கிய 254 வட்டாரங்களை அரசு கண்டறிந்து, தமிழகத்தில் சமச்சீரான வளர்ச்சியை உறுதி செய்வதற்காக மூலதன மானியம் வழங்குகிறது. மேலும், வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதிக்கு வாய்ப்புள்ள துறைகளுக்கும், மின்சார வாகனங்கள், பாதுகாப்பு மற்றும் விண்வெளி, தொழில்துறை 4.0 போன்ற புதிய வளர்ந்து வரும் துறைகளுக்கும் அதிக உத்வேகத்தை வழங்க, தமிழ்நாட்டில் அனைத்து பகுதிகளிலும் தொடங்கப்படும் மேற்குறிப்பிட்ட துறைகள் சார்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு சிறப்பு மூலதன மானியம் வழங்கப்படுகிறது. உலகளாவிய போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கு இந்தத்

துறைகளுக்கு மேலும் ஊக்கமளிப்பதாக இந்த மானியம் அமையும்.

திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

- தகுதியான இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 25 விழுக்காடு முதலீட்டு மானியம், அதிகபட்சமாக ரூ.150 இலட்சம் வரை வழங்கப்படும்.
- குறு நிறுவனங்களுக்கு இயந்திர தளவாடங்களின் மதிப்பில் கூடுதலாக 10 விழுக்காடு முதலீட்டு மானியம், அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வரை வழங்கப்படும்.
- மகளிர், ஆதிதிராவிடர் / பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் ஆகியோர் தொழில் முனைவோராக உள்ள தொழில் நிறுவனங்களில் தகுதியான இயந்திர தளவாடங்களின் மீதான முதலீட்டில் 5 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.5 இலட்சம்

வரை கூடுதல் முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

- மாசற்ற மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் சான்றின் பேரில் அந்நிறுவனங்களுக்கு தகுதியான இயந்திர தளவாடங்கள் மீதான முதலீட்டின் மதிப்பில் 25 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.10 இலட்சம் வரை கூடுதல் முதலீட்டு மானியம் வழங்கப்படும்.
- இயங்கி வரும் குறு மற்றும் சிறு தொழில் உற்பத்தி நிறுவனங்கள், விரிவாக்கம்/ பல்வகைப்படுத்துதலால், சிறு அல்லது நடுத்தர தொழில் நிறுவனங்களாக வளர்ச்சி அடைந்தால், அந்நிறுவனங்களின் இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 5 விழுக்காடு கூடுதல் முதலீட்டு மானியம், அதிகபட்சமாக

ரூ.25 இலட்சம் வரை வழங்கப்படும். இது விரிவாக்கம்/ பல்வகைப்படுத்தலுக்கான மானியத்துடன் கூடுதலாக வழங்கப்படும்.

பின்வரும் நிறுவனங்கள் மூலதன மானியத்திற்கு தகுதியுடையவை:

- மாநிலத்தின் எப்பகுதியிலும் நிறுவப்படும், அனைத்து புதிய குறு உற்பத்தி நிறுவனங்கள்
- மாநிலத்தின் தொழில்துறையில் பின்தங்கிய 254 வட்டாரங்களில் ஏதேனும் ஒன்றில் நிறுவப்படும் அனைத்து புதிய சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள்.
- மாநிலத்தின் 388 வட்டாரங்களில் அமைக்கப்படும் புதிய சிறு மற்றும் நடுத்தர வேளாண்சார் உற்பத்தி தொழில் நிறுவனங்கள்.
- **சிறப்பு வகை மூலதன மானியம் (Thrust Sector):** தமிழ்நாட்டின் எப்பகுதியிலும் அமைக்கப்படும் கீழ்க்கண்ட 25 சிறப்பு வகை

சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள்.

1. மின் மற்றும் மின்னணு பொருட்கள்
2. தோல் மற்றும் தோல்பொருட்கள்
3. வாகன உதிரி பாகங்கள்
4. மருந்து மற்றும் மருத்துவ பொருட்கள் மற்றும் ஊட்டச்சத்து மருந்துகள்
5. சூரிய சக்தி பயன்பாட்டு உபகரணங்கள்
6. ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைர நகைகள்
7. மாசுக் கட்டுப்பாட்டு கருவிகள்
8. விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உதிரிபாகங்கள்
9. சிக்கன விலை கட்டுமானப் பொருட்கள்
10. ஆயத்த ஆடைகள்
11. உணவு பதப்படுத்துதல்

12. நெகிழி (ஒரு முறை மட்டும் பயன்படுத்தும் நெகிழி மற்றும் தூக்கி எறியப்படும் நெகிழி நீங்கலாக)
13. இரப்பர் உற்பத்தி நிறுவனங்கள்
14. 'ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழி பொருட்களுக்கு' பதிலான மாற்று பொருட்கள்
15. மின்வாகன பாகங்கள், மின்னேற்ற உற்பத்தி கட்டமைப்புகள் மற்றும் பாகங்கள்.
16. மருத்துவ உபகரணங்கள் கருவிகள் மற்றும் பாகங்கள்
17. தொழில் நுட்ப ஜவுளி மற்றும் மருத்துவ ஜவுளி
18. விண்வெளி, பாதுகாப்பு பயன்பாடுகள் மற்றும் பாகங்கள்
19. மின்னணு அமைப்பு, வடிவமைப்பு மற்றும் உற்பத்தி

20.உயிரி தொழில்நுட்பம்

21. பெட்ரோலிய இரசாயனம் மற்றும் சிறப்பு இரசாயனங்கள்

22. தொழில்கள் 4.0

23. மின்னணு கழிவு மறுசுழற்சி

24. பாரம்பரிய தொழில்கள்

25. வீட்டு உபயோக ஜவுளிகள்

- மேற்கூறிய அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள், தற்போதுள்ள செயல்பாடுகளில் கணிசமான விரிவாக்கம் / பல்வகைப்படுத்தலை மேற்கொள்ளும் நிறுவனங்கள்.

2022-23 ஆம் நிதி ஆண்டில் ரூ.24,117.18 இலட்சம் மூலதன மானியம் 1908 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**2.3.2 கோவிட் உதவி மற்றும் தொழில்முனைவோருக்கான நிவாரணத்திட்டம் (CARE)**

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் கோவிட் – 19 தொற்றுநோயால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் இழப்புகள் மற்றும் சிரமங்களை கருத்தில் கொண்டு, கோவிட்–19 ஆல் பாதிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு பின்வருவனவற்றிற்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்குவதற்காக, கோவிட் உதவி மற்றும் தொழில்முனைவோருக்கான நிவாரணத்திட்டம் (Covid Assistance and Relief to Entrepreneurs - CARE) 12.07.2022 அன்று தொடங்கப்பட்டது:

1. கோவிட்–19 தொற்றுநோயின் கால கட்டத்தில் நிறுவனத்தை மூடியிருந்தால், அந்நிறுவனங்களின் செயல்பாட்டினை மீண்டும்

தொடங்குதல் அல்லது புதிய நிறுவனத்தைத் தொடங்குதல்; அல்லது

2. வணிக உற்பத்தித்திறனை மேம்படுத்த தொழில்நுட்ப மேம்பாடு அல்லது நவீனமயமாக்கலை மேற்கொள்ளும் நிறுவனங்கள்.

CARE–I திட்டத்தின் கீழ், தொழில்முனைவோர் தங்களுடைய நிறுவனங்களின் செயல்பாட்டினை மீண்டும் தொடங்க அல்லது தாங்களாகவோ அல்லது அவர்களின் சட்டப்பூர்வ வாரிசு மூலமாகவோ புதிய நிறுவனத்தைத் தொடங்க மானியத்துடன் இணைந்த கடனுதவி வழங்கப்படுகிறது. ரூ.5 கோடி வரையிலான திட்டங்களுக்கு திட்ட மதிப்பீட்டில் 25 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.25 இலட்சம் வரை மானியம் வழங்கப்படும். இதேபோல், கோவிட் – 19 தொற்றுநோயின் காரணமாக பாதிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள், தொழில்நுட்ப மேம்படுத்தல்/ நவீனமயமாக்கல்

மேற்கொள்ளும்போது இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மதிப்பில் 25 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.25 இலட்சம் வரை மூலதன மானியம் CARE–II திட்டக்கூறுகளின் கீழ் வழங்கப்படுகிறது.

2022–23 ஆம் ஆண்டில் CARE திட்டத்தின் கீழ் 47 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ரூ.415.43 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

## 2.4 பிற முன்னெடுப்புகள்

### 2.4.1 உத்யம் பதிவு

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை முறைப்படுத்துவது ஆணையரகத்தின் ஒரு முக்கிய செயல்பாடாகும். ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் இந்தியாவில் செயல்படும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான பதிவு

சான்றிதழான உத்யம் பதிவினை மேற்கொள்வதற்கு மாவட்ட தொழில் மையங்கள் உதவுகின்றன. உத்யம் என்பது முழுக்க முழுக்க இணையவழி, தன்னார்வ மற்றும் காகிதம் இல்லாத சுய சான்றிதழை அடிப்படையாகக் கொண்ட பதிவு ஆகும்.

உத்யம் பதிவு அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து, 01.07.2020 முதல் 24.03.2023 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாட்டில் 14,92,933 தொழில்முனைவோர்கள் உத்யத்தின் கீழ் பதிவு செய்துள்ளனர். இந்த நிறுவனங்கள் 1,15,18,492 நபர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகின்றன. நாட்டிலேயே உத்யம் பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் எண்ணிக்கையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.

### 2.4.2. குறைந்தழுத்த மின் மானியம்

எந்தவொரு புதிய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனத்திற்கும், முதல் 3 ஆண்டுகள்

முக்கியமானதாக இருக்கும், ஏனெனில் அவை ஏற்கனவே உள்ள நிறுவனங்களுடன் போட்டியிட வேண்டும். இதனை எதிர்கொள்ளும் வகையில், அனைத்து புதிய குறு உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் தொழில் விரிவாக்கம் மேற்கொள்ள நடைமுறையில் உள்ள குறு நிறுவனங்களுக்கு 36 மாதங்களுக்கு குறைந்த அழுத்த மின்கட்டணத்தில் 20 விழுக்காடு குறைந்தழுத்த மின்மானியமாக வழங்கப்படுகிறது.

2022–2023 ஆம் ஆண்டில், 820 குறுந்தொழில் நிறுவனங்களுக்கு ரூ.839.43 இலட்சம் குறைந்தழுத்த மின்மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**2.4.3. ஊதியப்பட்டியல் மானியம் (Pay Roll Subsidy)**

20 ஊழியர்களுக்கு மேல் பணியமர்த்தியுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு, ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி (EPF) க்கு நிறுவனத்தின் பங்களிப்புக்கு ஈடான தொகை ஆண்டொன்றுக்கு ஒரு ஊழியருக்கு அதிக பட்சமாக ரூ.24,000/ வரை ஊதியப்பட்டியல்

மானியமாக (Pay Roll Subsidy) முதல் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

**அடிப்படைத் தகுதிகள்**

- மாநிலத்தின் எப்பகுதியிலும் நிறுவப்படும், அனைத்து புதிய குறுந்தொழில் உற்பத்தி நிறுவனங்கள்
- தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய வட்டாரங்கள் மற்றும் சென்னையிலிருந்து 50 கி.மீ தொலைவிற்கு அப்பால் உள்ள தொழிற்பேட்டைகளில் அமைக்கப்படும் சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள்
- மாநிலத்தின் 388 வட்டாரங்களில் அமைக்கப்படும் புதிய சிறு மற்றும் நடுத்தர வேளாண்சார் மற்றும் உணவு பதப்படுத்துதல் தொழில் நிறுவனங்கள்.

2022-2023 ஆம் ஆண்டில், 76 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ரூ.174.34 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 2.4.4. பின்முனை வட்டி மானியம் (BEIS)

நீடித்த வளர்ச்சிக்கு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அவ்வப்போது தொழில்நுட்பத்தின் அடிப்படையில் தங்களை மேம்படுத்திக் கொள்ளவேண்டும். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் உற்பத்தி நிறுவனங்கள், தொழில் நுட்ப மேம்பாடு மற்றும் நவீனப்படுத்துதலை மேற்கொள்ள ரூ.5 கோடி வரையிலான கடன்களுக்கான வட்டியில் 5 ஆண்டுகளுக்கு 5 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.25.00 இலட்சம் வரை குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு பின்முனை வட்டி மானியம் வழங்கப்படுகிறது. அதேபோன்று, கடன் உத்தரவாத நிதி ஆதாரத்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட ரூ.2 கோடி வரையிலான கடன்களுக்கான வட்டியில் 5 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு 5 ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுகிறது.

2022−2023ஆம் ஆண்டில், 660 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு ரூ.238.46 இலட்சம் பின்முனை வட்டி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### 2.4.5 ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துதல் திட்டம் (PEACE)

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செலவுகளைக் குறைக்கவும் உலகளாவிய சந்தைகளில் போட்டித்தன்மையை மேம்படுத்தவும் தங்களது தயாரிப்பு முறைகளில் ஆற்றல் செயல்திறனை ஊக்குவிக்க வேண்டிய அவசியம் உள்ளது. இத்திட்டத்தின் கீழ், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஆற்றல் தணிக்கை செலவில் 75 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.1 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது. மேலும் ஆற்றல் தணிக்கையின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதை ஊக்கப்படுத்திட ஆற்றல் திறனை மேம்படுத்தும் நோக்கத்திற்காக கொள்முதல் செய்யும் மாற்று இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், பின்

மாற்று பொருத்திகள் (Retrofitting) மற்றும் தொழில்நுட்பத்திற்காக செய்த செலவினங்களில் 50 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு மானியமாக வழங்கப்படுகிறது.

2022–2023ஆம் ஆண்டில், 224 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ரூ.202.99 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**2.4.6. தரச்சான்றிதழ் மானியம் (Q–cert)**

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளின் நம்பகத்தன்மை, நீடித்த உழைப்பு மற்றும் செயல் திறனை மேம்படுத்துவதற்கு தரமேலாண்மை உதவுகிறது. தரமான செயல்முறை மற்றும் பொருட்களை உருவாக்குவதற்கான தரச்சான்றிதழ்களான ISO 9000/ ISO 9001/ ISO 14001/ ISO 22000, HACCP நல்ல சுகாதார நடைமுறைகள் சான்றிதழ்(GHP), நல்ல உற்பத்தி நடைமுறைகள்

சான்றிதழ் (GMP), இந்திய தரச்சான்றிதழ் (BIS), பூஜ்ஜிய குறைபாடு மற்றும் பூஜ்ஜிய விளைவுச் சான்றிதழ் (ZED) அல்லது இந்தியாவில் தகுதிவாய்ந்த நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பன்னாட்டு தரச்சான்றிதழ்களைப் பெறுவதற்கு, மாநிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பதே Q–Cert திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்படி, தரச்சான்றிதழ்களைப் பெறுவதற்காக ஆலோசனை மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிறுவனங்களுக்கு,குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் செலுத்திய கட்டணத்தில் 100 விழுக்காடு தேசிய தரச்சான்றிதழ் பெறுவதற்கு அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரையிலும் மற்றும் சர்வதேச தரச்சான்றிதழ் பெறுவதற்கு அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரையிலும் மானியமாக வழங்கப்படுகிறது. தோல் உற்பத்தித் தரங்களுக்கான தோல் பணிக்குழு (LWG), நிலையான ஜவுளி, தோல் உற்பத்திக்கான OEKO–TEX, 10 பசுமை அளவுருக்களில்

நிறுவனங்களை மதிப்பிடுவதற்கான GreenCo மதிப்பீடு மற்றும் தேயிலை துறைக்கான Trustea ஆகியவை தரச்சான்றிதழ் பட்டியலில் 2022–23ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டுள்ள புதிய சான்றிதழ் வகைகள் ஆகும்.

2022–2023ஆம் ஆண்டில், தரச்சான்றிதழ்களைப் பெற்ற 164 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ரூ.148.37 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### 2.4.7. மூலதன சந்தைகளில் இருந்து நிதி திரட்டுவதற்கான மானியம்

மாநிலத்தில் அதிக வளர்ச்சிக்கு சாத்தியமுள்ள உற்பத்தி மற்றும் சேவை தொழில்களில் ஈடுபட்டுள்ள சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஆரம்ப பொது வெளியீடு (IPOs) மூலம் சமபங்கு மூலதனத்தை திரட்ட SME பங்குச் சந்தையில் பட்டியலிடுவதற்கு செய்யப்பட்ட செலவில் 75 விழுக்காடு அதிகபட்சம் ரூ.30 இலட்சம் வரை அந்நிறுவனங்களுக்கு மானியமாக வழங்கப்படுகிறது.

2022–2023ஆம் ஆண்டில், 3 சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ரூ.67.00 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### 2.4.8. காப்புரிமை பதிவு / வர்த்தக முத்திரை பதிவு / புவிசார் குறியீடுகள் பதிவுக்கான ஊக்கத்தொகை

தொழில்முனைவோர் தங்கள் தயாரிப்புகளுக்கான காப்புரிமைகள், வர்த்தக முத்திரைகள் மற்றும் பிற அறிவுசார் சொத்துரிமைகளைப் பெறுவதை ஊக்குவிப்பதற்காக, தமிழ்நாட்டில் எப்பகுதியிலும் அமைந்துள்ள அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு பதிவு செய்யப்பட்ட காப்புரிமை பெறுவதற்கான செலவினங்களில் 75 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.3 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது. 2022–23ஆம் ஆண்டு முதல், காப்புரிமைப் பதிவுக்கான ஆதாரத்தை மட்டும் சமர்ப்பித்தால், வேறு எந்த ஆவணமும் இல்லாமல்

இந்தத் திட்டத்தின் கீழ் ரூ.1 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. இதேபோல், வர்த்தக முத்திரை மற்றும் பதிவு செய்யப்பட்ட புவிசார் குறியீடுகள் பெறுவதற்கு ஆகும் செலவினங்களில் 50 விழுக்காடு அதிகபட்சம் ரூ.25000 வரை மானியமாக வழங்கப்படுகிறது.

2022-2023ஆம் ஆண்டில், காப்புரிமை மற்றும் வர்த்தக முத்திரை பதிவுக்காக 53 தொழில் நிறுவனங்களுக்கு ரூ.18.05 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### 2.4.9. முத்திரை வரி மற்றும் பதிவு கட்டணங்களை திரும்ப வழங்குதல்

மாநிலம் முழுவதும் சமச்சீரான வளர்ச்சியை உறுதி செய்யும் விதமாக, பின் தங்கிய வட்டாரங்களில் தொடங்கப்படும் அனைத்து புதிய குறு மற்றும் சிறு நிறுவனங்களை நிறுவ தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் வகையில், தொழிற் பயன்பாட்டிற்காக

நிலம் வாங்கும்பட்சத்தில் பதிவுத்துறைக்கு செலுத்தப்பட்ட முத்திரைத் தொகை மற்றும் பதிவுக் கட்டணங்களில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது.

2022-23ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் 38 நிறுவனங்களுக்கு ரூ.9.35 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### 2.4.10 தரக்கட்டுப்பாடு ஆணைகள் (1981, 1997 & 2003) செயல்படுத்துதல்

உள்நாட்டில் பயன்படுத்தப்படும் மின்சாரப் பொருட்களின் தரம் மற்றும் பாதுகாப்பைக் கண்டறிய, அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள சில மின் தயாரிப்புகள் குறிப்பிட்ட தர நிலைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக தரக் கட்டுப்பாட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. வீட்டு மின் உபகரணங்கள் (தரக்கட்டுப்பாடு) ஆணை 1981, எண்ணெய் அழுத்த அடுப்புகள் (தரக்கட்டுப்பாடு) ஆணை 1997 மற்றும் மின் கம்பிகள் (Electric Wires),

கம்பி வடம் (cable), உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு கருவிகள் மற்றும் துணைக்கருவிகள் (தரக்கட்டுப்பாடு) ஆணை 2003 ஆகியவைற்றை செயல்படுத்த மாவட்டத் தொழில் மைய பொதுமேலாளர்கள்/ மண்டல இணை இயக்குநர், சென்னை ஆகியோருக்கு "உரிய அதிகாரம்" வழங்கப்பட்டு தரமான மின் பொருட்களை பயன்படுத்த நுகர்வோர் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**2.4.11 ஒற்றைச் சாளரத் தீர்வு (Single Window Clearance)**

தொழில் தொடங்கி நடத்துவதற்கான வழிமுறைகளையும், சட்டப்பூர்வமான நடவடிக்கைகளையும் எளிதாக்கும் வண்ணம் தமிழ்நாடு வணிக நடைமுறைகள் எளிதாக்கும் சட்டம் மற்றும் விதிகள் 2018ஐ தமிழ்நாடு அரசு இயற்றியுள்ளது. இதனைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் புதிய தொழில் நிறுவனங்களைத் தொடங்கவும், செயல்படும் தொழில் நிறுவனங்களை விரிவுபடுத்தவும், தொழில் நிறுவனங்களைத் தொடர்ந்து நடத்தவும்

சட்டமுறைப்படி தேவையான ஒப்புதல்கள், இசைவுகள் மற்றும் உரிமம் பெறுதல் ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களை ஒரு முனையில் பெறும் வகையில் ஒற்றைச் சாளர தகவு தொடங்கப்பட்டுள்ளது.

இணையதளம் வாயிலாக ஒரு முனையில் 154 சேவைகளை பெறுவதற்கான விண்ணப்பங்களைப் பெற்று அதனை மின்னணு முறையில் சம்மந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி ஒப்புதல்கள் பெறும் வகையில் ஒற்றைச் சாளரத் தகவு இயங்குகிறது. இம்முறையில் வரும் விண்ணப்பங்கள், தொடர்புடைய சம்மந்தப்பட்ட துறைகளை நேரடியாக அணுகாமல், காகிதமற்ற, தொடர்பற்ற முறையில் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் ஒப்புதல் அளிக்கப்பட்டு வெளிப்படைத்தன்மையை உறுதி செய்கிறது. இப்பணியை மேற்கொள்ள அனைத்து மாவட்ட தொழில் மைய அலுவலகங்களில் தொழில் வழிகாட்டி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அனைத்து மாவட்டங்களிலும் இணைய வழியில் விண்ணப்பங்களை பதிவு செய்வதற்கான பயிற்சிகள் "கைடன்ஸ் தமிழ்நாடு (Guidance Tamil Nadu)" நிறுவனத்துடன் இணைந்து நடத்தப்பட்டு வருகிறது. தொழில்களைத் தொடங்குவதற்கான குறிப்பிட்ட உரிமங்கள் / அனுமதிகள் பெறுவதற்காக காத்திருக்காமல் உடனடியாக தொழில் தொடங்கிடும் வகையில் தமிழ்நாடு வணிக நடைமுறைகள் வசதியாக்கும் சட்டத்தை மேலும் எளிதாக்குவதற்கு சட்டத்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான விதிகள் விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. இதன் மூலம் தொழில் முனைவோர் மூன்று வருட காலத்திற்குள் அந்த உரிமங்கள் / அனுமதிகள் பெற்றுக் கொண்டால் போதுமானது.

2022-23ஆம் ஆண்டில், 11,176 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 9,956 விண்ணப்பங்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

## 2.4.12 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் வசதியாக்கக் குழுக்கள் (MSEFC)

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம்–2006இன் படி தமிழ் நாடு அரசு, சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மண்டலங்களில் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான வசதியாக்கக் குழுக்களை அமைத்துள்ளது. இந்த குழுக்கள் குறு மற்றும் சிறு நிறுவனங்களால் விற்பனை செய்யப்பட்ட பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான பட்டியல் தொகையை விரைந்து பெறுவதில் ஏற்படும் சிக்கல்களுக்கு தீர்வு காணும் வகையில் செயல்பட்டு வருகிறது.

2022–23ஆம் நிதியாண்டில், 63 வசதியாக்கக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டு ரூ.142.03 கோடி மதிப்பிலான 836 வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளது.

### 2.4.13 தொழில்முனைவோர்கள் மற்றும் வங்கிகளுக்கான விருதுகள் (Awards)

உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளில் போட்டித்தன்மையுடன் இருக்க ஆக்கப்பூர்வமான மற்றும் புதுமையான நடவடிக்கைகள் மூலம் முன்னேற்றங்களை கண்டுள்ள தமிழ்நாட்டில் உள்ள தொழில்முனைவோர்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன விருதுகள் வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டு, விருதுகளுக்கான தகுதியான விண்ணப்பங்களை பரிந்துரைத்தல், விண்ணப்பித்தல் மற்றும் இறுதிப்பட்டியலிடல் ஆகிய முழு செயல்முறையும் மின்னணு முறையில் செய்யப்பட்டது. 2022–23ஆம் ஆண்டில் பின்வரும் விருதுகள் வழங்கப்பட்டன.

1. மாநில அளவிலான சிறந்த தொழில்முனைவோர் விருது

2. மாநில அளவிலான சிறந்த மகளிர் தொழில்முனைவோர் விருது
3. மாநில அளவிலான வேளாண் சார்ந்த தொழில்களுக்கான சிறந்த தொழில்முனைவோர் விருது
4. மாநில அளவிலான தரம் மற்றும் ஏற்றுமதிக்கான சிறந்த தொழில்முனைவோர் விருது
5. மாநில அளவிலான சிறந்த சிறப்பு பிரிவினர் தொழில்முனைவோர் விருது
6. மாநிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் நிறுவனங்களுக்கு அதிக அளவில் கடன் வழங்கும் முதல் மூன்று வங்கிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் விருது
7. மாவட்ட அளவிலான சிறந்த தொழில்முனைவோர் விருதுகள்

## 2.5. தொழிற்கூட்டுறவுச்சங்கங்கள்

துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் 289 தொழிற்கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன.

தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம், 1983 இன் படி, தொழில் வணிக ஆணையர், இச்சங்கங்களின் மாநில பதிவாளர் ஆவார். இந்த சங்கங்கள், தென்னை நார், தொழிலாளர் ஒப்பந்தம், அச்சிடுதல், தேயிலை, கைவினைப்பொருட்கள், தொழிற்பேட்டைகள் போன்ற பிற வணிகங்களில் ஈடுபட்டுள்ளன. இந்த சங்கங்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவை இண்ட்கோசர்வ், சேகோசர்வ் மற்றும் தாய்கோ வங்கி ஆகியனவாகும். மேலும், பல்வேறு மருந்து தயாரிக்கும் நிறுவனங்களுக்கு பரிசோதனை வசதிகளை வழங்கும் சென்னை தொழிற்கூட்டுறவு பகுப்பாய்வகம் (MICAL) மற்றும் பரம்பரையாக கொண்டுள்ள பாரம்பரியத் திறன்களைப் பயன்படுத்தி பாம்புகளிடமிருந்து விஷத்தைப் பிரித்தெடுக்கும் நபர்களை உறுப்பினர்களாகக் கொண்ட, செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள இருளர் பாம்பு பிடிப்போர் தொழிற்கூட்டுறவு சங்கம் போன்ற பிற சிறப்புச் சங்கங்களும் தொழில் ஆணையர் மற்றும் தொழில்

வணிக இயக்குநர் அவர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன. தொழிற்கூட்டுறவு சங்கங்களின் விவரம் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன:

| வ. .எண் | வணிகம் | சங்கங்களின் எண்ணிக்கை | ஆண்டு விற்றுமுதல் (ரூ. கோடியில்.) |
|---|---|---|---|
| 1 | சேகோ | 2 | 486.25 |
| 2 | தொழிலாளர் ஒப்பந்த சேவை | 31 | 314.28 |
| 3 | தேயிலை | 18 | 140.11 |
| 4 | அச்சு | 30 | 45.56 |
| 5 | கயிறு | 64 | 25.64 |
| 6 | ஆட்டோ மற்றும் டாக்ஸி | 23 | 22.54 |
| 7 | தையல் | 14 | 3.06 |
| 8 | பொறியியல் | 16 | 12.04 |
| 9 | பாலிதீன் | 5 | 2.28 |
| 10 | தீப்பெட்டி | 6 | 2.52 |
| 11 | கைவினைப்பொருட்கள் | 14 | 2.54 |
| 12 | உலோகம் | 8 | 1.55 |
| 13 | செங்கல் | 7 | 1.35 |
| 14 | தொழிற்பேட்டைகள் | 11 | 0.89 |
| 15 | தோல் | 2 | 0.07 |
| 16 | மற்றவை | 38 | 46.80 |
| | **மொத்தம்** | 289 | 1107.48 |

2022–23ஆம் ஆண்டில், தொழிற்கூட்டுறவு சங்கங்கள் ரூ.1107.48 கோடி விற்பனையை எய்துள்ளது. 289 சங்கங்களில், 228 சங்கங்கள்

இலாபம் ஈட்டுகின்றன. இந்த ஆண்டில் அனைத்து சங்கங்களிலும் உள்ள 10,027 தொழிலாளர்களுக்கு ஊதியமாக ரூ.296.65 கோடி வழங்கப்பட்டுள்ளது.

## 2.6 இன்ட்கோசர்வ்

25,000க்கும் மேற்பட்ட உறுப்பினர்களுடன் 16 தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளை (ICTFs) உள்ளடக்கி, 1961ஆம் ஆண்டு நிறுவப்பட்ட INDCOSERVE என பிரபலமாக அறியப்படும், தமிழ்நாடு சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் கூட்டமைப்பு நாட்டின் மிகப்பெரிய தேயிலை கூட்டுறவு அமைப்பாகும். இண்ட்கோசர்வ் என்பது, இந்தியாவில் "நியாயமான வர்த்தக" (Fair Trade) சான்றிதழைப் பெற்ற முதல் தேயிலை கூட்டுறவு நிறுவனமாகும். நம்பகமான, வெளிப்படையான மற்றும் அளவிடக்கூடிய அளவுகோல்களின்படி உற்பத்தியான தேயிலையை, தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் வாங்குபவர்கள் பெறுவதற்கு ஏற்ற வகையில், தேயிலை தொழிலுக்கான நிலைத்தன்மை குறியீடு

மற்றும் சரிபார்ப்பு முறையான "Trustea" சான்றிதழை மூன்று தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் பெற்றுள்ளன.

இண்ட்கோசர்வ் ஆனது குன்னூர், துடியலூர் (கோயம்புத்தூர்) மற்றும் கொச்சி (கேரளா) ஆகிய இடங்களில் உள்ள தன்னுடைய கிடங்குகள் மூலம், தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் மற்றும் டான்டீ மூலம் உற்பத்தி செய்யப்படும் தேயிலைக்கு, கிடங்கு வசதிகளை வழங்கி, அதன் மூலம் ரூ.0.93 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. 2022-23ஆம் ஆண்டில், தமிழ்நாடு முழுவதும் உள்ள பொது விநியோகத்திட்ட கடைகளுக்கு, இண்ட்கோசர்வ் 2161 மெட்ரிக் டன் தேயிலைத் தூளை வழங்கி, அதன் மூலம் ரூ.42.26 கோடி வருமானம் ஈட்டி, ரூ.3.48 கோடி இலாபம் அடைந்துள்ளது.

இந்நிறுவனமானது 2021-22இல் "ஊட்டி டீ"யின் விற்பனை வருமானத்தில்

ரூ.6.40 கோடியை 16 தேயிலை தொழிற்சாலைகளின் உறுப்பினர்களான சிறு தேயிலை விவசாயிகள் பயன்பெறும் வகையில் மானியமாக வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு சிறு தேயிலை விவசாயிகள் பயன்பெற 2022–2023ஆம் ஆண்டில் ரூ.5 கோடி மானியமாக வழங்கியுள்ளது.

சுற்றுச்சூழலுக்கு உகந்த தூய்மையான ஆற்றலை நோக்கிய முன்முயற்சியாக, இண்ட்கோசர்வானது, கார்பன் நியூட்ரல் தேயிலை தூளை உற்பத்தி செய்ய முன்வந்து, இதற்காக, கைகாட்டி இண்ட்கோ தேயிலை தொழிற்சாலையில் 250 KWA கிரிட் இணைக்கப்பட்ட மேற்கூரை சூரிய ஒளி சக்தி நிலையத்தை நிறுவுவதற்கு, சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ரூ.2.36 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஜூன் 2023க்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இண்ட்கோசர்வ், சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.3.29 கோடி நிதியுதவியுடன், ஊட்டி தேயிலை உற்பத்தியை அதிகரிக்க நவீனமயமாக்கப்பட்ட இயந்திரங்களுடன், புதிய தேயிலை பிளன்டிங் மற்றும் பேக்கிங் பிரிவை நிறுவுகிறது. இண்ட்கோசர்வானது, நபார்டு வங்கி நிதி உதவியுடன் ரூ.67.74 கோடி திட்ட மதிப்பீட்டில், அதன் 15 தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளை, இரண்டு கட்டங்களாக நவீனமயமாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

மின்னணு ஏலம் மூலம் தேயிலை விற்பனையில் வெளிப்படைத்தன்மையை வழங்கவும், இடைத்தரகர்களை ஒழிக்கவும், சிறந்த தேயிலை விலையை உறுதி செய்யவும், தேயிலை உற்பத்தியாளர்கள் சேவை தொழிற்கூட்டுறவு சங்கம் (டீசர்வ்) 2003 முதல் செயல்பட்டு வருகிறது. டீசர்வ் 2022−2023ஆம் ஆண்டில், ஏலத்தில் ரூ.53.21 கோடி மதிப்பிலான 6036 மெட்ரிக் டன் தேயிலை தூளை

விற்பனை செய்து ரூ.20 இலட்சம் நிகர லாபம் ஈட்டியுள்ளது.

2022-23ஆம் ஆண்டில், 16 தேயிலை தொழிற்சாலைகள், தங்கள் உறுப்பினர்களிடமிருந்து 40148 மெட்ரிக் டன் பசுந்தேயிலையை கொள்முதல் செய்து, 10549 மெட்ரிக் டன் தேயிலை உற்பத்தி செய்து ரூ.94.63 கோடிக்கு விற்பனை எய்தியுள்ளன.

**2.7 சேகோசர்வ்**

1981ஆம் ஆண்டு நிறுவப்பட்ட, "சேகோசர்வ்" எனப்படும் சேலம் ஸ்டார்ச் மற்றும் சேகோ உற்பத்தியாளர்கள் சேவை தொழிற்கூட்டுறவு சங்கம், மரவள்ளிக்கிழங்கு பயிரிடும் மாவட்டங்களில் உள்ள சேகோ மற்றும் ஸ்டார்ச் உற்பத்தியாளர்கள், நேரடியாக, தங்கள் தயாரிப்புகளை சந்தைப்படுத்த உதவுகிறது. இதன் மூலம், இடைத்தரகர்களை நீக்கி, அவர்களுக்கு நியாயமான மற்றும் இலாபகரமான விலையை உறுதி செய்கிறது. சேகோசர்வ், அதன் உறுப்பினர்களுக்கு,

நிதி உதவியை எளிதாக்கி, கிடங்கு வசதிகளையும் ஏற்படுத்தி தருகிறது.

ஜவ்வரிசியில் கலப்படத்தை தடுத்திடவும், இரசாயனமில்லாத ஜவ்வரிசி தயாரிப்பினை ஊக்குவிப்பதற்காகவும், நல்ல உற்பத்தி நடைமுறைகள் மற்றும் மரவள்ளிக்கிழங்கு ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியில் தீங்கு விளைவிக்கும் பொருட்களை பகுப்பாய்தல் மற்றும் சிக்கலான கட்டுப்பாட்டு மையம் (HACCP)க்கான ஒரு நிலைத்த செயல்பாட்டு முறையை உருவாக்கிட, 09.11.2022 அன்று சேகோசர்வ் மற்றும் ICAR– CTCRI (இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகம் – மத்திய கிழங்கு பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம், திருவனந்தபுரம்) ஆகியவற்றுக்கு இடையே, ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தானது. இதனை ரூ.29.50 இலட்சம் திட்டமதிப்பீட்டில் செயல்படுத்திட கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிதியின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது. நிலையான இயக்க முறை

உருவாக்கப்பட்டு (SOP) மற்றும் HACCP சான்றிதழ் பெறப்பட்ட பின், இரசாயனமற்ற ஜவ்வரிசிக்கு, ஒரு தனி வர்த்தக முத்திரை உருவாக்கப்படும். இரசாயனம் இல்லாத ஜவ்வரிசியின், புதிய வர்த்தக முத்திரை தேவையை பூர்த்தி செய்ய, ரூ.4 கோடி செலவில் சேகோசர்வ் சோதனை ஆய்வகத்தை மேம்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. சேகோசர்வின் சேவைகளைப் பெறுவதற்கு, மரவள்ளிக்கிழங்கு விவசாயிகளை அதன் இணை உறுப்பினர்களாக சேர்க்க சேகோசர்வ் முயற்சிகளை எடுத்து வருகிறது.

ஜவ்வரிசியில் கலப்படத்தைத் தடுக்க, மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் மரவள்ளிக்கிழங்கு முக்கிய வணிகப் பயிராகப் பயிரிடப்படும் 7 மாவட்டங்களில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 2022-23ஆம் ஆண்டில், சேகோசர்வ் ரூ.485.95 கோடி விற்பனை எய்தி ரூ.3.80 கோடி நிகர இலாபத்தை ஈட்டியுள்ளது.

## 2.8 தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கி (TAICO BANK)

தொழிற்கூட்டுறவு சங்கங்களுக்கு போதுமான நிதி வசதிகளை வழங்குவதற்காக, தாய்கோ வங்கி என பிரபலமாக அறியப்படும் தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கி, 1961ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தாய்கோ வங்கி, தனிநபர்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்கு, அனைத்து வகையான கடன்கள் வழங்கி, வங்கிச் செயல்பாடுகளை விரிவுபடுத்தியது. இதனுடன், பொதுமக்களிடமிருந்து வைப்புகளை ஏற்றுக்கொள்வதுடன், அவர்களுக்கான நடப்புக் கணக்குகளையும், சேமிப்புக் கணக்குகளையும் இயக்குகிறது.

தாய்கோ வங்கிக்கு மாநிலம் முழுவதும் 47 கிளைகள் உள்ளன. அனைத்து கிளைகளும், மைய வங்கியியல் தீர்வில் (Core Banking Solution) உள்ளன. RTGS, NEFT மற்றும் மொபைல் வங்கி சேவைகளும் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், தாய்கோ வங்கி

ரூ.1069.70 கோடி அளவுக்கு வைப்புகளைத் திரட்டி, கடன்கள் மற்றும் முன்பணமாக ரூ.564.27 கோடிக்கு வழங்கி, 2022–23ஆம் ஆண்டில் ரூ.10.37 கோடி நிகர லாபத்தை **ஈட்டியுள்ளது (தணிக்கை செய்யப்படாதது)**.

தாய்கோ வங்கி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதில் தனிக்கவனம் செலுத்துகிறது. மேலும், தாய்கோ வங்கியின் FLY MSME திட்டத்தின் மூலம் சிட்கோ தொழிற்பேட்டை பயனாளிகளுக்கு நிதி உதவி வழங்குவதற்கு தாய்கோ வங்கிக்கும் **தமிழ்நாடு சிட்கோவிற்கும்** இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தானது. தாய்கோ வங்கி குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு, தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டத்தின் (TNCGS) கீழ், கடன்களையும் வழங்குகிறது.

வியாசர்பாடி, நெய்வேலி மற்றும் சேப்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள தாய்கோ வங்கிக்

கிளைகளை நவீனமயமாக்கும் பணி, தற்போது நடைபெற்று வருகிறது. வங்கி வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்படும் நகைகளின் தூய்மை மற்றும் நம்பகத்தன்மையைக் கண்டறிய, கேரட்டோமீட்டர்கள் வாங்கப்பட்டு, தாய்கோ வங்கியின் 6 கிளைகளில் நிறுவப்பட்டுள்ளன.

## 2.9 சென்னை தொழிற்கூட்டுறவு பகுப்பாய்வகம் (MICAL), சென்னை

அலோபதி, ஆயுர்வேதா, சித்தா மற்றும் யுனானி மருந்து உற்பத்தியாளர்களால் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் மற்றும் தயாரிக்கப்படும் மருந்துப்பொருட்களின், பகுப்பாய்வு மற்றும் சோதனைகளை மேற்கொள்வதற்காகவும், அவை பரிந்துரைக்கப்பட்ட தரங்களுக்கு பொருந்தியுள்ளனவா? எனச் சான்றளிக்கவும், கூட்டுறவு அமைப்பில் நிறுவப்பட்ட ஒரு ஆய்வகம், சென்னை தொழிற்கூட்டுறவு பகுப்பாய்வகம் லிமிடெட் (மைக்கால்) ஆகும். இதன் தலைமையகம்

சென்னையில் உள்ளது, மேலும் இதன் ISO சான்றளிக்கப்பட்ட கிளை ஒன்று குன்னூரில் உள்ளது. மைக்கால் 2022–23இல் 3,328 மாதிரிகளை பரிசோதித்து, ரூ.23.07 இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளது.

ரூ.95 இலட்சம் செலவில், மைக்கால் ஆய்வகத்தின் கட்டடம் புதுப்பிக்கப்பட்டு, புதிய இயந்திரங்கள் மற்றும் பகுப்பாய்வுக் கருவிகள் நிறுவப்பட்டு, ஆய்வகம் நவீனமயமாக்கப்பட்டுள்ளது.

**2.10. ஆய்வகங்கள்**

**2.10.1 மத்திய மின்பொருள் சோதனைக் கூடம், காக்களூர்**

திருவள்ளூர் மாவட்டம், காக்களூரில் அமைந்துள்ள மத்திய மின்பொருள் சோதனைக் கூடமானது 1973ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு இந்திய தர நிர்ணய அளவீட்டின்படி பல்வேறு வகையான மின் பொருட்களை சோதனை செய்யும் வசதிகளை அளித்து வருகிறது. இச்சோதனைக்கூடமானது, சோதனை

மற்றும் அளவொப்புமை ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார குழுமம் (NABL) மற்றும் இந்திய தர நிர்ணய நிறுவனம் (BIS) ஆகியவற்றின் அங்கீகாரம் பெற்றுள்ளது. இந்த அங்கீகார நிலையை தொடர்ந்து பேணுவதற்கு மத்திய மின்பொருள் சோதனைக் கூடமானது அவ்வப்போது பலப்படுத்தப்பட்டு வருகின்றது

மத்திய மின்பொருள் சோதனைக் கூடத்தில், மின் பொருட்களைச் சோதனை செய்வதற்கான இரண்டு நாள் பயிற்சியும் வழங்கப்படுகிறது. காக்களூரில் உள்ள மத்திய மின்பொருள் சோதனைக் கூடத்தால் வழங்கப்பட்ட பயிற்சியின் மூலம் இதுவரை பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த 468 பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

சிறப்பு வகை ஆய்வக கட்டடம் கட்டப்பட்டது மற்றும் ஜெர்மனியில் இருந்து வாங்கப்பட்ட சிறப்பு உபகரணங்கள் ஆகியவை மொத்தம் ரூ.6.95 கோடி செலவில் எல்.இ.டி. விளக்குகள் மற்றும் பொருத்திகள்

சோதனை 2022இல் சேர்க்கப்பட்டன. மத்திய மின் சோதனைக் கூடத்தின் வசதிகளை மேலும் அதிகரிக்கும் பொருட்டு ரூ.1.32 கோடி மதிப்பிலான உபகரணங்கள் சேர்க்கப்பட்டுள்ளது. மத்திய மின்பொருள் சோதனை கூடமானது 2022–23இல் 1874 மாதிரிகளை பரிசோதனை செய்து ரூ.48.26 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

### 2.10.2 இரசாயன ஆய்வகங்கள்

தொழில் வணிக ஆணையகரத்தின் கீழ் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் அமைந்துள்ள 5 மண்டல பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், பொதுப்பணித்துறை மற்றும் இரயில்வே உள்ளிட்ட அரசுத்துறைகள் மற்றும் தனியார் வாடிக்கையாளர்களின் மூலப்பொருட்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட பொருட்களை சோதனை செய்வதற்கான சோதனை வசதிகளை

வழங்குகின்றன. இந்த ஆய்வகங்களில் அதிநுட்ப செயற்கருவிகளான ஆப்டிகல் எமிஷன் ஸ்பெக்ட்ரோமீட்டர், அட்டாமிக் அப்சார்ப்ஷன் ஸ்பெக்ட்ரோமீட்டர் மற்றும் இதர செயற்கருவிகளைக் கொண்டு கட்டுமானத் தொழில்களில் பயன்படுத்தப்படும் பொருட்களான இரும்புக்கம்பிகள், சிமெண்ட், தண்ணீர், மணல், கருங்கல் ஜல்லி, பிட்டுமின், மண் போன்ற பொருட்களை சோதிக்கும் பொருட்டு இந்த செயற்கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## 2.11. தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்கள்

பின்வரும் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனங்கள் ஆணையரகத்தின் கீழ் செயல்படுகின்றன:

I. பீங்கான் தொழில் நுட்பவியலில் மூன்றரை ஆண்டு பட்டயப் பயிற்சி வழங்கும் பீங்கான் தொழில் நுட்பக்கல்லூரி, விருத்தாச்சலம்

II. கருவி, அச்சு பொறியியல், குளிர்சாதனம் மற்றும் காற்று பதன பொறியியலில்

மூன்றாண்டு பட்டயப் பயிற்சி வழங்கும் அரசு தொழில் நுட்ப பயிற்சி மையம், கிண்டி, சென்னை

III. கருவி மற்றும் அச்சு பொறியியலில் மூன்றாண்டு பட்டயப்பயிற்சி வழங்கும் கருவி பொறியியல் பயிலகம் திண்டுக்கல்,

IV. கண்ணாடி ஊதும் செயல்முறை பயிற்சி வழங்கும் அரசினர் அறிவியல் கண்ணாடி கருவிகள் பயிற்சி மையம், கோயம்புத்தூர்

V. ஆய்வக கண்ணாடி பொருட்களை தயாரித்து வரும் அரசு அறிவியல் கண்ணாடி கருவிகள் உற்பத்தி மையம், கோயம்புத்தூர்.

## 2.12. குறுந்தொழில் குழும மேம்பாட்டுத் திட்டம்

மாநிலம் முழுவதும் உள்ள பல்வேறு துறை சார்ந்த குறுந்தொழில் குழுமங்களுக்கு பொது வசதி மையங்களை ஏற்படுத்திட 2022-23ஆம் ஆண்டில் குறுந்தொழில் குழும மேம்பாட்டுத் திட்டம் அரசால் தொடங்கப்பட்டு தொழில் ஆணையரகம் மற்றும்

சிட்கோ நிறுவனத்தினால் சேர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறுந்தொழில் குழும மேம்பாட்டுத் திட்டம் கிராமப்புற வேலைவாய்ப்பை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல், பாலினம் மற்றும் சமூக வளர்ச்சி குறியீட்டையும் மேம்படுத்த உதவுகிறது. காஞ்சிபுரம் நரிக்குறவர்கள் பாசிமணி குழுமம், கோவில்பட்டி பார்வை குன்றியோர் குழுமம் மற்றும் தூத்துக்குடி ஆகாயதாமரை குழுமம் போன்ற குறு குழுமங்கள் முற்றிலும் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய வகுப்பினரை உள்ளடக்கியது.

இதுவரை ரூ.138.14 கோடி திட்ட மதிப்பீட்டில் 25 குறு குழுமங்களுக்கான பிரேரணைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பல்வேறு நிலைகளில் செயல்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் விவரங்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

(ரூ. கோடியில்)

| வ. எண். | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | அரசு மானியம் |
|---|---|---|---|
| 1 | பொள்ளாச்சி கயிறு குழுமம், கோயம்புத்தூர் மாவட்டம் | 8.80 | 6.60 |
| 2 | உடுமலைப்பேட்டை கயிறு குழுமம், திருப்பூர் மாவட்டம் | 6.92 | 6.23 |
| 3 | அலுமினிய அச்சு வார்ப்பு குழுமம், கோயம்புத்தூர் மாவட்டம் | 5.73 | 4.30 |
| 4 | முந்திரி பதப்படுத்துதல் குழுமம், பன்ருட்டி, கடலூர் மாவட்டம் | 2.16 | 1.81 |
| 5 | விளாச்சேரி பொம்மை குழுமம், மதுரை மாவட்டம் | 4.03 | 3.63 |
| 6 | தூத்துக்குடி ஆகாயத் தாமரை குழுமம், தூத்துக்குடி மாவட்டம் | 2.02 | 2.02 |

| | | | |
|---|---|---|---|
| 7 | மகளிர் நெசவாளர் குழுமம், இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம் | 3.77 | 3.39 |
| 8 | நரிக்குறவர் பாசி மணி குழுமம், காஞ்சிபுரம் மாவட்டம் | 1.80 | 1.80 |
| 9 | அகர்பத்தி குழுமம், திருப்பத்தூர் மாவட்டம் | 7.50 | 6.03 |
| 10 | பேராவூரணி கயிறு குழுமம், தஞ்சாவூர் மாவட்டம் | 7.29 | 5.84 |
| 11 | இராமநாதபுரம் நகை உற்பத்தியாளர் கூட்டமைப்பு குழுமம், இராமநாதபுரம் மாவட்டம் | 6.71 | 6.08 |
| 12 | அமராவதி காகித அட்டை குழுமம், கரூர் மாவட்டம் | 7.03 | 5.29 |
| 13 | சேலம் நுண்ணூட்ட சத்து குழுமம், சேலம் மாவட்டம் | 7.14 | 5.35 |
| 14 | மஞ்சள் பதப்படுத்துதல் குழுமம், ஈரோடு மாவட்டம் | 7.39 | 5.54 |

| | | | |
|---|---|---|---|
| 15 | உப்பு குழுமம், தூத்துக்குடி மாவட்டம் | 4.26 | 3.84 |
| 16 | இணைய வலை அச்சுக்குழுமம், மதுரை மாவட்டம் | 6.53 | 4.89 |
| 17 | மகளிர் ஆயத்த ஆடை குழுமம், மதுரை மாவட்டம் | 3.91 | 3.52 |
| 18 | மகளிர் உணவு பல்பொருள் குழுமம், கன்னியாகுமரி மாவட்டம் | 6.65 | 5.99 |
| 19 | உணவு பதப்படுத்துதல் குழுமம், நாமக்கல் | 8.20 | 6.56 |
| 20 | கோவில்பட்டி கண் பார்வையற்றோர் ஊதுபத்தி, பினாயில் குறுந்தொழில் குழுமம், தூத்துக்குடி மாவட்டம் | 0.35 | 0.35 |
| 21 | நெல்லை சமையல் பாத்திர குழுமம், திருநெல்வேலி மாவட்டம் | 6.05 | 4.55 |
| 22 | பவானி ஜமுக்காளம் குழுமம், ஈரோடு மாவட்டம் | 6.89 | 6.20 |

| | | | |
|---|---|---|---|
| 23 | நவீன பல வண்ண அச்சுக்குழுமம், விழுப்புரம் மாவட்டம் | 6.66 | 4.99 |
| 24 | நவீன புகைப்படக் குழுமம், செங்கல்பட்டு மாவட்டம் | 6.25 | 4.69 |
| 25 | தம்மம்பட்டி மரவேலைப்பாடு குழுமம், சேலம் மாவட்டம் | 4.10 | 3.69 |
| | **மொத்தம்** | **138.14** | **113.18** |

## 2.13. தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம் (TANCOIR)

தமிழ்நாட்டில் தென்னை நார் தொழிலை மேம்படுத்தவும் நிலவளைப் பொருட்கள் (ஜியோ டெக்ஸ்டைல்ஸ்) மற்றும் தென்னை நார் துகள் கட்டி (Coir Pith) போன்ற மதிப்பு கூட்டப்பட்ட தென்னை நார் சார்ந்த பொருட்களை உள்நாடு மற்றும் வெளிநாடு சந்தைகளில் பிரபலப்படுத்தவும் கோயம்புத்தூரில் இலாபநோக்கமற்ற நிறுவனமாக தமிழ்நாடு தென்னை கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனத்தை (TANCOIR)

அரசு அமைத்துள்ளது. முதற்கட்டமாக ரூ.5 கோடி விதை மூலதனமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு 25.08.22 அன்று கோயம்புத்தூரில் தொடங்கி வைக்கப்பட்டது.

TANCOIR 5 தென்னை நார் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் குழுமங்கள் செயலாக்கப்படுத்துவதன் மூலம் தென்னை நார் தொழிலுக்கு புத்துயிர் அளிக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. தென்னை நார் துறைக்கான CARE மற்றும் TNCGS திட்டங்கள் உட்பட சிறப்பு நிதியுதவித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

ஈரோடு மாவட்டம் சீனாபுரம் கிராமத்தில் 1200 அடி அளவுள்ள குளத்திற்கு நிலவளைப் பொருட்கள் (ஜியோ டெக்ஸ்டைல்ஸ்) பதிக்கும் பணி ஊரக வளர்ச்சித்துறை மூலம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. தேனி மாவட்டம், மஞ்சளார் அணையின் சரிவில் 49,000 சதுர மீட்டர் பரப்பளவில் பொதுப்பணித்துறையின் மூலம் நிலவளைப்

பொருட்கள் (ஜியோ டெக்ஸ்டைல்ஸ்) பதிக்கும் பணி நிறைவுற்றது.

தமிழ்நாடு தென்னை கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம் மூலம் தென்னை நார் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு சந்தை வாய்ப்பினை மேம்படுத்த வாங்குவோர் விற்போர் சந்திப்பு நடத்துதல், தென்னை நார் துகள் கொண்டு மாடி தோட்டங்கள் அமைக்க முயற்சி மேற்கொள்ளுதல், ஏற்றுமதி சந்தையினை மேம்படுத்த வெளிநாட்டு சந்தை கண்காட்சிகளில் நிறுவனங்கள் பங்கு கொள்ள வழி வகுத்தல், மதிப்புக்கூட்டு பொருட்கள் உற்பத்தி மேற்கொள்ளும் குறு குழுமங்கள் துவக்க ஏற்பாடு செய்தல், நிறுவனங்கள் உற்பத்தி பொருட்களை காட்சிப்படுத்த உதவுதல், புதிய மூலதனம் திரட்டுதல் போன்ற பணிகளையும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.14. தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் (TNAPEx)

தமிழ்நாடு அரசு 2022-23ஆம் ஆண்டில் உணவு பதப்படுத்துதல் தொடர்பான திட்டங்கள் மற்றும் நிறுவனங்களை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையிலிருந்து குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறைக்கு மாற்றியுள்ளது.

உணவு பதப்படுத்துதல் மற்றும் விவசாய ஏற்றுமதி துறைகளுக்கு புத்துயிர் அளிக்கவும், பண்ணை பொருட்களுக்கு மதிப்புகூட்டுதல் மற்றும் ஏற்றுமதிக்கு வழிவகுக்கும் மதிப்புசங்கிலிகளை உருவாக்குதல் போன்ற உத்வேகத்தை அளிக்க, தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண்மை ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் (TNAPEx) இலாபநோக்கமற்ற நிறுவனமாக உருவாக்கப்பட்டுள்ளது. துறை மாற்றத்திற்குப் பிறகு, தொழில்துறை ஆணையர் அதன் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிறுவனத்திற்கு 21

அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணியமர்த்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. டெல்டா மாவட்டங்களை உள்ளடக்கிய "வேளாண் தொழில் பெருவழித்தடம்" திட்டஅறிக்கையில் குறிப்பிட்டுள்ள திட்டங்களை இந்நிறுவனம் செயல்படுத்தும். இதற்கான விரிவான செயல் திட்டம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## 2.15. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலட்சியங்கள் (SDGs)

ஐக்கிய நாடுகள் சபையின் 17 நீடித்த நிலையான இலட்சியங்கள், சமூக, பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பரிமாணங்களில் 169 இலக்குகளைக் கொண்டுள்ளது. இந்த நீடித்த நிலையான வளர்ச்சிக்கு குறு. சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். குறு. சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுடன் மக்களை வறுமையில் இருந்து மீட்டெடுத்து, சமத்துவமின்மையைக் குறைக்கின்றன.

இந்நிறுவனங்கள் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கி சமூகம் மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்துகிறது. பல குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மகளிர் மற்றும் பின்தங்கிய வகுப்பினரால் நடத்தப்படுகிறது. இந்நிறுவனங்கள் அதிக ஆற்றல் திறன் கொண்டு சமச்சீர் வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன.

நீடித்த நிலையான இலட்சியம் 8 ஆனது உள்ளடக்கிய நிலையான பொருளாதார வளர்ச்சி, முழு மற்றும் திறன் வாய்ந்த வேலைவாய்ப்பு மற்றும் கண்ணியமான வேலைவாய்ப்பினைக் கொண்டதாகும்.

கீழ்க்கண்ட குறியீடுகள் மூலம் நீடித்த நிலையான இலட்சியம் 8 இன் செயல்திறன் கணக்கிடப்படுகிறது.

- உத்யம் பதிவு செய்யப்பட்ட குறு. சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை

- ஒன்றிய அரசால் நிதி உதவி வழங்கப்பட்ட குறு. சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை
- தமிழக அரசால் நிதி உதவி வழங்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை

## 3. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (தமிழ்நாடு சிட்கோ)

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (தமிழ்நாடு சிட்கோ) மாநிலத்தில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு பல உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய தொழில்மனைகள் மற்றும் வணிக பயன்பாடு மனைகளை வழங்கி உதவும் முக்கிய நோக்கத்துடன் தமிழ்நாடு அரசால் 23.03.1970இல் நிறுவப்பட்டது. புதிய தொழிற்பேட்டைகள் மற்றும் தொழில் முனைவோர்கள் உடனடியாக தொழில் துவங்க ஏதுவான வசதிகளை உள்ளடக்கிய அடுக்குமாடி தொழில் வளாகங்கள் உருவாக்குதல், இயங்கிவரும் தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி பராமரித்தல், தனியார் தொழிற்பேட்டைகள் உருவாக்க உதவி செய்தல் மற்றும் அவற்றை நகருக்கு வெளியே மாற்றி அமைத்தலில் உதவுதல், பொது வசதி மையங்கள் மற்றும் பொது உற்பத்தி

உட்கட்டமைப்பு மையங்களை அமைப்பதனை ஊக்குவித்தலின் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்களுக்கான குழுமங்களை மேம்படுத்துதல், புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்காக பணியாளர்கள் தங்கும் விடுதி உருவாக்குதல் ஆகியவை தமிழ்நாடு சிட்கோவின் முக்கிய செயல்பாடுகளாகும்.

## 3.1 தொழிற்பேட்டைகள்

மாநிலத்தின் பல்வேறு இடங்களில், 8453.13 ஏக்கரில் 14983 மேம்படுத்தப்பட்ட தொழில்மனைகள் / தொழிற்கூடங்கள் மட்டுமல்லாது கிண்டி, அம்பத்தூர் மற்றும் திருமழிசை தொழிற்பேட்டைகளில் உள்ள அடுக்குமாடி தொழில் வளாகங்களுடன் 41 அரசு தொழிற்பேட்டைகள் மற்றும் 86 தமிழ்நாடு சிட்கோ தொழிற்பேட்டைகள் ஆகியவற்றின் செயல்பாட்டினை தமிழ்நாடு சிட்கோ கண்காணித்து வருகிறது. மேலும், 8 மாவட்டங்களில் 537.72 ஏக்கரில் 8 புதிய

தொழிற்பேட்டைகள் ரூ.263.82 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டு வருகின்றன.

127 தொழிற்பேட்டைகளின் விவரங்கள் இணைப்பு–1இல் கொடுக்கப்பட்டுள்ளது, இவற்றில் மே 2021க்கு பிறகு 186.04 ஏக்கரில் 549 தொழில்மனைகளுடன் ஐந்து மாவட்டங்களில் உருவாக்கப்பட்ட கீழ்குறிப்பிட்ட ஐந்து தொழிற்பேட்டைகளும் அடங்கும்:

| **வ. எண்.** | **மாவட்டம்** | **தொழிற் பேட்டையின் பெயர்** | **மேம்படுத்தப் பட்ட பரப்பு (ஏக்கரில்)** | **மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள்** |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு | ஆலத்தூர் பகுதி – 2 | 67.96 | 192 |
| 2 | நாமக்கல் | இராசம் பாளையம் | 18.37 | 82 |
| 3 | சேலம் | பெரிய சீரகப்பாடி | 26.86 | 53 |
| 4 | புதுக்கோட்டை | ஆலங்குடி | 15.67 | 51 |
| 5 | திருவண்ணா மலை | பெரிய கோளப்பாடி | 57.18 | 171 |
| | | **மொத்தம்** | **186.04** | **549** |

சமச்சீர் சுற்றுசூழலை உருவாக்க, தொழிற்பேட்டைகளில் தகுந்த சாலைவசதி, மழை நீர்

வடிகால் வசதி, சிறு பாலங்கள், முறையான நீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் வசதி, தெரு விளக்குகள், பசுமை பகுதி, பூங்கா மற்றும் தேவையான பிற வசதிகள் உள்ளடக்கிய தொழிற்சாலைகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை தமிழ்நாடு சிட்கோ ஏற்படுத்தி தருகிறது.

தமிழ்நாடு சிட்கோ நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.45 கோடி மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.25.14 கோடி ஆகும். இந்நிறுவனத்தால் 2021-2022ஆம் நிதியாண்டில் ரூ.83.61 கோடி விற்றுமுதல் செய்து ரூ.32.07 கோடி இலாபம் ஈட்டப்பட்டுள்ளது மற்றும் 2022-23ஆம் நிதியாண்டில் ரூ.109.83 கோடி விற்றுமுதல் செய்து ரூ.28.03 கோடி இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. (தணிக்கை செய்யப்படாதது)

## 3.2 மகளிருக்கான பிரத்யேக தொழிற் பூங்காக்கள்

தமிழ்நாடு சிட்கோவினால் 1226 தொழில்மனைகளுடன் கூடிய கீழ்க்கண்ட 5 மகளிர் தொழிற் பூங்காக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

1. திருமுல்லைவாயல் (திருவள்ளூர் மாவட்டம்)
2. திருமுடிவாக்கம் (காஞ்சிபுரம் மாவட்டம்)
3. கருப்பூர் (சேலம் மாவட்டம்)
4. வாழவந்தான் கோட்டை (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) மற்றும்
5. கப்பலூர் (மதுரை மாவட்டம்)

## 3.3 புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்குதல்

உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய 8 புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கும் பணிகள் பின்வரும் 8 மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன.

| வ. எண் | மாவட்டம் | தொழிற்பேட்டையின் பெயர் | மேம்படுத்தப்பட்ட பரப்பு (ஏக்கரில்) | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | சேலம் | உமையாள்புரம் | 20.07 | 4.00 |
| 2 | செங்கல்பட்டு | கொடூர் | 99.13 | 45.94 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | திருச்சி | மணப்பாறை | 133.32 | 85.00 |
| 4 | மதுரை | சக்கிமங்கலம் | 31.88 | 22.28 |
| 5 | திருவள்ளூர் | காவேரிராஜபுரம் | 146.00 | 65.00 |
| 6 | திருவாரூர் | வண்டம்பாளை | 18.71 | 8.40 |
| 7 | தூத்துக்குடி | லிங்கம்பட்டி | 60.00 | 20.20 |
| 8 | கடலூர் | காடாம்புலியூர் | 28.61 | 13.00 |
| | | **மொத்தம்** | **537.72** | **263.82** |

## 3.4 தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

தமிழ்நாடு சிட்கோ, "குறு, சிறு நிறுவனங்கள் குழும வளர்ச்சி திட்டத்தின்" கீழ் 14 தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மொத்தம் ரூ.29.64 கோடி திட்ட மதிப்பீட்டில் மேம்படுத்தியுள்ளது.

2021– 2022ஆம் நிதி ஆண்டில் கீழ்காணும் 5 தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மொத்தம் ரூ.18.40 கோடி திட்ட மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| வ. எண் | மாவட்டம் | தொழிற் பேட்டையின் பெயர் | பரப்பு (ஏக்கரில்) | திட்ட மதிப்பீடு (ரூ. கோடி) | ஒன்றிய அரசின் மானியம் (ரூ. கோடி) | மாநில அரசின் மானியம் (ரூ. கோடி) |
|---|---|---|---|---|---|---|
| 1 | மதுரை | கே. புதூர் | 56.05 | 5.20 | 2.19 | 2.48 |
| 2 | தஞ்சாவூர் | நாஞ்சிக் கோட்டை | 26.30 | 2.85 | 1.05 | 1.51 |
| 3 | கிருஷ்ணகிரி | ஓசூர் (புதியது) | 24.41 | 4.00 | 1.39 | 2.20 |
| 4 | திண்டுக்கல் | திண்டுக்கல் | 39.91 | 4.05 | 1.92 | 1.72 |
| 5 | ஈரோடு | நஞ்சை ஊத்துக்குளி | 13.05 | 2.30 | 0.94 | 1.12 |
| | | **மொத்தம்** | **159.72** | **18.40** | **7.49** | **9.03** |

மேலும், கீழ்காணும் 4 தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் ரூ.24.45 கோடி மொத்த திட்ட மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

| வ. எண் | மாவட்டம் | தொழிற் பேட்டையின் பெயர் | பரப்பு (ஏக்கரில்) | திட்ட மதிப்பீடு (ரூ. கோடி) | ஒன்றிய அரசின் மானியம் (ரூ. கோடி) | மாநில அரசின் மானியம் (ரூ. கோடி) |
|---|---|---|---|---|---|---|
| 1 | இராணிப்பேட்டை | இராணிப் பேட்டை | 113.44 | 9.55 | 3.42 | 5.17 |
| 2 | மதுரை | உரங்கான்பட்டி | 69.84 | 9.55 | 5.73 | 2.86 |
| 3 | கன்னியாகுமரி | கோணம் | 20.70 | 1.43 | 0.86 | 0.57 |
| 4 | விருதுநகர் | விருதுநகர் | 45.65 | 3.92 | 2.35 | 1.57 |
| | | **மொத்தம்** | **249.63** | **24.45** | **12.36** | **10.17** |

## 3.5. தனியார் தொழிற்பேட்டைகளை உருவாக்குதல்

தமிழ்நாடு அரசு, நகருக்கு வெளியே புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்க முன்வரும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன கூட்டமைப்புகளுக்கு, அதன் மொத்தத்திட்ட மதிப்பில் 50 விழுக்காடு என்ற அளவில் ரூ.15 கோடிக்கு மிகாத மானியத்துடன் புதிய தொழிற்பேட்டைகள் அமைத்திட உதவி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், கோயம்புத்தூர் மாவட்டம், மோப்ரிபாளையத்தில் கொடிசியா தொழிற்பூங்கா உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.76.31 கோடி திட்ட மதிப்பீட்டில் ரூ.35.85 கோடி மானியத்துடன் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் 4 தனியார் தொழிற்பேட்டைகளை உருவாக்க ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது.

பணிகள் நடைபெற்று வருகின்ற 4 திட்டங்களின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு:

(ரூ. கோடியில்)

| வ. எண் | மாவட்டம் | தொழிற் பேட்டையின் பெயர் | பரப்பு (ஏக்கரில்) | திட்ட மதிப்பீடு | மாநில அரசின் மானியம் |
|---|---|---|---|---|---|
| 1 | மதுரை | தி/ள். மதுரை பொறியியல் குழுமம் (பி) லிமிடெட், மேலவளவு கிராமம் | 54.00 | 13.64 | 6.82 |
| 2 | கோயம்புத்தூர் | தி/ள். கொடீசியா இண்டஸ்ரியல் பார்க் (பி) லிமிடெட், கள்ளப்பாளையம் கிராமம் | 116.24 | 20.00 | 10.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | கோயம்புத்தூர் | தி/ள்.கொசிமா இண்டஸ்ரியல் பார்க் (பி) லிமிடெட், சொலவம்பாளையம் கிராமம் | 42.42 | 18.06 | 9.03 |
| 4 | கோயம்புத்தூர் | தி/ள்.அறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டை லிமிடெட், கிட்டாம்பாளையம் கிராமம் | 316.04 | 24.61 | 10.00 |
| | | **மொத்தம்** | **528.70** | **76.31** | **35.85** |

## 3.6 தனியார் தொழிற்கூடங்களை நகர் / பெருநகரங்களுக்கு வெளியே இடம் பெயரச் செய்தல்

தனியார் தொழில்முனைவோர் அமைப்புகள், நகர்ப்பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்கூடங்களை நகருக்கு வெளியே மாற்றி அமைக்க முன்வரும்பட்சத்தில், சாலை, மின்சாரம் மற்றும் தண்ணீர் வழங்குதல், கருத்தரங்கக்கூடங்கள் முதலிய அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் பொதுவசதிகளை ஏற்படுத்த 75 விழுக்காடு அரசு மானியம் என்ற

அளவில் அதிகபட்சமாக ரூ.20 கோடி வரை மாநில அரசால் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், நாமக்கல் மாவட்டத்தில், நாமக்கல் கனரக வாகன கட்டமைப்பு குழுமம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுபாளையத்தில் தேயிலை குழுமம் ஆகியன நகரத்திற்கு வெளியே மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதேபோன்று, விருதுநகர் மாவட்டத்தில் தென்மாவட்ட ஜவுளி செயல்முறைப்படுத்தும் குழுமத்தினை ரூ.12.17 கோடி திட்ட மதிப்பீட்டில் ரூ.9.13 கோடி மாநில அரசின் மானியத்துடன் இடம்பெயரச் செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

2022–23 ஆம் நிதியாண்டில், கடலூர் மாவட்டம், மருதாடு கிராமத்தில் ஈஸ்ட் கோஸ்ட் ஆட்டோமொபைல் (பி) லிமிடெட் நிறுவனத்தால் ரூ.4.39 கோடி திட்ட மதிப்பீட்டில் ரூ.3.29 கோடி மாநில அரசு மானியத்துடன் புதிய தொழிற்பேட்டை அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

பணிகள் நடைபெற்று வருகின்ற 2 திட்டங்களின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு :

(ரூ.கோடியில்)

| வ எண் | மாவட்டம் | தொழிற்பேட்டையின் பெயர் | பரப்பு (ஏக்கரில்) | திட்ட மதிப்பீடு | மாநில அரசின் மானியம் |
|---|---|---|---|---|---|
| 1 | விருதுநகர் | தி/ள். சதர்ன் டிஸ்டிரிக்ட் டெக்ஸ்டைல் பிராஸஸிங் குழுமம், காரியாப்பட்டி கிராமம் | 100.46 | 12.17 | 9.13 |
| 2 | கடலூர் | தி/ள். ஈஸ்ட் கோஸ்ட் ஆட்டோ மொபைல் (பி) லிமிடெட், மருதாடு கிராமம் | 11.41 | 4.39 | 3.29 |
| | | **மொத்தம்** | **111.87** | **16.56** | **12.42** |

## 3.7 உடனடியாக தொழில் துவங்க தேவையான வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி தொழில் வளாகங்கள்

தமிழ்நாடு சிட்கோ, திருமழிசை தொழிற்பேட்டையில் 97,036 சதுர அடி கட்டட பரப்பளவுடன் உடனடியாக தொழில் தொடங்க தேவையான வசதிகளுடன் 79 தொழிற்கூடங்களை

கட்டியுள்ளது. இவை முழுகிரைய விலை / வாடகை / தவணை முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றது.

கிண்டி தொழிற்பேட்டையில் ரூ.90.13 கோடி மதிப்பில் 1,97,024 சதுர அடி பரப்பில் அடித்தளம், தரைதளம் மற்றும் 6 தளங்களுடன் 152 தொழிற்கூட அலகுகள் கொண்ட அடுக்குமாடி தொழில் வளாக கட்டடப்பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், அம்பத்தூர் தொழிற்பேட்டையில் ரூ.60.55 கோடி மதிப்பில் 1,31,427 சதுர அடி பரப்பில் தரைதளம் மற்றும் 4 தளங்களுடன் 112 தொழிற்கூட அலகுகள் கொண்ட அடுக்குமாடி தொழில் வளாக கட்டடப்பணிகள் நடைபெற்று வருகிறது.

| வ எண் | தொழிற் பேட்டை | தளங்களின் எண்ணிக்கை | தொழிற்கூட அலகுகளின் எண்ணிக்கை | கட்டட பரப்பு (சதுர அடியில்) | திட்ட மதிப்பீடு (ரூ.கோடி) |
|---|---|---|---|---|---|
| 1 | கிண்டி | அடித்தளம், தரைதளம் + 6 | 152 | 197024 | 90.13 |
| 2 | அம்பத்தூர் | தரைதளம் + 4 | 112 | 131427 | 60.55 |
| | | **மொத்தம்** | **264** | **328451** | **150.68** |

மேலும், இவ்வாண்டில் சேலம் மாவட்டத்திலுள்ள கொலுசு உற்பத்தியாளர்களுக்கு தேவையான பணியிட வசதியினை ஏற்படுத்தித் தரும் வகையில் சேலம் மாவட்டம், அரியகவுண்டம்பட்டியில் 1.20 ஏக்கரில் ரூ.24.5 கோடி திட்ட மதிப்பில் 100 அலகுகளை கொண்ட உடனடியாக தொழில் துவங்க தேவையான வசதிகளுடன் தரைதளம் மற்றும் 3 தளங்களுடன் கூடிய அடுக்குமாடி தொழில் வளாகம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

### 3.8 தொழில்மனைகள் / தொழிற்கூடங்கள் ஒதுக்கீட்டு கொள்கை

தொழிற்பேட்டைகளில் ஒதுக்கீட்டிற்கு தயாராக உள்ள மேம்படுத்தப்பட்ட மனைகள் / தொழிற்கூடங்கள் குறித்த விவரங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்து, விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு முழுகிரைய விற்பனை / குத்தகை / வாடகை அடிப்படையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்களுக்கு

ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. விண்ணப்பங்கள் பெறப்பட்டு தகுதியான விண்ணப்பதாரர்களை தேர்வு செய்ய தேர்வுக் குழுவினரைக் கொண்டு நேர்காணல் நடத்தப்படுகிறது. தகுதியான விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை காலியாக உள்ள தொழில்மனைகள் / தொழிற்கூடங்களின் எண்ணிக்கையைவிட அதிகமாக இருக்கும்பட்சத்தில் விண்ணப்பதாரர்களின் முன்னிலையில் குலுக்கல் முறையில் ஒதுக்கீட்டாளர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தங்களது உற்பத்தியினை விரைந்து தொடங்கும் பொருட்டு தமிழ்நாடு சிட்கோவின் தொழில்மனைகள் / தொழிற்கூடங்களை தாமதமின்றி பெற்றுக்கொள்ள ஏதுவாக தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தின் (TIIC) தொழில் உட்கட்டமைப்பு முன்னெடுப்பு திட்டம்(IIIS) மற்றும் தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கியின் (TAICO) Flexi Loan for Your MSME – FLY (MSME) என்ற திட்டங்களின் மூலம் இடைக்கால

கடன் வழங்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கியின் Flexi Loan for Your MSME – FLY(MSME) திட்டத்தின் மூலம், 14 ஒதுக்கீட்டாளர்கள் ரூ.2.39 கோடி கடன் பெற்று பயனடைந்துள்ளனர்.

### 3.9 ஒன்றிய அரசின் குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சி திட்டத்தின் கீழ் பொது வசதி மையங்கள் அமைத்தல்

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் உற்பத்தி மற்றும் போட்டித்திறனை மேம்படுத்தும் நோக்கில் குழும வளர்ச்சி திட்டத்தின் கீழ் மாநிலம் மற்றும் ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் பொது வசதி மையங்கள் உருவாக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சிட்கோ, தற்பொழுது வரை ஒப்புதல் பெறப்பட்ட 43 திட்டங்களில் ரூ.148.25 கோடி மொத்த திட்ட மதிப்பீட்டிலான 28 திட்டங்களுக்கு ஒன்றிய அரசின் மானியம் ரூ.101.42 கோடி மற்றும் மாநில அரசின் மானியம் ரூ.12.38 கோடியினை பெற்று,

அப்பணிகளை முழுமையாக நிறைவேற்றி, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக திகழ்கிறது. மேலும், ரூ.207.20 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒன்றிய அரசின் மானியம் ரூ.139.81 கோடி மற்றும் மாநில அரசு மானியம் ரூ.24.37 கோடியுடன் 15 பொது வசதி மையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுமட்டுமின்றி, ரூ.134.09 கோடி திட்ட மதிப்பீட்டில் 8 புதிய திட்டங்கள் அமைக்க கருத்துரு ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## பொது வசதி மைய திட்டங்களின் ஒட்டுமொத்த நிலை

(ரூ. கோடியில்)

| வ. எண் | நிலை | எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு | ஒன்றிய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் |
|---|---|---|---|---|---|
| 1 | நிறைவுற்ற திட்டங்கள் | 28 | 148.25 | 101.42 | 12.38 |
| 2 | செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள் | 15 | 207.20 | 139.81 | 24.37 |
| 3 | ஒன்றிய அரசிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள புதிய திட்டங்கள் | 8 | 134.09 | 100.38 | 13.20 |
| | **மொத்தம்** | **51** | **489.54** | **341.61** | **49.95** |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள, ஒன்றிய அரசின் குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சி திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பொது வசதி மைய திட்டங்களின் விவரங்கள் முறையே இணைப்பு–2, இணைப்பு–3 மற்றும் இணைப்பு–4இல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 3.10 பொது உற்பத்தி உட்கட்டமைப்பு

குறுந்தொழில் நிறுவனங்களுக்கு உதவும் வகையில் குறுந்தொழில் முனைவோர்களுக்காக மாநில அரசினால் பொது உற்பத்தி உட்கட்டமைப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், அரசினால் 9 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, 3 திட்டங்கள் ரூ.10.40 கோடி திட்ட மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், ரூ.26.58 கோடி திட்ட மதிப்பீட்டில் ரூ.13.96 கோடி மானியத்துடன் 6 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளது.

## பொது உற்பத்தி உட்கட்டமைப்புத் திட்டங்களின் ஒட்டுமொத்த நிலை

(ரூ. கோடியில்)

| வ. எண் | நிலை | எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு | மாநில அரசு மானியம் |
|---|---|---|---|---|
| 1 | நிறைவுற்ற திட்டங்கள் | 3 | 10.40 | 6.75 |
| 2 | செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள் | 6 | 26.58 | 13.96 |
| | **மொத்தம்** | **9** | **36.98** | **20.71** |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள, பொது வசதி உட்கட்டமைப்பு திட்டங்களின் விவரங்கள் இணைப்பு–5இல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 3.11 மூலப்பொருட்கள் விநியோகம்

பாரஃபின் மெழுகு மற்றும் தமிழ்நாடு காகிதத்தாள் நிறுவனத்தின் காகிதம் ஆகிய மூலப்பொருட்களை மாநிலம் முழுவதும் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு தேவையின் அடிப்படையில் தமிழ்நாடு சிட்கோவினால் கொள்முதல்

செய்யப்பட்டு 20 கிளை அலுவலகங்கள் மற்றும் கிடங்குகள் மூலமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மூலப்பொருட்கள் உதவித் திட்டத்தின் கீழ், நடப்பு நிதியாண்டில் தமிழ்நாடு சிட்கோ 883 மெட்ரிக் டன் அளவிலான ரூ.10.11 கோடி மதிப்புடைய பாரஃபின் மெழுகு மற்றும் காகிதம் ஆகியவற்றை விற்பனை செய்துள்ளது.

### 3.12 மின் ஆளுமை

தமிழ்நாடு சிட்கோவின் ஒதுக்கீட்டாளர்கள் எளிய வழியில் பயன்படுத்தும் வகையிலும், திட்டங்கள் மற்றும் பணிகளை தெளிவாக புரிந்து கொள்ளும் வகையிலும், தனது வலைதள சேவையை (www.tansidco.tn.gov.in) வடிவமைத்து, இணைய வழி விண்ணப்பிக்கும் சேவையினை, தமிழ்நாடு ஒற்றைச் சாளர இணைய வசதியுடன் ஒன்றிணைத்து வழங்கி வருகிறது.

தமிழ்நாடு சிட்கோவின் புவியியல் தகவல் தொகுப்பு அமைப்பானது இந்திய அரசின் "இந்திய

தொழில் தகவல் அமைப்பு (IIS)" – இந்திய தொழில் நில வங்கி (IILB) இணைய முகப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது, கீழ்க்கண்ட சேவைகள் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது:

1. ஒதுக்கீட்டிற்கு தயாராக உள்ள தொழில் மனைகளின் விவரங்களை இணைய தள வசதி மூலம் பார்வையிடல்
2. புவியியல் தகவல் அமைப்பு (GIS) மூலம் தொழிற்பேட்டை வரைபடம் பார்வையிடல்
3. தொழில்மனைகள் / தொழிற்கூடங்கள்/ அடுக்குமாடி தொழிலகங்கள் வேண்டி இணைய வழியில் விண்ணப்பித்தல் மற்றும் விண்ணப்ப நிலையினை அறிதல்
4. விண்ணப்ப கட்டணங்களை மின்னணு முறையில் செலுத்துதல்

5. குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலம் உரிய தகவல்களை தெரிவித்தல்
6. ஒதுக்கீட்டு ஆணையை எந்நேரத்திலும், எங்கிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதி.

மேற்கண்ட சேவைகளுடன், தமிழ்நாடு சிட்கோ தனது ஒதுக்கீட்டாளர்களுக்கு கடந்த நிதியாண்டிலிருந்து கீழ்க்கண்ட சேவைகளை இணையதளம் மூலம் கூடுதலாக வழங்கி வருகிறது.

1. நிதி உதவி பெறுவதற்காக வங்கிகள் / நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் தடையில்லா சான்று
2. மனைத் தொகை செலுத்துவதற்கு கால நீட்டிப்பு வழங்குதல்
3. மின்சார வசதி பெறுவதற்காக தடையில்லா சான்று வழங்குதல்
4. நீர் இணைப்பு பெற விண்ணப்பித்தல்

5. ஒப்படைக்கப்பட்ட மனையில் தொழில் துவங்க கால நீட்டிப்பு வழங்குதல்
6. விற்பனை பத்திரம் வழங்குதல்
7. தொழில்மனை / தொழிற்கூடத்திற்கான உரிமை மாற்றம்
8. தொழில்மனை / தொழிற்கூடங்களை நிறுவனங்களுக்கு குத்தகைக்கு விட தடையில்லா சான்று வழங்குதல்
9. தொழில் நிறுவனத்தின் நிர்வாகிகள் மாற்றத்திற்கான ஒப்புதல் வழங்குதல்
10. தொழில் நிறுவனத்தின் பெயர் மாற்றத்திற்கான ஒப்புதல் வழங்குதல்
11. தொழில் நிறுவனத்தின் உற்பத்தி வகை மாற்றத்திற்கு ஒப்புதல் வழங்குதல்
12. தொழில்மனை / தொழிற்கூடங்களின் உரிமை மாற்றம் செய்ய தடையில்லா சான்று வழங்குதல்

ஒதுக்கீட்டாளர்கள் தங்களுக்குரிய தனித்துவமான கடவுச்சொல் மற்றும் பயனாளி அடையாள எண் ஆகியவற்றை உள்ளீடு செய்து மனைத் தொகை செலுத்துதல், மனைத் தொகை நிலுவை மற்றும் அதனை செலுத்துவதற்கான கால அவகாசம் ஆகியனவற்றை தெரிந்து கொள்ள இணையதள முகப்பு வசதி அளிக்கப்பட்டுள்ளது.

ஒதுக்கீட்டாளர்கள் மற்றும் தொழிற்பேட்டை சங்கத்தினர் தங்களது தொழிற்பேட்டை சார்ந்த கோரிக்கைகளை தெரிவித்து தாமதமின்றி தீர்வு காணும் பொருட்டு கோரிக்கைகளுக்கான பிரத்யேக மின்னஞ்சல் (grievanceredressal@tansidco.org) உருவாக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய சேவைகளை அளிப்பதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாடு சிட்கோவினால், தற்பொழுது கீழ்க்குறிப்பிட்ட இணைய வழி சேவைகளுக்கான மென்பொருள் உருவாக்கப்பட்டு, விரைவில் நடைமுறைக்கு கொண்டு வரப்படவுள்ளது :–

1. இணைய வழி மூலம் மூலப்பொருட்கள் (பாரஃபின் மெழுகு) விநியோகம் செய்தல், மற்றும் இதனை ஒற்றைச் சாளர இணையத்துடன் ஒருங்கிணைத்தல்.
2. தணிக்கைச் சோதனையுடன் கூடிய கணக்கியல் மென்பொருள் உருவாக்குதல்.

### 3.13 பெருங்குழுமங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தமது உலகளாவிய தரம் மற்றும் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், வளர்ந்து வரும் தொழில் பிரிவுகளுக்குள் நுழைய வழிவகை செய்யவும், ஒளிரும் துறைகளில் பெரும் குழுமங்கள் அமைக்கப்படும் என தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது.

#### 3.13.1 மருந்துப் பொருட்கள் பெருங்குழுமம்

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் சிப்காட் தொழில் பூங்காவில் மருந்து உற்பத்தியாளர்கள்

கூட்டமைப்புகளுடன் இணைந்து, மருந்து பொருட்கள் பெருங்குழுமத்தினை ரூ.155.01 கோடி மதிப்பில் அமைப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பெருங்குழுமத்தின் மூலம் மருந்துப் பொருட்கள் உருவாக்கத்தில் (formulation) ஈடுபட்டுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு பொது பரிசோதனை மையம், ஆலை கழிவுநீர் சுத்திகரிப்பு பொதுவசதி (CETP), கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை (STP) மற்றும் தேவையான பொது வசதிகள் உருவாக்கப்படும். இத்திட்டத்திற்காக, திண்டிவனத்தில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில் 113 ஏக்கர் பரப்பிலான நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 05.01.2023 அன்று பெறப்பட்டுள்ளது.

**நிதி ஆதாரம்:**

(ரூ. கோடியில்)

| ஒப்புதல் ஆணை | திட்ட மதிப்பீடு | ஒன்றிய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | குழுமத்தின் பங்களிப்பு |
|---|---|---|---|---|
| அரசாணை எண்.54 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (சி) துறை, நாள். 20.07.2022 | 155.01 | 20.00 | 51.56 | 83.45 |

### 3.13.2. துல்லிய உற்பத்திப் பெருங்குழுமம்

தானியங்கி வாகனங்கள், இயந்திரங்கள், மின் மற்றும் மின்னணு உபகரணங்களில் பயன்படுத்தப்படும் துல்லிய பொறியியல் பாகங்களை உருவாக்கும் மையமாக (Hub) கருதப்படும் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களை உள்ளடக்கிய சென்னை மண்டலத்தில் உள்ள காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கம் தொழிற்பேட்டையில் நிலம் கண்டறியப்பட்டு, தொழில்முனைவோர் கூட்டமைப்பினர்களுடன் இணைந்து ரூ.47.62 கோடி திட்டமதிப்பில் துல்லிய உற்பத்தி பெருங்குழுமம் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன் மூலம், புதிய பொருட்கள் உருவாக்குவதற்கான வடிவமைப்பு மற்றும் மேம்பாடு, பொதுவான நவீன பரிசோதனை வசதிகள் மற்றும் பொது உற்பத்தி வசதிகள் போன்றவை ஏற்படுத்தி தரப்படும்.

**நிதி ஆதாரம்:**

(ரூ. கோடியில்)

| ஒப்புதல் ஆணை | திட்ட மதிப்பீடு | மாநில அரசின் மானியம் | குழுமத்தின் பங்களிப்பு |
|---|---|---|---|
| அரசாணை எண்.53 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (சி) துறை, நாள். 20.07.2022 | 47.62 | 33.33 | 14.29 |

## 3.14 பணியாளர்கள் தங்கும் விடுதி

தமிழ்நாடு சிட்கோவின் புதிய முயற்சியாக, தொழிலாளர்களுக்கு குறைந்த வாடகையில் தரமான தங்குமிட வசதியினை தேவைப்படும் தொழிற்பேட்டைகளில் அமைக்க தீர்மானிக்கப்பட்டு சென்னை, அம்பத்தூர் தொழிற்பேட்டை மற்றும் கோயம்புத்தூர், குறிச்சி தொழிற்பேட்டை ஆகியவற்றில் பணியாளர்கள் தங்கும் விடுதிகளின் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

### 3.14.1 அம்பத்துர் தொழிற்பேட்டையில் பணியாளர் தங்கும் விடுதி

சென்னை, அம்பத்தூர் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர்களின் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 800 பணியாளர்கள் தங்குவதற்காக 1.212 ஏக்கர் நிலப்பரப்பில் 5 தளங்களுடன் கூடிய பணியாளர் தங்கும் விடுதியின் கட்டுமான பணிகள் ரூ.29.47 கோடி திட்ட மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது. மேலும், SIDBI நிறுவனத்தின் குழும மேம்பாட்டு நிதியின் (SIDBI Cluster Development Fund) மூலம் ரூ.26.52 கோடி கடனாக பெற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

### 3.14.2 குறிச்சி தொழிற்பேட்டையில் பணியாளர் தங்கும் விடுதி

கோயம்புத்தூர் மாவட்டம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள தொழில்நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தங்குமிட வசதி அளிக்கும் பொருட்டு, குறிச்சி தொழிற்பேட்டையில்

510 பணியாளர்கள் தங்குவதற்காக 1.49 ஏக்கர் நிலப்பரப்பில் 3 தளங்களுடன் கூடிய பணியாளர் தங்கும் விடுதி அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கட்டுமான பணிகள் ரூ.22 கோடி திட்ட மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. மேலும், SIDBI நிறுவனத்தின் குழும மேம்பாட்டு நிதியின் (SIDBI Cluster Development Fund) மூலம் ரூ.18 கோடி கடனாக பெற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

### 3.15. தொழில் மனைகளுக்கான பட்டா

நீண்ட நாள் கோரிக்கையான, சிட்கோ தொழிற்பேட்டைகளில் அமையப் பெற்றுள்ள, அரசு புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ள தொழிற்மனைகளுக்கு பட்டா வழங்கிட ஏதுவாக, இந்நிலங்களை இரயத்துவாரி மனையாக மாற்றம் செய்ய, அதிகாரம் பெற்ற குழு அரசாணை எண்.72, குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் துறை நாள்.30.11.2021 வாயிலாக அமைக்கப்பட்டது.

கடந்த 09.02.2022 மற்றும் 19.09.2022 ஆகிய தேதிகளில் நடைபெற்ற இக்குழுவின் முதலாவது மற்றும் இரண்டாவது கூட்டத்தில், 32 தொழிற்பேட்டைகளில் உள்ள 1542.24 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்திற்கு வகைப்பாடு மாற்றம் செய்ய ஒப்புதல் அளித்து, அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இவ்வரசாணைகளின்படி, தற்போது வரை 21 தொழிற்பேட்டைகளுக்கான 1022.61 ஏக்கர் நிலத்திற்கு தமிழ்நாடு சிட்கோ பெயரில் பட்டா பெறப்பட்டுள்ளது.

### 3.16 இயங்கிவரும் தொழிற்பேட்டைகளில் ஒருமுறை மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளுதல்

இயங்கிவரும் தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டினை, தகுந்த கால இடைவெளியில், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் – குழுமவளர்ச்சி திட்டத்தின் மூலம் செயல்படுத்த வழிவகையில்லாத நிலையில், சிறப்பு முயற்சியாக, தமிழ்நாடு சிட்கோ தனது சொந்த

நிதியினைப் பயன்படுத்தி மேம்பாட்டு பணிகள் அவசியம் தேவைப்படும் 53 தொழிற்பேட்டைகளில் ரூ.12.38 கோடி மதிப்பில் ஒருமுறை மேம்படுத்தும் திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது முடிவுற்றுள்ளன.

## 3.17 திருநெல்வேலி மாவட்டத்தில் மெகா உணவு பூங்கா அமைத்தல்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் (TNSAMB) மூலம் திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் சிப்காட் தொழில் வளாகத்தில் மெகா உணவுப் பூங்கா நிறுவப்பட்டு வருகின்றது. இந்த உணவுப் பூங்காவில் உணவு பதப்படுத்தும் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் வகையில் தொழில்மனைகள் உருவாக்கப்பட்டுள்ளன. உணவு பதப்படுத்தப்படும் பிரிவு சார்ந்த தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்ய, மேற்படி வாரியத்திற்கு (TNSAMB) தமிழ்நாடு சிட்கோ உதவி வருகிறது.

# 4. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி)

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) எஃகு மற்றும் மர அறைகலன்களை தயாரித்து அரசுத் துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கி வருகிறது. டான்சி 1965ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் தற்போது கீழ்க்கண்டுள்ளவாறு 20 தொழிற்கூடங்களும் மற்றும் சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் இரு காட்சியகங்களும் உள்ளன:

- பொறியியல் தொழிற்கூடங்கள் – 3
- மர அறைகலன் தொழிற்கூடங்கள் – 14
- சிறப்பு வகை தொழிற்கூடங்கள் – 3

மொத்தம் – 20

## 4.1. உற்பத்தி பொருட்கள்

டான்சி கீழ்க்கண்ட பொருட்களை உற்பத்தி செய்கிறது:

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குத் தேவையான மின்கடத்தி பொருட்கள்
- பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் விடுதிகளுக்குத் தேவையான வகுப்பறை அறைகலன்கள்
- வீடுகள் மற்றும் அலுவலக பயன்பாட்டிற்கான அறைகலன்கள்
- தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகத்திற்கு (TNMSC) தேவையான சர்ஜிகல் ஸ்பிரிட்டை அடிப்படையாகக் கொண்ட பொருட்கள்
- ஸ்பிரிட்டை அடிப்படையாக்க் கொண்டு தயாரிக்கப்படும் தொழில் பொருட்களான காஸ்கெட் ஷெல்லாக், பிரென்ச் பாலிஷ்,

தின்னர் மற்றும் கிருமி நாசினி கரைசல்களான லைசால், பினாயில்

- இந்தியா மார்க்–II கைப்பம்புகள் மற்றும் குழந்தைகள் எடை போடும் கருவி
- எனாமல் மற்றும் சாலை குறியீடு வர்ணங்கள்

**4.2. 2022–23 ஆம் ஆண்டில் முடிக்கப்பெற்ற குறிப்பிடத்தக்க பணி ஆணைகள் (ரூ.50 இலட்சத்திற்கு மேல்)**

- பள்ளி கல்வித் துறைக்கு வழங்கப்பட்ட Foundational Literacy and Numeracy (FLN) Kits – ரூ.21.66 கோடி
- பள்ளி கல்வித் துறைக்கு வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள் – ரூ.15.21 கோடி
- உயர் கல்வித் துறைக்குத் வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள் (பகுதி II, III) – ரூ.21.05 கோடி

- பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட எஃகு மாடுலர் கலர் டெஸ்க் மற்றும் பெஞ்சுகள் (பகுதி I, II) – ரூ.13.96 கோடி
- பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட துத்தநாக உலோக கச்சித தொட்டிகள் (பகுதி I, II) – ரூ.3.91 கோடி
- பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள் (நாடாளுமன்ற உறுப்பினர் நிதி) – ரூ.1.00 கோடி
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு வழங்கப்பட்ட எஃகு மாடுலர் கலர் டெஸ்க் மற்றும் பெஞ்சுகள் (பகுதி I, II) – ரூ.6.82 கோடி
- வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைக்கு வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள் – ரூ.1.50 கோடி.

- பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறைக்கு வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள்– ரூ.1.15 கோடி.
- இந்திய தொழில்நுட்பக் கழகத்திற்கு வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள் – ரூ.61.00 இலட்சம்

**4.3. 2022–23ஆம் நிதி ஆண்டில் உற்பத்தியில் உள்ள பணி ஆணைகள் (ரூ.50 இலட்சத்திற்கு மேல்)**

- பள்ளி கல்வித் துறைக்கு வழங்கப்பட்ட Foundational Literacy and Numeracy (FLN) Kits – ரூ.4.00 கோடி
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு வழங்கப்பட்ட எஃகு மாடுலர் கலர் டெஸ்க் மற்றும் பெஞ்சுகள் – ரூ.8.38 கோடி
- மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள் – ரூ.4.15 கோடி

- தோட்டக்கலைத் துறைக்கு வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள் – ரூ.1.36 கோடி
- தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்திற்கு வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள் – ரூ.1.23 கோடி
- திருநெல்வேலி மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட துத்தநாக உலோக கச்சித தொட்டிகள் – ரூ.78.00 இலட்சம்
- சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு வழங்கப்பட்ட எஃகு மற்றும் மர அறைகலன்கள் –ரூ.72.00 இலட்சம்

## 4.4. மீண்டும் புதுப்பிக்கப்பெற்ற தொழிற்கூடங்கள்

2022–23ஆம் ஆண்டில், டான்சி ஈரோட்டில் உள்ள மூடப்பட்ட தொழிற்கூடத்தை புதுப்பித்து மீண்டும் உற்பத்தியை தொடங்கியுள்ளது.

**4.5. காட்சியகம் மற்றும் நிகழ்நிலை மின் வணிக இணைய முகப்பு**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, அமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து சென்னை நகரில் டான்சியின் ஒரு பிரத்யேக காட்சியகம் (Showroom cum Sales Center) மற்றும் நிகழ் நிலை மின் வணிக இணைய முகப்பு (e–Commerce online sales portal) (www.tansismart.tn.gov.in) நிறுவப்பெற்று 08.02.2023 அன்று மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களால் திறக்கப்பெற்று செயல்படுகிறது.

**4.6. அரசு இ–விற்பனை முகமை**

டான்சி நிறுவனம் கடந்த டிசம்பர், 2022 முதல் அரசு இ–விற்பனை முகமையில் (GEM PORTAL) பதிவு செய்து கொள்முதல் மற்றும் விற்பனை சேவைகளை மேற்கொண்டுள்ளது.

**4.7. நிறுவன வள திட்டமிடல்**

இந்நிறுவனம் தனது தனித்துவமான நிறுவன வள திட்டமிடல் (ERP) மூலம் நிர்வாகம், மனித வளம், பொருள் மேலாண்மை, நிதி / கணக்கு, சந்தைப்படுத்துதல், முதலியன உள்ளிட்ட தனது தினசரி நடவடிக்கைகளை 2022-23 ஆம் நிதி ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

**4.8. நிறுவன சமூக பொறுப்பு திட்டத்தின் கீழ் பங்களிப்பு**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட "நம்ம ஸ்கூல்" திட்டத்திற்கு டான்சி நிறுவனம் ரூ.4 கோடியினை (நிறுவன சமூக பொறுப்பு திட்டத்தின் கீழ்) அளித்துள்ளது.

**4.9. 2022-23ஆம் ஆண்டு டான்சி நிறுவனத்தின் இலக்கு ரூ.125 கோடி மற்றும் செயல்பாடுகள்**

2022-23ஆம் ஆண்டு டான்சியின்

செயல்பாடுகள் பின்வருமாறு:

| விபரம் | ரூ. கோடியில் (மார்ச், 2023 வரை) (தணிக்கைக்கு முன்) |
|---|---|
| உற்பத்தி | 137.70 |
| விற்பனை | 155.05 |
| நிகர இலாபம் | 9.42 |
| செயல்முறை இலாபம் | 7.09 |

## 5. தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII–TN)

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமானது (EDII–TN) மாநிலத்தில், தொழில் முனைவோர் கல்வி மற்றும் புத்தாக்க ஊக்குவிப்பு துறையில் ஒரு சிறந்த நிறுவனமாகும். இந்நிறுவனமானது, தமிழக அரசால் 2001ஆம் ஆண்டில், இலாப நோக்கமற்ற அமைப்பாக உருவாக்கப்பட்டு, தமிழக அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், புத்தாக்கம் மற்றும் தொழில்முனைதல் சூழல்களை உருவாக்கி வளர்ப்பதற்கு, வளரும் மற்றும் ஏற்கனவே உள்ள தொழில்முனைவோர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் குழுமங்கள், புத்தொழில் புரிபவர்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும்

கல்லூரி மாணவர்களுக்கு பயிற்சிகளும் மற்றும் தொழில் வளர்காப்பகங்களை நிறுவுதல் போன்ற பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது. இதுவரையில், இந்நிறுவனத்தின் மூலம் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், ஆர்வமுள்ள மற்றும் ஏற்கனவே உள்ள தொழில்முனைவோர் உட்பட 10.51 இலட்சம் நபர்கள் பயன் பெற்றுள்ளனர்.

**நோக்கம்**

தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமானது, தமிழகத்தில், கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி பற்றிய தொழில்முனைவு மற்றும் புத்தாக்க கண்டுபிடிப்பு கலாச்சாரத்தினை மாநிலம் முழுவதும் பரப்புதல் போன்றவற்றினை நோக்கமாக கொண்டு மாநில வள மையமாக செயல்பட்டு வருகிறது.

**உத்திகள்**

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமானது பின்வரும் உத்திகளைக் கொண்டு தமிழ்நாட்டில் உள்ள ஆர்வமுள்ள தொழில்முனைவு மற்றும் புத்தாக்க கலாச்சாரத்தை ஊக்குவிக்கிறது.

- ஆர்வமுள்ள இளைஞர்கள் மற்றும் தொழில்முனைவோர்களின் தொழில்முனைவு திறன்களை வளர்த்தல்.
- தொழில் நுட்பங்கள் உட்பட புத்தொழிலுக்கான சூழல்களை உருவாக்க, தொழில்முனைவோர்களுக்கு உதவுதல்.
- முறையான கல்வி முறையின் மூலம், தொழில் முனைவோர் கல்வியை உட்புகுத்துதல்.
- தொழில்முனைவு மற்றும் புத்தாக்கம் பற்றிய ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள்.
- தொழில்முனைவு மற்றும் புத்தாக்க கண்டுபிடிப்பு சூழல்களை உருவாக்க

அனைத்து அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்துதல்.

தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைப்பு திட்டம், குழுமங்கள் வலுப்படுத்தும் திட்டம் மற்றும் வழிகாட்டுதல் திட்டம் ஆகியவற்றின் மூலம் தொழில் முனைவோர் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம், புத்தாக்கம் மற்றும் தொழில் வளர்காப்பகங்கள் திட்டம், புத்தாக்க பற்றுச்சீட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் புத்தாக்க ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப திட்டம் மூலம் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வு மேற்கொள்ளப்படுகிறது.

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் கீழ் பல்வேறு துறைசார்ந்த 376 வல்லுநர்கள், பல்வேறு திட்டங்களுக்கு பயிற்சி மற்றும் உதவி வழங்குவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## 5.1. தொழில்முனைவோர் ஊக்குவிப்பு (Entrepreneurship Promotion)

### 5.1.1 தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள்

வாழ்க்கைச் சுழற்சி அணுகுமுறை மற்றும் செயல்முறை அடிப்படையிலான மாதிரி வடிவமைப்பு, ஆர்வமுள்ள மற்றும் ஏற்கனவே உள்ள தொழில்முனைவோர்களுக்கு தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது. இவ்வடிவம் முன் அனுமதி நிலை மற்றும் பிந்தைய அனுமதி நிலை என வகைப்படுத்தப்பட்டுள்ளது. முன் அனுமதி நிலையிலுள்ள கட்டம் – I மற்றும் கட்டம் – II பங்கேற்பாளர்களுக்கு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி அனுமதி பெற ஒரு சாத்தியமான வணிகத் திட்டத்தினை தயாரிக்க பயிற்சி அளிக்கப்படுகிறது.

கட்டம் – III இன் மூலம் பங்கேற்பாளர்கள் தங்கள் வணிகத்தை எவ்வாறு தொடங்குவது மற்றும் நிர்வகிப்பது என்பதை கற்றுக்கொள்வார்கள். கட்டம்–IV இன் மூலம், தங்கள் திட்டங்களை மேம்படுத்திடவும் வெற்றிகரமாக செயல்படுத்தவும் இத்திட்டம் உதவும். மேலும் பின்வரும் தலைப்புகளில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர்களுக்கு கட்டணப் பயிற்சிகளும் நடத்தப்பட்டுள்ளன.

- நிதி மேலாண்மை, நிதி சுழற்சி மற்றும் செயல்பாட்டு மூலதன மேலாண்மை
- சிறு நிறுவனங்களுக்கான வரி திட்டமிடல் மற்றும் இடர் மேலாண்மை
- இறக்குமதி, ஏற்றுமதி வாய்ப்பு வழிமுறை
- மின்னணு சந்தைப்படுத்துதல்
- விற்பனை & சந்தைப்படுத்தல்
- மாற்று ஆற்றல் பயன்படுத்தல்
- தரமான தரநிலைகள் மற்றும் சிக்கன உற்பத்தி (Lean Manufacturing)

- சரக்கு மற்றும் சேவைவரி, மின்வழி ரசீது (E–Way bill) மற்றும் வருமான வரிதாக்கல்

2022–23ஆம் நிதியாண்டில் நடத்தப்பட்ட தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ. எண் | விவரங்கள் | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கருத்துரு நிலை | 38 | 5506 |
| 2 | வணிக திட்டமிடல் நிலை | 33 | 1114 |
| 3 | வணிகம் தொடங்கும் நிலை | 13 | 358 |
| 4 | ஏற்கனவே தொழில் புரியும் நிறுவனங்களுக்கு உதவுதல் (நிதி மேலாண்மையை உள்ளடக்கிய கட்டணப் பயிற்சி) | 30 | 1271 |
| | **மொத்தம்** | **114** | **8249** |

### 5.1.2 ஒருங்கிணைப்பு திட்டம்

தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டமானது, தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரகம், தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம், தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப கல்வி நிறுவனம் ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து செயல்படுத்தப்படுகிறது. இந்நிதியாண்டு 2022–23இல், மேற்கண்ட திட்டங்களின் மூலம் 12,246 தொழில்முனைவோர்கள் பயனடைந்துள்ளனர்.

### அ) தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்

இந்நிறுவனத்துடன் இணைந்து பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயனாளிகளுக்கு 7 நாட்களுக்கு அனைத்து மாவட்டங்களிலும் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி

வழங்கப்பட்டு வருகிறது. 2022-23ஆம் நிதியாண்டில் 1240 பயனாளிகள் இப்பயிற்சிகளின் மூலம் பயனடைந்துள்ளனர்.

**ஆ) தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரகம்**

வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் (UYEGP) 2412 வேலையற்ற இளைஞர்களுக்கு பயிற்சிகளும், புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (NEEDS) 850 தொழில்முனைவோர்கள் பயனடையும் வகையில் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சிகளும் மேற்கண்ட இயக்குநரகத்துடன் இணைந்து இணையதளம் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

**இ) வாழ்ந்து காட்டுவோம் திட்டம்**

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படும் திட்டமாகும்.

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்துடன் இணைந்து, திட்டப் பகுதிகளில் உள்ள நிறுவன சமூக வல்லுநர்கள் (ECPs) மற்றும் நுண் தொழில்முனைவோர்களை (Nano Entrepreneurs) வலுப்படுத்த பயிற்சி வழங்கி வருகிறது. தொழில் வாய்ப்புக்களை அடையாளம் காணுதல், சந்தை பகுப்பாய்வு, வணிகத் திட்டம் மற்றும் வணிக மாதிரி, பலம், பலவீனங்கள், வாய்ப்புகள் மற்றும் சவால் பகுப்பாய்வு, இடர் மேலாண்மை மற்றும் சட்ட நிறுவனம் போன்ற பல்வேறு தலைப்புகளில் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. பயிற்சி முடிந்த பிறகு, தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமானது ஒவ்வொரு திட்டப் பகுதிக்கும் முதன்மை சமூக வல்லுநர்களை தேர்வு செய்ய உதவுகிறது. இதுவரை, 2022-23ஆம் நிதியாண்டில் ரூ.52.00 இலட்சம் மதிப்பீட்டில் 3744 நிறுவன சமூக வல்லுநர்கள் மற்றும் நுண்

தொழில்முனைவோர்கள் இப்பயிற்சியினை பெற்றுள்ளனர்.

**ஈ) தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம்**

இந்நிறுவனத்துடன் இணைந்து, ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புகளை மேம்படுத்த இணையதளம் மூலம் பயிற்சி வழங்கப்படுகிறது. முதல் இரண்டு கட்டத்தில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்கள் தங்கள் சொந்த நிறுவனங்களைத் தொடங்குவதற்கு மூன்றாம் கட்டத்தில் வழிகாட்டுதல் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2022–23ஆம் நிதியாண்டில், 4000 ஆர்வமுள்ள இளைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2022–23ஆம் நிதியாண்டில் 20,495 ஆர்வமுள்ள

மற்றும் ஏற்கனவே உள்ள தொழில்முனைவோர்கள் ரூ.93.39 இலட்சம் மதிப்பீட்டில் பயனடைந்துள்ளனர்.

### 5.1.3. குழுமங்கள் வலுப்படுத்தும் திட்டம் (Cluster Strengthening Program)

குறு சிறு தொழில் நிறுவனங்கள் குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயலாக்கத்திலுள்ள குழுமங்களை வலுப்படுத்த, தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் உதவுகிறது. குழுமங்களின் கட்டமைப்பு மற்றும் மேலாண்மை குறித்த தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டிற்காக அரசு உதவி, சந்தைப்படுத்தல் வழிகள் மற்றும் வணிகத் திட்டம் பற்றிய வழிகாட்டுதல்கள், சிறு குழுமங்களின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன. 2022–23 ஆம் நிதியாண்டில், 15 சிறு குழுமங்களில் உள்ள 318 உறுப்பினர்கள் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் மூலம் பயிற்சிகள் பெற்றுள்ளனர்.

### 5.1.4. வழிகாட்டுதல் திட்டம் (Mentorship Programme)

ஆர்வமுள்ள மற்றும் ஏற்கனவே உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், வணிக இலக்குகளை அடைய, வெற்றிகரமான தொழில்முனைவோர் மற்றும் வழிகாட்டி வல்லுநர்களை கொண்டு வழிகாட்டுதல் திட்டம் வழங்கப்படுகிறது. 2022–23ஆம் நிதியாண்டில், 625 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தொழில்முனைவோர்கள் பயனடைந்துள்ளனர்.

## 5.2. புத்தாக்க ஊக்குவிப்பு (Innovation Promotion)

### 5.2.1 உயர்கல்வி நிறுவனங்களில் புத்தாக்கம் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (IEDP)

கல்லூரிகள், பல்தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழில்துறை பயிற்சி நிறுவனங்களுக்கான தொழில் முனைவோர் மற்றும் புத்தாக்க சூழல் மேம்பாடு, விரிவுரையாளர் மற்றும் மாணவர் தொழில்முனைவோர் திறன் மேம்பாடு, விரிவுரையாளர் மற்றும் மாணவர் புத்தாக்க மேம்பாடு போன்ற

நோக்கங்களை கொண்ட விரிவான பயிற்சித் திட்டம் இளைஞர்களுக்காக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் "மைய கல்லூரிகள் மற்றும் உறுப்பு கல்லூரிகள்" (Hub & Spoke) மூலம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தரமான பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் மையங்களாக (Hubs) அங்கீகரிக்கப்பட்டு, 30–50 கல்லூரிகளுக்கு உதவுகிறது. 1772 உறுப்பு கல்லூரிகளை கொண்ட 31 மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் தொழில்முனைவோர் மையங்களை (E–Cells) உறுப்புக் கல்லூரிகளில் அமைப்பதற்கு ஊக்குவிக்கிறது. மேலும் 1003 தொழில்முனைவோர் மையங்கள் உருவாக்கப்பட்டு, விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு தொழில்முனைவுத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளது. தொழில்முனைவோர் மையங்களின் செயல்பாடுகள்:

- பயிற்றுவித்தல் மற்றும் ஊக்கப்படுத்துதல்,

- வாய்ப்புகளை மதிப்பீடு செய்தல்,
- தொழில்முனைவோர் வளாகத்தைத் தொடங்குதல்,
- வணிக திட்டமிடல் மற்றும் கருத்துபட்டறைகள்,
- வணிக மயமாக்கலுக்கான முன்மாதிரி- வரைவு தயாரித்தல்,
- சந்தை பகுப்பாய்வு,
- குழு கட்டமைத்தல்,
- நிதி மேலாண்மை / தொழில்முனைவோருக்கான நிதி,
- உள்ளூர் பகுதிகளில் சமூக தொழில்முனைவோர்களை உருவாக்குதல்.

உயர்கல்வி நிறுவனங்களில் விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களின் திறனை மேம்படுத்தும் வகையில், தொழில் முனைவோர் மேம்பாடு குறித்த விழிப்புணர்வு மற்றும் பயிற்சி வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் 2022-23ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட

பல்வேறு திட்டங்களின் விவரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன:–

| வ. எண் | விவரங்கள் | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | உயர்நிலை நிர்வாகிகளுக்கான கூட்டம் | 6 | 227 கல்லூரிகள் |
| 2 | தொழில்முனைவோர் விழிப்புணர்வு | 408 | 48000 |
| 3 | விரிவுரையாளர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி | 27 | 1080 |
| | **மொத்தம்** | **441** | **49307** |

2022–23ஆம் நிதியாண்டில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் – கோயம்புத்தூர், மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் – தூத்துக்குடி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் –சென்னை, மெட்ராஸ் ஸ்கூல் ஆப் சோசியல் ஒர்க் – சென்னை, திருவள்ளுவர்

பல்கலைக்கழகம் – வேலூர், தொழில்துறை பயிற்சி நிறுவனம் – சென்னை, ஆகிய 6 இடங்களில் புதிய மையங்கள் உருவாக்கப்பட்டு உயர்நிலை நிர்வாகிகளுக்கான கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. மேலும் இந்த நிதியாண்டில் 42 உறுப்புக் கல்லூரிகளில், மாணவர்களின் புத்தாக்க கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்க 975 மாணவர்களை கொண்டு வடிவமைப்பு சிந்தனைப் பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளன.

### 5.2.2. தமிழ்நாடு மாணவர் புத்தாக்க கண்டுபிடிப்பாளர்கள் (TNSI)

தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின், முதன்மைத் திட்டமான தமிழ்நாடு மாணவர் புத்தாக்க கண்டுபிடிப்பாளர்கள் திட்டம், மாணவர் கண்டுபிடிப்பாளர்களைக் கண்டறிந்து அவர்களின் புத்தாக்க சிந்தனைகளை ஒரு முன்மாதிரியாக மாற்றுவதற்கு குறைந்தபட்ச சாத்தியமான தயாரிப்பை உருவாக்கவும் அவர்களை

ஊக்குவிக்கும் நோக்கத்துடனும் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படுகிறது. தமிழ்நாடு மாணவர் புத்தாக்க கண்டுபிடிப்பாளர்கள் திட்டத்தின் கீழ், அது சார்ந்த விழிப்புணர்வு, சிந்தனை உருவாக்கம், துவக்க முகாம்கள் மற்றும் இறுதிபோட்டிகள் நடத்தப்பட்டு, மாநில அளவில் தேர்வு செய்யப்படும் சிறந்த 25 அணிகளுக்கு தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 25 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில், 298 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு 44,844 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். உறுப்புக் கல்லூரி மாணவர்களிடமிருந்து 7867 புத்தாக்க சிந்தனைகள் பெறப்பட்டு, சிறந்த 25 அணிகளைத் தேர்வு செய்ய மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது. 2022–23 ஆம் நிதியாண்டில், மேற்கண்ட திட்டங்களுக்காக, தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மூலம் ரூ.224.63 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 5.2.3. பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் (SIDP)

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், தமிழக அரசின் பள்ளிக் கல்வித்துறை மற்றும் ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகள் அவசரநிதியம் (UNICEF) ஆகியவற்றுடன் இணைந்து 2022–23ஆம் கல்வி ஆண்டில் பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்துகிறது.

**நோக்கங்கள்**

- மாணவர்களிடையே புதிய தொழில் கண்டு பிடிப்புக்களை ஊக்குவித்தல் மற்றும் தொழில்முனைவோர் கலாச்சாரத்தை வளர்த்தல்.
- மாணவர்கள், தலைமைத்துவ தொழில்முனைவோர் திறன்களை பெறுவதற்கான முறையான எளிய புத்தாக்கம் மற்றும் வடிவமைப்பு சிந்தனையை பயன்படுத்தி வாழ்க்கை பிரச்சனைகளை தீர்க்க அவர்களை ஊக்கப்படுத்துதல்.

- பள்ளிகளில் தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்க கலாச்சாரத்தினை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகிக்கும் ஆசிரியர் சமூகத்தின் கற்பிக்கும் திறனை வளர்த்தல் மற்றும் புதிய சிந்தனைகளுக்கு வழிகாட்டியாக இருத்தல்.

தமிழ்நாட்டில், 38 மாவட்டங்களில் உள்ள 4356 அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்களுக்காக பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகள் அவசரநிதியம், பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான அறிவுசார் பங்குநிறுவனமாக செயல்பட்டு, ஆசிரியர்கள் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் கள ஒருங்கிணைப்பாளர்கள் உட்பட அனைத்து பங்குதாரர்களுக்கும் திறன் வளர்ப்பு பயிற்சியுடன் கூடிய புத்தாக்க சிந்தனைக்கான தொழில்நுட்ப உதவி,

காணொளி அடிப்படையிலான பாடத்திட்டங்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வழங்கப்படுகிறது.

**சாதனைகள்:**

- மொத்தம் 4.78 இலட்சம் பள்ளி மாணவர்கள் பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.
- ஆசிரியர்கள் மற்றும் மாணவர் அணிகளுக்கு புத்தாக்க சிந்தனையை மேம்படுத்துவதற்காக காணொளி அடிப்படையிலான கற்றல் தொகுதிகள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.
- சிறந்த புத்தாக்க சிந்தனைகளைக் கொண்ட 400 மாணவர் அணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 2661 மாணவர்களை உள்ளடக்கிய மண்டல துவக்க முகாம்கள் நடத்தப்பட்டன.
- இறுதிப் போட்டிக்கு, முதல் 40 அணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.25,000 முதல் ரூபாய் ஒரு இலட்சம் வரை ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும்.

இத்திட்டத்திற்காக 2022–23ஆம் நிதியாண்டில், தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தால் ரூ.62.74 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 5.2.4. புத்தாக்கப் பற்றுச்சீட்டுத் திட்டம் (IVP)

மாநில அரசின் தனித்துவமான முயற்சியாக, புத்தாக்கப் பற்றுச் சீட்டுத் திட்டம் விவசாயம், தோட்டக்கலை, கால்நடை மருத்துவம், மீன்வளம், பொறியியல், திடக்கழிவு மேலாண்மை, சுகாதாரம், வாகனம், நுண் தொழில்நுட்பம், மின்னணுவியல் மற்றும் இதர துறைகளிலிருந்து குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தாக்க நிறுவனங்களின் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க கண்டுபிடிப்புகள் ஊக்குவிக்கப்படுகிறது. மாநில அளவிலான தேர்வு குழுவின் மூலம் புத்தாக்க கண்டுபிடிப்புக்கள் தேர்வு செய்யப்பட்டு, அதை மாதிரியாக மாற்றுவதற்கு மானியமாக, பற்றுச்சீட்டு அ–இன் கீழ் ரூ.2 இலட்சமும் மற்றும் கண்டுபிடிப்பினை சந்தைப்படுத்துவதற்காக

பற்றுச்சீட்டு ஆ–இன் கீழ் ரூ.5 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. 2022–23ஆம் நிதியாண்டில், 150 கண்டுபிடிப்பாளர்களுக்கு ரூ.332.62 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ.9.41 கோடி மதிப்பீட்டில், வேளாண்மை, சுகாதாரம், உற்பத்தி, உணவு அறிவியல் போன்ற துறைகளில் 350 புத்தாக்க கண்டுபிடிப்பாளர்கள் பயனடைந்துள்ளனர்.

### 5.2.5 தொழில் வளர் காப்பகங்கள் – தமிழ்நாடு உற்பத்தி தொழில் வளர் காப்பகங்கள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் முக்கிய கவனம் செலுத்தும் பகுதிகளில் ஒன்று தொழில்நுட்ப அடிப்படையிலான தொழில்முனைவோரை உயர்த்துவதாகும். தொழில் செய்ய இடவசதி, கருத்தரங்குகள், விழிப்புணர்வு முகாம்கள், ஆதார நிதி, பிணைய இணைப்பு மற்றும் ஆலோசனை சேவைகள், அறிவுசார் சொத்துரிமைக்கான உதவி போன்ற பல்வேறு

சேவைகள் தொழில் வளர் காப்பகங்களில் வழங்கப்படுகின்றன. தொழில் வளர் காப்பகங்கள் மூலம், பல்வேறு துறைகளில் உள்ள 545 வளர் காப்பாளர்கள் உதவி பெற்றுள்ளனர். 945 விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் பயிற்சிகளின் மூலம் 62,156 தொழில்முனைவோர்கள் பயனடைந்துள்ளனர். 9 தொழில் வளர் காப்பகங்கள் மூலம் ரூ.201.46 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. தொழில் வளர் காப்பகங்களின் விவரம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண் | தொழில் வளர்காப்பகத்தின் பெயர் | துறை |
|---|---|---|
| 1 | கால்நடை தொழில் வளர்காப்பக அமைப்பு சென்னை மாவட்டம் | கால்நடை |
| 2 | பெரியகுளம் தோட்டக்கலை தொழில் வளர்காப்பக மையம், பெரியகுளம், தேனி மாவட்டம் | தோட்டக்கலை |
| 3 | கிள்ளிக்குளம் வேளாண் தொழில் வளர்காப்பக மையம், கிள்ளிக்குளம், தூத்துக்குடி மாவட்டம் | வேளாண்மை |

| | | |
|---|---|---|
| 4 | திருச்சிராப்பள்ளி வேளாண் தொழில் வளர்காப்பக மையம், திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் | வேளாண்மை |
| 5 | மேட்டுப்பாளையம் வேளாண் காடுகள் தொழில் வளர்காப்பக மையம், மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம் | வேளாண்காடுகள் |
| 6 | கடல்சார் உணவுப்பொருட்கள் தொழில் வளர் காப்பக மையம், தூத்துக்குடி, தூத்துக்குடி மாவட்டம் | மீன்வளம் |
| 7 | அண்ணா தொழில் வளர்காப்பக மற்றும் ஆராய்ச்சி அமைப்பு, திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் | மருந்தியல் |
| 8 | பெரியார் பல்கலைக்கழக தொழில்வளர் காப்பக கூட்டமைப்பு, சேலம், சேலம் மாவட்டம் | உணவு மற்றும் ஊட்டச்சத்து |
| 9 | அண்ணாமலை புத்தாக்க மற்றும் தொழில்வளர் காப்பக ஆராய்ச்சி அறக்கட்டளை, சிதம்பரம், கடலூர் மாவட்டம் | மேம்படுத்தப்பட்ட உற்பத்தி |

## 5.3. தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம்

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க திட்டத்தின் கீழ் நடத்தப்படும் பயிற்சிகளின் தகவல் தொடர்புகளை பரப்புவதற்காக சமூக ஊடகம், அச்சு ஊடகம், மின்னணு ஊடகம் போன்ற தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. தொழில்முனைவு மற்றும் புத்தாக்கச் சூழலை மேம்படுத்துவதற்காக கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. கல்லூரி மாணவர்கள் மற்றும் தொழில் வளர்காப்பாளர்கள் உருவாக்கிய புத்தாக்க கண்டுபிடிப்புக்களை காட்சிப்படுத்த கண்காட்சி (Demo Day) நடத்தப்பட்டது. 1225 கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற இந்நிகழ்வில் சிறந்த கண்டுபிடிப்பாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. பயிற்சி கையேடுகளை புதுப்பிக்க மற்றும் பயிற்சிக்குத் தேவையான பாடத்திட்டங்களை தயாரிக்க, துறை சார்ந்த களவல்லுநர்களைக் கொண்டு 8 எழுத்துப்பட்டறைகள் திறம்பட நடத்தப்பட்டது.

2022–23 ஆம் நிதியாண்டில், தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மூலம் பரவலான விழிப்புணர்வை ஏற்படுத்த ரூ.13.44 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

# 6. தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வசதியாக்கல் நிறுவனம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு, [M–TIPB], குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ், 2019ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு தன்னாட்சி அமைப்பாகும். இது FaMeTN என்ற புதிய பெயரில் [தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வசதியாக்கல் நிறுவனம்] "தோள்கொடுப்போம் தொழில்களுக்கு" என்ற முழக்கத்துடன், 25.08.2022 நாளிலிருந்து செயல்பட்டு வருகிறது. 2022–23ஆம் ஆண்டில், FaMeTN நிறுவனம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு, விரிவான வசதியாக்க உதவிகளை வழங்கியது. மேலும் தொழில் ஆணையர் அலுவலகம் மூலம் வழங்கப்படும் மானியங்கள் மற்றும் பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த உதவியுள்ளது.

## 6.1. 2022–23 ஆம் ஆண்டில் FaMeTN நிறுவனத்தின் செயல்பாடுகள்

### 6.1.1. தமிழ்நாடு கடன் உத்தரவாதத்திட்டம் (TNCGS)

- தமிழ்நாடு கடன் உத்தரவாதத்திட்டம் என்ற தமிழ்நாடு மாநிலம் சார்ந்த கடன் பிணையத் திட்டத்தினை வகுத்து செயல்படுத்துவதற்காக, தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசின் குறு மற்றும் சிறு நிறுவனங்கள் கடன் பிணைய டிரஸ்ட்டுடன் (CGTMSE), 16.03.2022 அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது.
- இத்திட்டம் 25.08.2022 அன்று, மாதிரி முறையில் (Pilot Mode) துவங்கப்பட்டது. CGTMSE நிறுவனத்துடன் இணைந்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது, சொத்துப்பிணையமில்லாத ரூ.40 இலட்சம் வரையிலான கடன்களுக்கு வழங்கப்படும் உத்தரவாதத்தினை 75 விழுக்காட்டிலிருந்து 90 விழுக்காடாகவும், ரூ.40 இலட்சங்களுக்கு

மேல், ரூ.2 கோடி வரையிலான கடன்களுக்கு உத்தரவாதத்தினை, 75 விழுக்காட்டிலிருந்து, 80 விழுக்காடாகவும், உயர்த்தி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. CGTMSE நிறுவனத்தின் துணையில்லாது, தனியாக செயல்படும்பொழுது சொத்துப் பிணையமில்லாத ரூ.40 இலட்சம் வரையிலான கடன்களுக்கு, 90 விழுக்காடு கடன் உத்தரவாதத்தினை TNCGS வழங்குகிறது.

- இதுவரை, பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் கனரா வங்கிகளின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன வாடிக்கையாளர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் ரூ.20 கோடிக்கு மேல் கடன்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் வரும் நிதியாண்டில், சிறு நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்களுக்கும் (NBFCs) விரிவுபடுத்தப்படும்.

### 6.1.2. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான கடன் மதிப்பெண்

- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், நிதி நிறுவனங்களிடமிருந்து குறைந்த வட்டி விகிதத்தில் சுலபமாக கடன் பெறுவதை நோக்கமாகக்கொண்டு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான கடன் மதிப்பெண் முறை உருவாக்கப்பட்டு வருகிறது.
- அந்நிறுவனங்கள், தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் கடன் பெற தேவையான தகுதியை மதிப்பீடு செய்ய, இந்த கடன் மதிப்பெண் முறை உதவும்.
- இந்த முறையானது, IIM அகமதாபாத் கல்வி நிறுவனத்துடன் இணைந்து, மேலும் திறன் வாய்ந்ததாக உருவாக்கப்படும்.

### 6.1.3. தமிழ்நாடு வர்த்தக வரவுகள் தள்ளுபடி முறை (TN TReDS)

- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தற்போது எதிர்கொள்ளும் முக்கியப் பிரச்சினைகளில் ஒன்று 'தாமதப்படுத்தப்பட்ட விற்பனைத் தொகை (Delayed Payments) ஆகும். இது, அந்நிறுவனங்கள் தங்கள் நடைமுறை மூலதன தேவைகளை சரியான நேரத்தில் பெற முடியாமல் தடை ஏற்படுகிறது. இந்தப் பிரச்சினையை தீர்க்க அந்நிறுவனங்கள், தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அரசு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான தங்களது தொகையினை விரைந்து பெறும் வகையில், TN TReDS எனப்படும் திட்டம் துவங்கப்பட்டுள்ளது. TN TReDS வலைதளத்தில், இதுநாள் வரை 87

பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் அதிக எண்ணிக்கையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன விற்பனையாளர்கள் இணைந்துள்ளனர்.

- இத்தள்ளுபடி முறை மூலம் விற்பனைத் தொகையினை தள்ளுபடி செய்ய, 14 வங்கிகள், ரூ.2120 கோடியை இலக்காக அறிவித்துள்ளன. ரூ.200 கோடி அளவிலான பட்டியல்கள் (Invoices), இந்த TN TReDS வலைதளம் வாயிலாக குறைவான வட்டிவிகிதத்தில், தள்ளுபடி செய்யப்பட்டு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் விற்பனைத் தொகையைப் பெற்றுப் பயனடைந்துள்ளன.

### 6.1.4. நிதிக் கருத்தரங்குகள் மற்றும் கடன் வசதியாக்கல் பணிகள்

- கடந்த 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல், அரசு வழங்கும் மானியத்துடன் கூடிய

வங்கிக் கடன் வசதிகளைப் பற்றிய நிதிக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

- தூத்துக்குடி மற்றும் தேனி மாவட்டங்களில் 2023ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், இரண்டு கடன் வசதியாக்கல் கூட்டங்கள் நடத்தப்பட்டு முறையே ரூ.20 கோடி மற்றும் ரூ.30 கோடி அளவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கடன் வசதியாக்கல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

### 6.1.5. சந்தைப்படுத்துதல்

இன்றைய தொழில்நுட்பம் சார்ந்த சூழ்நிலையில், வர்த்தகம் நேரடியாகவும், நிகழ்நிலையிலும் மேற்கொள்ளப்படுகிறது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு, சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில் பின்வரும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**(i) மின் வணிகம் (e–Commerce) மூலம் சந்தை இணைப்புகள்**

2022ஆம் ஆண்டில் Flipkart மற்றும் ONDC போன்ற மின்வணிக நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு மாவட்டங்களில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை மின் வணிகத் தளங்களில் உள்ளேற்றம் செய்வதற்கான விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

**(ii) உள்நாட்டு விற்பனை மூலம் சந்தை இணைப்புகள்**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உள்நாட்டு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ஹைதராபாத் நகரில் நடந்த உணவு பதப்படுத்துதல் கண்காட்சியில் பங்கேற்பு
- சென்னையில் நடைபெற்ற மின்னணுவியல் கண்காட்சியில் பங்கேற்பு.

- ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன மேம்பாடு மற்றும் வசதியாக்கல் அலுவலகத்துடன் இணைந்து சென்னையில், 2023ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 'விற்பனையாளர் மேம்பாட்டு நிகழ்வு' நடத்தப்பட்டது.
- அதே போல், சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டினைக் கொண்டாடும் வகையில், 2023ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், மதுரையில் 'சிறுதானிய விழா மற்றும் கண்காட்சி' நடத்தப்பட்டது.

**(iii) சந்தை இணைப்புகள் – சர்வதேச விற்பனை**

- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சிறந்த வணிக நடைமுறைகளை கற்றுக்கொள்ளும் வகையில், உதவிக்கொள்கை சீரமைக்கப்பட்டு, அதன் விளைவாக 2022–23ஆம் ஆண்டில், 45 குறு, சிறு

மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்று, ரூ.63 இலட்சம் நிதியுதவி பெற்றுப் பயனடைந்தன.

- வர்த்தக அமைப்புகளுடன் இணைந்து 'செக் குடியரசு' நாட்டிற்கான சர்வதேச பயணம் மேற்கொள்ளப்பட்டது.
- உலகின் பல்வேறு நாடுகளுக்கான 10 இந்திய தூதர்கள் மற்றும் உயர் ஆணையர்களுடனான கலந்துரையாடல் கூட்டம் நடத்தப்பட்டது. அதன் விளைவாக, கரூரில் இருந்த வீட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள், ஐஸ்லாந்தில் உள்ள வாங்குபவர்களுடன் இணைக்கப்பட்டனர். பிஜி நாட்டில் உள்ள வாங்குபவர்கள், காஞ்சிபுரத்தில் உள்ள பட்டு உற்பத்தியாளர்களுடன் இணைக்கப்பட்டனர்.

### 6.1.6. மாவட்ட ஏற்றுமதி ஊக்குவிப்பு மையங்கள்

- ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில் மாவட்டத் தொழில் மையங்களில் பணியாற்றும் வர்த்தக மேம்பாட்டு அலுவலர்கள் (BFOs) மற்றும் உதவிப் பொறியாளர்களுக்கு, இந்திய ஏற்றுமதி அமைப்பின் கூட்டமைப்பு (FIEO) மற்றும் வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் (DGFT) உடன் இணைந்து பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக 28.03.2023 அன்று அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஏற்றுமதி ஊக்குவிப்பு மையங்கள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

### 6.1.7. முதலீட்டாளர் வசதியாக்கல் மற்றும் ஒற்றை சாளர சேவைகள்

- வழிகாட்டுதல் நிறுவனத்துடன் இணைந்து 6 மாவட்டங்களில் ஒற்றைச் சாளர தகவின்

உபயோகம் மற்றும் பயன்பாட்டினை பிரபலப்படுத்துவதற்கான கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. வெளிநாட்டு முதலீட்டாளர்களின் தேவைகளுக்கேற்ப செயல்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வகையில் இந்தோ ஜெர்மன் வர்த்தக சபையுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பிற நாடுகளுடன் அத்தகைய ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.

- வழிகாட்டுதல் நிறுவனத்துடன் இணைந்து மாநிலத்தின் 38 மாவட்டங்களிலும் ஒற்றைச் சாளர தகவு குறித்த கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

### 6.1.8. திறனாக்குதல் (Skilling)

- மின்வாகன (EV) சங்கத்துடன் இணைந்து, மின்வாகனம் பற்றிய பாடங்களை, பட்டயத் தொழில்நுட்பக் கல்லூரிகளின் பாடத்திட்டத்தில் கொண்டு வரும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- மின் வாகனங்கள் சங்கம், ஃபோர்ஜ் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தொழிற் சிறப்பு மையங்களான TANSAM, TANCAM மற்றும் TAMCoE ஆகியவற்றுடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இணைந்து செயல்பட உதவிகள் செய்யப்படுகின்றன.
- தொழில் நிறுவனங்கள் மற்றும் கல்வியாளர்களிடையே ஒத்துழைப்பை உருவாக்க, வழிகாட்டுதல் நிறுவனத்தின் பணி ஆய்வகங்களுடன் (Work Labs) மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக

ஒருங்கிணைந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இந்தோ அமெரிக்கன் வர்த்தக சபையுடன் இணைந்து 'தொழில் 4.0' என்ற புதிய தொழில்நுட்பத்தைப் பற்றிய இரண்டு கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

### 6.1.9. நிலைத் தன்மை (Sustainability)

- மாநிலம் முழுவதும் 'பூஜ்ஜிய குறைபாடு மற்றும் பூஜ்ஜிய விளைவுச் சான்றிதழ்' (ZED) குறித்த 22 விழிப்புணர்வுக் கூட்டங்கள் பல்வேறு மாவட்டங்களில் நடத்தப்பட்டுள்ளன.

- ஆற்றல் செலவுகளைக் குறைப்பதற்கான வழிமுறைகள் குறித்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஆற்றல் திறன் விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

### 6.1.10. வேளாண் தொழில் வழித்தடம் மற்றும் இதர தொழில் பிரிவு (Sector wise) சார்ந்த முயற்சிகள்

- வேளாண் தொழில் வழித்தடம், மின்வாகன பொது வசதி மையம், விண்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில்கள் பொது வசதி மையம் ஆகியவற்றை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கைகளை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- வேளாண் மற்றும் உணவு பதப்படுத்தும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்புகள், சந்தை இணைப்புகள், ஏற்றுமதி வாய்ப்புகள் மற்றும் மானியங்கள் உள்ளிட்ட வசதிகளை அளித்திடும் வகையில் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய 5 மாவட்டங்களை உள்ளடக்கிய வேளாண் தொழில் வழித்தடம்

அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 6.1.11. ஒருங்கிணைந்த தலையீடுகள்

பல்வேறு துறைகள் மற்றும் அமைச்சகங்கள் வாயிலாக உத்யம் பதிவுகள் மற்றும் GST தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

- 'குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான பல்துறை திட்டங்கள் பற்றிய தொகுப்பு', 'தொழில் தொடங்குவது எப்படி' மற்றும் 'குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் ஏற்றுமதியாளர்களின் கையேடு' ஆகிய தலைப்புகளில் 3 புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் செயல்திறனை உயர்த்துதல் மற்றும் விரைவுபடுத்துவதற்கான RAMP திட்டத்தின் செயல் முதலீடு யுக்தியை தயாரிப்பதற்கு FaMeTN நிறுவனம் மாநிலத்தின் முகமை (Nodal Agency) ஆகும்.

## 7. தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (டான்சிம்)

தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கமானது, மாநிலத்தில் புத்தொழில் மற்றும் புத்தாக்க தொழில்முனைவு செயல்பாடுகளில் தனிக்கவனம் செலுத்தி புத்தொழில் சூழமைவினை வலுப்படுத்தும் நோக்கத்தில், தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்ட நிறுவனம் ஆகும். இது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் லாப நோக்கமற்ற நிறுவனமாக இயங்கி வருகின்றது. இந்நிறுவனம் StartupTN என்ற பெயரில் விளம்பரப்படுத்தப் படுகின்றது. தமிழ்நாட்டினை உலகளாவிய அளவில் புத்தொழில் நிறுவனங்கள் இயங்குவதற்கு உகந்த தலைசிறந்த இடங்களில் ஒன்றாக மாற்ற வேண்டும் என்ற நீண்ட கால இலக்கினை முன்வைத்து, புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவாக துணிகர முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கித் தருவது, உலகத்தரம்

வாய்ந்த தொழில்வளர் காப்பகங்களை வடிவமைப்பது, தொழில் விரைவாக்க பயிற்சிகள் அளிப்பது, சந்தைத் தொடர்புகளை ஏற்படுத்துவது, தொழில் முனைவு சார்ந்த பல்வேறு செயல்பாடுகளை ஊக்குவிப்பது போன்ற பலவகையான செயல்திட்டங்களை வகுத்து இயங்கி வருகின்றது இந்த நிறுவனம்.

## 7.1. நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் மற்றும் முன்னெடுப்புகள்:

- 2026ஆம் ஆண்டுக்குள் மாநிலத்தில் குறைந்தது 10,000 புதிய புத்தொழில் நிறுவனங்கள் உருவாவதற்கு ஏற்ற சூழமைவினை கட்டமைத்தல்
- வாழ்விடம், பாலினம், சாதி என அனைத்து வேறுபாடுகளையும் கடந்து அனைவரையும் உள்ளடக்கிய தொழில் முனைவு வளர்ச்சிக்கு தேவையான கொள்கைகளை வகுத்தல்

மற்றும் அதனை முறையாக செயல்படுத்துதல்.

- பல்வேறு துறைகளுக்கு இடையேயான சமமான வளர்ச்சியினை ஊக்குவிக்கும் விதமாக துறைசார் அணுகுமுறைகளை செயல்படுத்துதல்.
- மாநிலத்தில் புத்தொழில் பண்பாட்டை பரவலாக்கும் விதமாக அதிக அளவில் வட்டார புத்தொழில் மையங்களை கட்டமைத்தல் மற்றும் புத்தொழில் சமூகக் குழுக்களை உருவாக்குதல்.
- மாணவ மாணவியர் மற்றும் இளைய சமூகத்தினர் இடையே "வேலை தேடுதல்" என்பதில் இருந்து "வேலை வழங்குதல்" என்ற மனநிலை மாற்றத்தினை உருவாக்கும் விதமாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தல்.

- தமிழ்நாட்டில் இயங்கும் புத்தொழில் நிறுவனங்களுக்கு உலக அளவிலான சந்தை அணுகல், முதலீடு திரட்டுதல் மற்றும் வழிகாட்டுதல்களை பெறும் வாய்ப்புகளை வழங்குதல்.
- பிரம்மாண்டமாக வளர்ந்து அதிக சந்தை மதிப்பீட்டை உருவாக்கக் கூடிய நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் அதே வேளையில், அடித்தட்டு மக்களின் வாழ்வாதார மேம்பாடு சார்ந்த சமூக தொழில்முனைவு நிறுவனங்களும் வளர்ச்சி பெறத்தேவையான உத்திகளை செயல்படுத்துதல்.
- ஒன்றிய அளவிலும், உலக அளவிலும் புத்தொழில் செயல்பாடுகளில் முதன்மை மாநிலம் என்ற நிலையினை எட்டத் தேவையான புதுமையான திட்டங்களை செயல்படுத்துதல்.

## 7.2. வட்டார புத்தொழில் மையங்கள்

மதுரை, திருநெல்வேலி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் மாவட்ட நிர்வாகம் மற்றும் தொழில்முனைவு சார்ந்த பல்வேறு செயல்பாட்டாளர்கள் ஆதரவுடன் வட்டார புத்தொழில் மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அவ்வட்டாரப் பகுதிகளில் இயங்கும் புத்தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான ஆதரவுகளை வழங்கும் விதமாகவும் தொழில்முனைவு மேம்பாட்டை வலுப்படுத்தும் வளங்களை ஒருங்கிணைக்கும் இணைப்புப் பாலமாகவும் இம்மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

2022–23ஆம் நிதி ஆண்டில், மேற்கண்ட 3 வட்டார புத்தொழில் மையங்கள் தொடங்கப்பட்டு, அவற்றின் வாயிலாக 150 க்கும் மேற்பட்ட நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கின்றன. 25000–க்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்கள், தொழில் முனைவு ஆர்வலர்கள், மாணவர்கள் கலந்துகொண்டு பயனடைந்துள்ளனர். அடுத்த கட்டங்களில் மேலும் சில

மாவட்டங்களில் வட்டாரப் புத்தொழில் மையங்கள் நிறுவப்பட உள்ளன.

### 7.3. தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதி (டான்சீட்)

தொடக்க நிலையில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவு அளிக்கும் விதமாக, ரூ.10 லட்சம் ஆதார நிதியாக வழங்கும் தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதித் திட்டம் ஒரு முக்கிய முன்னெடுப்பாகும். 2022– 23ஆம் நிதி ஆண்டில், டான்சீட் திட்டத்தின் மூன்றாம் மற்றும் நான்காம் பதிப்புகள் மூலமாக 56 புத்தொழில் நிறுவனங்களுக்கு ரூ.5.6 கோடி மானியமாக வழங்கப்பட்டது.

மேலும், 25 புத்தொழில் நிறுவனங்கள், டான்சிட் நான்காம் பதிப்பில் தேர்வு செய்யப்பட்டு உள்ளது. இந்நிறுவனங்களுக்கு ரூ.2.5 கோடி விரைவில் வழங்கப்படும்.

டான்சீட் 5ஆம் பதிப்பு அறிவிக்கப்பட்டு, பிப்ரவரி 23, 2023 லிருந்து விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன,

இப்பதிப்பில் மேலும் 50 புத்தொழில் நிறுவனங்களுக்கு ரூ.5 கோடி நிதி வழங்கப்படும்.

## 7.4. புத்தொழில் விரைவாக்க பயிற்சித் திட்டம்

புத்தொழில் முனைவோர்கள் தங்கள் தொழிலில் விரைவாகவும், செறிவாகவும் வளர்ச்சி அடையத் தேவையான தொழில் நுட்பம் மற்றும் அணுகுமுறைகளை கற்றுத் தரும் விதமாக உயர்தர பயிற்சிப் பட்டறைகள் இத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்படுகின்றன. 2022–23ஆம் நிதி ஆண்டில் வேளாண் தொழில் நுட்பம், உற்பத்தித் தொழில் நுட்பம், மென்பொருள் சேவைகள், சமூக மாற்றம், பன்னாட்டு வணிகம் ஆகிய 5 வேறுபட்ட துறைகளின் கீழ் 100 புத்தொழில் நிறுவனங்களுக்கு தொழில் விரைவாக்க பயிற்சிகள் தொடங்கப்பட்டன.

## 7.5. நவீன பொறியியல் புனைவகம் கட்டமைத்தல்:

தமிழ்நாட்டில் உள்ள மூன்று அரசு பொறியியல் கல்லூரிகளில் தொழில்நுட்ப கல்வி இயக்குநரகத்தின்

மேற்பார்வையில் செயல்படும் விதமாக நவீன பொறியியல் புனைவகங்களை அமைப்பதற்கான செயல்பாடுகளை தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் தொடங்கியுள்ளது. திருநெல்வேலி, சேலம் மற்றும் திருச்சி நகரங்களில் உள்ள அரசு பொறியியல் கல்லூரிகளில் கல்லூரிக்கு ஒன்று வீதம் மூன்று நவீன பொறியியல் புனைவக நிலையங்களை ரூ.2.2 கோடி மதிப்பில் அமைப்பதற்கான பணிகள் நிறைவு பெறும் தருவாயில் உள்ளன.

இதில் ஒரு பகுதியாக, மாணவர்கள் தங்களது தொழில் சிந்தனைகளை, மாதிரி திட்டமாக உருவாக்கிக் கொள்ள பயனளிக்கும் விதத்தில் Protosem என்ற ஒரு மதிப்புறு பயிற்சி பிரிவு சேர்க்கப்படும். இந்த நவீன பொறியியல் புனைவகங்களை மாணவர்கள் மட்டுமின்றி அவை அமைந்திருக்கும் பகுதிகளை சேர்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களும் புத்தாக்க நிறுவனங்களும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## 7.6. தொழில் வளர்க் காப்பக மேலாண்மை பயிற்சி

தமிழ்நாட்டில் இயங்கும் தொழில் வளர்க் காப்பகங்களின் திறனை மேம்படுத்தும் விதமாக அதன் தலைமை செயல் அலுவலர்கள் மற்றும் மேலாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும் விதமாக இத்திட்டம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. 2022–23ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாட்டில் செயல்படும் 59 தொழில் வளர் காப்பகங்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட்டது. அவர்களில் சிறப்பாக செயல்படும் 13 தொழில் வளர்க் காப்பகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்த ஆதரவளிக்கும் வண்ணம் தலா மூன்று லட்சம் வீதம் ரூ.39 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 5 தொழில் வளர் காப்பகங்கள் இஸ்ரேல் நாட்டில் இயங்கும் தொழில் வளர்க் காப்பகங்களின் சிறந்த செயல்பாடுகளை அறிந்து கொள்ள உதவும் வண்ணம் அந்த நாட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

## 7.7. வழிகாட்டி மென்பொருள்

புதுயுக தொழில் முனைவுப் பயணத்தில் தொழில்முனைவோர்களுக்கு துறைசார் அறிவும், அனுபவமும் கொண்ட அறிவுரைஞர்களின் வழிகாட்டுதல்களை பெறுதல் அவசியம். இதன் அடிப்படையில் பல்வேறு துறைசார்ந்தும், தொழில் முனைவு சார்ந்தும் வழிகாட்டுதல்களை வழங்க தயாராக இருக்கும் அறிவுரைஞர்களையும், தொழில் முனைவோர்களையும் இணைக்கும் வகையில் பிரத்தியேகமான இணையமுகப்பு MentorTN என்ற பெயரில் தொடங்கப்பட்டுள்ளது. இதுவரையில் 90 வழிகாட்டுநர்கள் இத்தளத்தில் இணைந்துள்ளனர்.

## 7.8. உலகத் தமிழ் ஏஞ்சல் முதலீட்டாளர்கள் இணைப்புத்தளம்

உலக அளவிலான தமிழ் ஏஞ்சல் முதலீட்டாளர்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அவர்களது முதலீடுகளை சரியான திட்டத்தில் முதலீடு

செய்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இயங்கும் உலகத் தமிழ் ஏஞ்சல் முதலீட்டாளர்கள் இணைய தளம் தொடங்கப்பட்டுள்ளது. புத்தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்யத் தயாராக இருக்கும் ஏஞ்சல் முதலீட்டாளர்களையும், முதலீடுகள் தேவைப்படுகின்ற தகுந்த புத்தொழில் நிறுவனங்களையும் இணைக்கும் தளமாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 7.9. சமூகத் தொழில் முனைவுகளுக்கான ஊக்குவிப்பு

சமூகத்தில் நன்மாற்றங்களை விளைவிக்கும் விதமாக இயங்கும் புத்தொழில் நிறுவனங்களுக்கென இதுவரை டான்சீட் மானியத் திட்டத்தின் மூலம் 29 புத்தொழில் நிறுவனங்களுக்கு, ரூ.2.9 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் அந்நிறுவனங்களுக்கு தொழில் விரைவாக்க பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் ஊரக வாழ்வாதார மேம்பாடு சார்ந்து இயங்கும் புத்தொழில் நிறுவனங்களுக்கு சிறப்பு

சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஊரக வாழ்வாதார மேம்பாடு என்பது வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கிராமப்புற சிறு தொழிற்சாலைகள் என பல செயல்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது. பாரம்பரிய தொழில் முறைகளை நவீன தொழில்நுட்பங்களின் துணையுடன் மேம்படுத்துவதன் மூலம் பெரும்பான்மையான இளைஞர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்கி அவர்கள் ஊரகப் பகுதிகளிலிருந்து நகர்ப்புற பகுதிகளுக்கு இடம்பெயர்வதை தடுக்க இயலும். வறுமை ஒழிப்பு என்பது மட்டுமல்லாமல் ஒருங்கிணைந்த வளர்ச்சி, சமமான வளர்ச்சி, நிலைத்த நீடித்த வளர்ச்சி ஆகியவையும் இத்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும். டான்சீட் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ரூ.10 இலட்சம் நிதியானது, ஊரக வாழ்வாதார மேம்பாடு சார்ந்து இயங்கும் நிறுவனங்களுக்கு ரூ.15 இலட்சம் ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் ஒரு நிதியாண்டில் டான்சீட் திட்டத்தின் கீழ் பயன்பெறும் நிறுவனங்களில்

10 சதவீதம் ஊரக வாழ்வாதார மேம்பாடு சார்ந்து இயங்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### 7.10. மகளிரை முதன்மை பங்குதாரர்களாக கொண்டிருக்கும் புத்தொழில் நிறுவனங்களுக்கான சிறப்பு சலுகை

தமிழ்நாடு, பாலின சமத்துவத்தை வலியுறுத்தும் திட்டங்களை செயல்படுத்துவதில் முன்னணி மாநிலமாக நீண்ட காலமாக இருந்து வருகிறது. இம்மரபில், பெண்களால் நடத்தப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு தகுந்த களமாக தமிழ்நாடு திகழ வேண்டும் என்ற அடிப்படையில் சிறப்பு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. மகளிரை முதன்மை பங்குதாரர்களாகக்கொண்டு இயங்கும் புத்தொழில் நிறுவனங்களுக்கு டான்சிட் நிதி ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.15 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் ஒரு நிதியாண்டில் டான்சீட் திட்டத்தில் பயன்பெற தேர்ந்தெடுக்கப்படும்

நிறுவனங்களில் 25 சதவீதம் மகளிர்களை முதன்மை பங்குதாரர்களாக கொண்டிருக்கும் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் உதவியுடன் இயங்கி வரும் தொழில் வளர் காப்பகங்களில் மகளிர்களால் நடத்தப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு உறுப்பினர் கட்டணம் மற்றும் ஓராண்டுக்கான வாடகை கட்டணத்தினை (ரூ.2 இலட்சம் வரை) அரசே ஏற்றுக்கொள்ளும். மேலும் மகளிர் நலன் சார்ந்த தயாரிப்புகள் சேவைகளை வழங்கும் பெம்டெக் (Femtech) நிறுவனங்கள் மற்றும் மகளிரால் நடத்தப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு சிறப்பு தொழில் விரைவாக்க பயிற்சிகள் வழங்குதல், தமிழ் ஏஞ்சல் முதலீட்டாளர் தளத்தின் வழியே முதலீடு திரட்டுவதற்கான உதவிகள் வழங்குதல் என பல சிறப்பு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. மகளிருக்கான இந்த சிறப்பு சலுகைகளை பெற நிறுவனத்தின் 75 சதவீத பங்கு மகளிர்களுக்கு உரியதாக இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## 7.11. பசுமை தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனங்களுக்கான சிறப்பு சலுகை

புவி சந்தித்துக் கொண்டிருக்கும் சூழலியல் அழுத்தங்களுக்கு தீர்வு காண வேண்டிய அவசிய சூழலில் இருக்கின்றோம். எனவே காலநிலை மாற்ற மேலாண்மை, நிலைத்த நீடித்த வளர்ச்சி, சுழற்சி பொருளாதாரம் சார்ந்து இயங்கும் புத்தாக்க நிறுவனங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டியது அவசியம். இதன் அடிப்படையில் பசுமை தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனங்களுக்கு சிறப்பு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளது. டான்சீட் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ரூ.10 இலட்சம் நிதியானது, பசுமை தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு ரூ.15 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் வணிக ரீதியில் பயனளிக்கும் விதமான பசுமை தொழில்நுட்பத் திட்டங்களுக்கு பசுமை காலநிலை நிதியத்தின் மூலமாக முதலீடு வழங்க பரிந்துரைக்கப்படும். பசுமை தொழில்நுட்ப தயாரிப்புகளை/ சேவைகளை அரசு

கொள்முதல் செய்ய ஏதுவாக அரசு கொள்முதல் உதவி மையமானது தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் சென்னை மற்றும் மதுரை அலுவலகங்களில் அமைக்கப்படும். இம்மையங்களின் வாயிலாக ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் தங்களது பசுமை தொழில்நுட்ப தயாரிப்புகளின் செயல்பாட்டினை பரிசோதித்துப் பார்க்க அரசு பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகளின் வாயிலாக வழிவகை செய்யப்படும்.

## 7.12. தமிழ்நாடு பட்டியலினத்தவர் / பழங்குடியினர் புத்தொழில் நிதி

புதுயுகத் தொழில்முனைவில் அனைத்து சமூகத்தினரையும் உள்ளடக்கிய வளர்ச்சியினை அடைவதற்காக 2022–23ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாடு பட்டியலினத்தவர் / பழங்குடியினர் புத்தொழில் நிதித்திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்தப் பிரிவுகளை சார்ந்த தொழில்முனைவோர்களால் தொடங்கி நடத்தப்பட்டுவரும் புத்தொழில்

நிறுவனங்களுக்கு பங்கு முதலீடு அல்லது பிணையில்லா கடனாக நிதி வழங்க ரூ.30 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. 2022-23ஆம் நிதி ஆண்டில் இதுவரை 14 புத்தொழில் நிறுவனங்களில் ரூ.18.8 கோடி முதலீடு உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் வழியாக நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்தின் வழியாக இப்பிரிவுகளைச் சார்ந்த இன்னும் பலர் பயன்பெறும் வகையில் மேலும் பல விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன. அரசே முதலீடு செய்வதன் வாயிலாக இந்நிறுவனங்களுக்கு புதிய சந்தை வாய்ப்புகள் பெருகும்.

### 7.13. தனித்த வணிக அடையாளங்களை உருவாக்க உதவுதல் மற்றும் புத்தாக்க தயாரிப்புகளை அறிமுகப்படுத்துதல்

புத்தொழில் நிறுவனங்கள் சந்தையில் தமக்கென தனித்த வணிக அடையாளங்களை உருவாக்கிக் கொள்ள தேவையான திறன்களை

கற்றுத்தருதல் மற்றும் தங்களது தயாரிப்புகள்/சேவைகளை அறிமுகப்படுத்தும் வாய்ப்புகளை வழங்குதல் ஆகியவற்றிற்காக தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் வழியாக பிராண்ட்லேப்ஸ் (Brand labs), லான்ச்பேட்(Launchpad) ஆகிய நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன.

பிராண்ட்லேப்ஸ் என்பது புத்தொழில் நிறுவனர்கள், தொழில்முனைவு ஆர்வலர்கள், மாணவர்கள், வெற்றியடைந்த தொழில் ஆளுமைகள், தொழில்முனைவு வல்லுநர்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கும் களமாகும். தமிழ்நாட்டில் பல புத்தொழில் நிறுவனங்கள் புதுமையான தயாரிப்புகளை உற்பத்தி செய்தாலும், சந்தைப்படுத்துதலிலும் வணிகச்சந்தையில் தனித்துவமான ஒரு இடத்தை அடைவதிலும் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். இதற்கான தீர்வு காணும் விதமாக பல நிகழ்வுகள் இத்தளத்தின் வாயிலாக ஒருங்கிணைக்கப்பட்டு

வருகின்றன. லான்ச் பேட் என்பது புத்தொழில் நிறுவனங்கள் தங்களது தயாரிப்புகளை அறிமுகப்படுத்தும் நிகழ்வாகும்.

சென்னை, மதுரை, திருநெல்வேலி, திருச்சி, ஈரோடு ஆகிய இடங்களில் இந்நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இதுவரை 106 தயாரிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## 7.14. நிரல் போட்டி (Hackathon)

அரசு, சமூகம் மற்றும் தொழில் துறைகளில் நீண்ட காலமாக நிலவும் சிக்கல்களுக்கு புத்தாக்க தீர்வுகளை காணும் நோக்கத்தில் நிரல் போட்டிகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையுடன் இணைந்து வேளாண் நிரல் போட்டி நடத்தப்பட்டது.சிறந்த தீர்வுகளை வழங்கும் புத்தொழில் நிறுவனங்கள்/ விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு டான்சீட் நிதி வழங்க பரிசீலனையில் உள்ளது. மேலும் மருத்துவத்

தொழில்நுட்பம், நிலைத்த நீடித்த வளர்ச்சி, ஆடை உற்பத்தி, அரசுத்துறைக்கான தொழில்நுட்பத்தேவைகள் என பல பிரிவுகளுக்கான நிரல் போட்டிகள் வடிவமைத்து நடத்தப்பட்டு வருகின்றன.

**தா. மோ. அன்பரசன்**
**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்**

# இணைப்பு – 1

| தமிழ்நாடு சிட்கோ நிறுவனத்தால் தற்போது பராமரிக்கப்படும் 127 தொழிற்பேட்டைகள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வ.எண் | மாவட்டம் | வ.எண் | அமைவிடம் | அரசு / சிட்கோ | துவங்கப் பட்ட ஆண்டு | மொத்த பரப்பளவு (ஏக்கரில்) |
| 1 | சென்னை | 1 | கிண்டி | அரசு | 1958 | 404.08 |
| | | 2 | அரும்பாக்கம் | சிட்கோ | 1979 | 3.92 |
| | | 3 | வில்லிவாக்கம் | சிட்கோ | 1979 | 2.04 |
| | | 4 | கொடுங்கையூர் | சிட்கோ | 1979 | 7.88 |
| | | 5 | பெருங்குடி | அரசு | 1974 | 112.55 |
| | | 6 | திருவான்மியூர் | அரசு | 1967 | 28.91 |
| | | 7 | அம்பத்தூர் | அரசு | 1963 | 1167.00 |
| 2 | திருவள்ளூர் | 8 | காக்களூர் | அரசு | 1988 | 328.13 |
| | | 9 | திருமழிசை | சிட்கோ | 1988 | 160.85 |
| | | 10 | கும்மிடிபூண்டி | சிட்கோ | 1988 | 25.24 |
| | | 11 | ஆர்.கே.பேட் | சிட்கோ | 1996 | 8.15 |
| | | 12 | விச்சூர் | சிட்கோ | 1994 | 59.16 |
| | | 13 | திருமுல்லைவாயல் (ம.தொ.பூ) | சிட்கோ | 2001 | 246.07 |
| | | 14 | செங்கரை | சிட்கோ | 2017 | 36.25 |
| 3 | செங்கல்பட்டு | 15 | மறைமலைநகர் | சிட்கோ | 1981 | 39.50 |
| | | 16 | ஆலத்தூர் (பார்மா) | சிட்கோ | 1984 | 150.49 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 17 | ஆலத்தூர் (பகுதி–2) | சிட்கோ | 2022 | 67.96 |
| | | 18 | தண்டரை | சிட்கோ | 2017 | 44.30 |
| 4 | காஞ்சிபுரம் | 19 | காஞ்சிபுரம் | அரசு | 1968 | 37.95 |
| | | 20 | திருமுடிவாக்கம் (முதன்மை) | சிட்கோ | 1993 | 201.11 |
| | | 21 | திருமுடிவாக்கம் (குறு) | சிட்கோ | 2013 | 5.262 |
| | | 22 | திருமுடிவாக்கம் (ம.தொ.பூ) | சிட்கோ | 2002 | 11.48 |
| | | 23 | திருமுடிவாக்கம் பகுதி–2 | சிட்கோ | 2017 | 22.44 |
| 5 | ராணிப் பேட்டை | 24 | அரக்கோணம் | அரசு | 1968 | 51.74 |
| | | 25 | ராணிப்பேட்டை | சிட்கோ | 1972 | 113.44 |
| | | 26 | முகுந்தராயபுரம் | சிட்கோ | 1980 | 86.19 |
| | | 27 | வன்னிவேடு | சிட்கோ | 1987 | 16.44 |
| | | 28 | முள்ளுவாடி & நாகலேரி | சிட்கோ | 2020 | 20.00 |
| 6 | திருப்பத்தூர் | 29 | விண்ணமங்கலம் | சிட்கோ | 2009 | 10.49 |
| | | 30 | வாணியம்பாடி | சிட்கோ | 2013 | 7.08 |
| | | 31 | மின்னூர் | சிட்கோ | 2014 | 10.00 |
| 7 | வேலூர் | 32 | காட்பாடி | அரசு | 1968 | 19.48 |
| 8 | திருவண்ணா மலை | 33 | திருவண்ணாமலை | அரசு | 1968 | 15.56 |
| | | 34 | பெரியகோளப்பாடி | சிட்கோ | 2022 | 57.18 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | கிருஷ்ணகிரி | 35 | கிருஷ்ணகிரி | அரசு | 1965 | 41.86 |
| | | 36 | ஊத்தங்கரை | சிட்கோ | 1995 | 41.28 |
| | | 37 | ஒசூர் | அரசு | 1974 | 12.34 |
| | | 38 | ஒசூர் (சிப்காட்) | சிட்கோ | 1976 | 95.15 |
| | | 39 | ஒசூர் (புதியது) | சிட்கோ | 1999 | 24.41 |
| | | 40 | பர்கூர் | சிட்கோ | 1995 | 31.64 |
| | | 41 | போலுப்பள்ளி | சிட்கோ | 2009 | 60.96 |
| 10 | தருமபுரி | 42 | தருமபுரி | அரசு | 1965 | 20.28 |
| | | 43 | கடகத்தூர் | சிட்கோ | 2009 | 7.02 |
| | | 44 | பர்வதனஹள்ளி | சிட்கோ | 2014 | 29.89 |
| | | 45 | ஈச்சம்பாடி | சிட்கோ | 2017 | 50.46 |
| 11 | சேலம் | 46 | சேலம் | அரசு | 1967 | 19.55 |
| | | 47 | மேட்டூர் | அரசு | 1967 | 184.38 |
| | | 48 | கருப்பூர் (ம.தொ.பூ) | சிட்கோ | 2004 | 51.24 |
| | | 49 | வீரபாண்டி | சிட்கோ | 1993 | 9.79 |
| | | 50 | கோரணம்பட்டி | சிட்கோ | 2017 | 16.61 |
| | | 51 | சூரமங்களம் | அரசு | 1986 | 27.50 |
| | | 52 | பெரியசீரகப்பாடி | சிட்கோ | 2022 | 26.86 |
| 12 | நாமக்கல் | 53 | நாமக்கல் | சிட்கோ | 1977 | 10.09 |
| | | 54 | திருச்செங்கோடு | சிட்கோ | 1980 | 9.18 |
| | | 55 | வேட்டம்பாடி | சிட்கோ | 2014 | 15.34 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 56 | இராசம்பாளையம் | சிட்கோ | 2022 | 18.37 |
| 13 | ஈரோடு | 57 | ஈரோடு | அரசு | 1959 | 25.13 |
| | | 58 | நஞ்சைஊத்துக்குளி | சிட்கோ | 1995 | 13.05 |
| | | 59 | பெருந்துறை | சிட்கோ | 2017 | 49.47 |
| 14 | கோயம்புத்தூர் | 60 | குறிச்சி | அரசு | 1972 | 88.43 |
| | | 61 | மலுமிச்சம்பட்டி | சிட்கோ | 1994 | 36.14 |
| | | 62 | காளப்பட்டி | அரசு | 1972 | 13.46 |
| 15 | திருப்பூர் | 63 | கணபதிபாளையம் | சிட்கோ | 1993 | 17.10 |
| | | 64 | திருப்பூர் | சிட்கோ | 1978 | 10.14 |
| | | 65 | குடிமங்கலம் | சிட்கோ | 1992 | 6.74 |
| | | 66 | ராசாத்தவலசு | சிட்கோ | 2011 | 51.80 |
| 16 | நீலகிரி | 67 | ஊட்டி | சிட்கோ | 1981 | 10.65 |
| 17 | கடலூர் | 68 | கடலூர் | அரசு | 1971 | 15.60 |
| | | 69 | வடலூர் | அரசு | 1972 | 26.22 |
| | | 70 | பெரியநெசலூர் | சிட்கோ | 2015 | 90.80 |
| | | 71 | விருதாச்சலம் | அரசு | 1961 | 41.53 |
| 18 | விழுப்புரம் | 72 | பட்டணம் | சிட்கோ | 2014 | 60.57 |
| | | 73 | வெண்மணியாத்தூர் | சிட்கோ | 2011 | 36.82 |
| 19 | கள்ளக் குறிச்சி | 74 | காட்டுவன்னஞ்சூர் | சிட்கோ | 2014 | 42.00 |
| | | 75 | ஆசனூர் பகுதி I&II | சிட்கோ | 2009 & 2015 | 212.83 |
| 20 | பெரம்பலூர் | 76 | எலம்பலூர் | சிட்கோ | 2009 | 44.48 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21 | அரியலூர் | 77 | மல்லூர் | சிட்கோ | 2014 | 25.34 |
| 22 | தஞ்சாவூர் | 78 | தஞ்சாவூர் | அரசு | 1968 | 21.94 |
| | | 79 | கும்பகோணம் | அரசு | 1968 | 32.30 |
| | | 80 | பிள்ளையார்பட்டி | சிட்கோ | 1974 | 10.96 |
| | | 81 | நாஞ்சிக்கோட்டை | சிட்கோ | 1996 | 26.30 |
| | | 82 | பாளையப்பட்டி | சிட்கோ | 2012 | 104.37 |
| 23 | நாகப் பட்டினம் | 83 | நாகப்பட்டினம் | அரசு | 1966 | 20.97 |
| 24 | மயிலாடு துறை | 84 | மயிலாடுதுறை | சிட்கோ | 2009 | 12.56 |
| 25 | திருச்சி | 85 | துவாக்குடி | அரசு | 1974 | 478.38 |
| | | 86 | திருவெறும்பூர் | அரசு | 1974 | 74.50 |
| | | 87 | அரியமங்கலம் | அரசு | 1974 | 17.64 |
| | | 88 | கும்பக்குடி | சிட்கோ | 2009 | 24.46 |
| | | 89 | வாழவந்தான் கோட்டை (ம.தொ.பூ) | சிட்கோ | 2003 | 51.70 |
| | | 90 | வாழவந்தான் கோட்டை | சிட்கோ | 2008 | 179.02 |
| 26 | கரூர் | 91 | கரூர் (வெள்ளாளப்பட்டி) | அரசு | 1974 | 26.63 |
| | | 92 | கரூர் (ஆத்தூர்) | சிட்கோ | 1993 | 36.29 |
| | | 93 | புஞ்சைகாளக் குறிச்சி | சிட்கோ | 2016 | 52.076 |
| 27 | புதுக் கோட்டை | 94 | புதுக்கோட்டை | அரசு | 1974 | 23.18 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 95 | புதுக்கோட்டை (சிப்காட்) | சிட்கோ | 1988 | 51.45 |
| | | 96 | மாத்தூர் | சிட்கோ | 1975 | 26.00 |
| | | 97 | மாத்தூர்(புதியது) | சிட்கோ | 2013 | 19.92 |
| | | 98 | ஆலங்குடி | சிட்கோ | 2022 | 15.67 |
| 28 | தேனி | 99 | தேனி | அரசு | 1963 | 26.59 |
| | | 100 | ஆண்டிப்பட்டி | சிட்கோ | 1994 | 22.34 |
| | | 101 | மரிக்குண்டு | சிட்கோ | 2017 | 79.40 |
| 29 | திண்டுக்கல் | 102 | திண்டுக்கல் | அரசு | 1965 | 39.91 |
| | | 103 | வத்தல குண்டு | அரசு | 1965 | 16.26 |
| 30 | மதுரை | 104 | கே.புதூர் | அரசு | 1960 | 56.05 |
| | | 105 | கப்பலூர் | அரசு | 1966 | 535.64 |
| | | 106 | கப்பலூர்(ம.தொ.பே) | சிட்கோ | 2008 | 35.37 |
| 31 | இராமநாதபுரம் | 107 | பரமக்குடி | சிட்கோ | 1976 | 10.00 |
| | | 108 | கீழநாகாச்சி | சிட்கோ | 1993 | 10.00 |
| | | 109 | உரப்புளி | சிட்கோ | 1993 | 12.14 |
| | | 110 | சக்கரக்கோட்டை | சிட்கோ | 2017 | 100.00 |
| 32 | சிவகங்கை | 111 | காரைக்குடி | அரசு | 1966 | 180.19 |
| | | 112 | சிவகங்கை | அரசு | 1966 | 70.61 |
| | | 113 | கிருங்காக்கோட்டை | சிட்கோ | 1993 | 21.85 |
| 33 | விருதுநகர் | 114 | விருதுநகர் | அரசு | 1958 | 45.65 |
| | | 115 | ராசபாளையம் | சிட்கோ | 1995 | 41.13 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 116 | விருதுநகர் (நகர்புறம்) | சிட்கோ | 2013 | 37.54 |
| 34 | தென்காசி | 117 | கடையநல்லூர் | சிட்கோ | 1992 | 10.00 |
| | | 118 | குருக்கள்பட்டி | சிட்கோ | 2019 | 68.80 |
| 35 | திருநெல் வேலி | 119 | பேட்டை | அரசு | 1959 | 50.55 |
| | | 120 | வள்ளியூர் | சிட்கோ | 2005 | 39.91 |
| | | 121 | கங்கைகொண்டான் | சிட்கோ | 2020 | 89.92 |
| 36 | தூத்துக்குடி | 122 | கோவில்பட்டி | அரசு | 1962 | 85.54 |
| | | 123 | தூத்துக்குடி– பகுதி 1 | சிட்கோ | 1988 | 9.72 |
| | | 124 | தூத்துக்குடி–பகுதி 2 | சிட்கோ | 2003 | 14.46 |
| | | 125 | பிடாநேரி | சிட்கோ | 2016 | 108.23 |
| 37 | கன்னியா குமரி | 126 | கோணம் | அரசு | 1964 | 20.70 |
| | | 127 | மார்த்தாண்டம் | அரசு | 1964 | 7.50 |
| | | | **மொத்தம்** | | | **8453.13** |

## இணைப்பு – 2

## ஒன்றிய அரசின் குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட பொது வசதி மைய திட்டங்கள் – 28

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | ஒன்றிய அரசின் மானியம் | மாநில அரசு மானியம் | சிறப்பு நோக்க அமைப்பின் பங்கு | வங்கிக் கடன் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மாவு அரவை இயந்திரம் தயாரிக்கும் குழுமம், கோயம்புத்தூர் | 2.88 | 0.99 | 0.17 | 1.73 | 0.00 |
| 2 | ஜவ்வரிசி குழுமம், சேலம் | 0.92 | 0.73 | 0.00 | 0.19 | 0.00 |
| 3 | தீப்பெட்டிக் குழுமம், குடியாத்தம் | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |
| 4 | தீப்பெட்டிக் குழுமம், விருதுநகர் | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |
| 5 | தீப்பெட்டிக் குழுமம், வில்லிபுத்தூர் | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |
| 6 | தீப்பெட்டிக் குழுமம், சாத்தூர் | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |
| 7 | தீப்பெட்டிக் குழுமம், கழுகுமலை | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | தீப்பெட்டிக் குழுமம், கோவில்பட்டி | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |
| 9 | பீங்கான் குழுமம், விருதாச்சலம் | 0.83 | 0.43 | 0.10 | 0.18 | 0.11 |
| 10 | கயிறு குழுமம், சிவகங்கை | 6.59 | 5.00 | 0.66 | 0.93 | 0.00 |
| 11 | அரிசி ஆலைக் குழுமம், கீழப்பாவூர் | 6.91 | 4.66 | 0.69 | 1.46 | 0.10 |
| 12 | தானியங்கி உதிரி பாகங்கள் குழுமம், ஓசூர் | 6.91 | 4.39 | 0.71 | 1.05 | 0.75 |
| 13 | அச்சு குழுமம், கிருஷ்ணகிரி | 11.73 | 9.64 | 1.00 | 1.08 | 0.00 |
| 14 | அரிசி ஆலைக் குழுமம், ஆலங்குளம் | 7.87 | 5.50 | 0.79 | 0.84 | 0.74 |
| 15 | ஸ்டைன்லெஸ் ஸ்டீல் பேப்ரி கேஷன்ஸ் குழுமம் சேலம் | 16.33 | 12.78 | 1.00 | 2.55 | 0.00 |
| 16 | அரிசி மில் குழுமம், தஞ்சாவூர் | 2.12 | 1.00 | 0.40 | 0.21 | 0.50 |
| 17 | பிளாஸ்டிக் குழுமம் காஞ்சிபுரம் | 14.85 | 10.27 | 1.00 | 2.58 | 1.00 |
| 18 | அச்சுக் குழுமம் சிவகாசி | 13.15 | 7.68 | 0.91 | 1.80 | 2.76 |
| 19 | தங்க நகைக் குழுமம், மதுரை | 3.56 | 2.56 | 0.29 | 0.40 | 0.31 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 20 | பொறியியல் குழுமம், பரமக்குடி | 4.99 | 3.74 | 0.23 | 0.54 | 0.48 |
| 21 | ஸ்டைன்லெஸ் ஸ்டீல் பாத்திரக் குழுமம், கும்பகோணம் | 1.26 | 0.99 | 0.08 | 0.20 | 0.00 |
| 22 | ஆயுத்த ஆடை குழுமம் (பெண்கள்), தளவாய்புரம் | 1.04 | 0.74 | 0.09 | 0.21 | 0.00 |
| 23 | கயிறு குழுமம், ஈரோடு | 5.92 | 4.04 | 0.48 | 0.60 | 0.79 |
| 24 | பொறியியல் குழுமம் அம்பத்தூர் | 11.24 | 8.05 | 0.54 | 1.15 | 1.50 |
| 25 | தங்க நகைக் குழுமம் திருச்சி | 3.60 | 2.88 | 0.36 | 0.36 | 0.00 |
| 26 | பொறியியல் குழுமம் இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டம் | 9.27 | 6.16 | 0.97 | 1.09 | 1.04 |
| 27 | கேட் & கிரில் குழுமம், திருமுல்லைவாயில் திருவள்ளூர் மாவட்டம் | 3.45 | 1.98 | 0.90 | 0.57 | 0.00 |
| 28 | தீப்பெட்டிக் குழுமம், ஓ.மேட்டுப்பட்டி விருதுநகர் மாவட்டம் | 3.47 | 2.05 | 0.36 | 0.43 | 0.64 |
| | **மொத்தம்** | **148.25** | **101.42** | **12.38** | **21.65** | **12.82** |

## இணைப்பு – 3

## குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயலாக்கத்தில் உள்ள பொது வசதி மைய திட்டங்கள் – 15

**(ரூ கோடியில்)**

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | ஒன்றிய அரசின் மானியம் | மாநில அரசு மானியம் | சிறப்பு நோக்க அமைப்பின் பங்கு | வங்கிக் கடன் |
|---|---|---|---|---|---|---|
| 1 | தானியங்கி மற்றும் விசைத்தறி குழுமம், சேலம் மாவட்டம் | 13.34 | 8.86 | 0.99 | 1.62 | 1.87 |
| 2 | பின்னலடைக் குழுமம், திருப்பூர் மாவட்டம் | 15.34 | 8.34 | 3.00 | 4.00 | 0.00 |
| 3 | அறைகலன்கள் குழுமம் சேலம் மாவட்டம் | 14.46 | 10.67 | 1.89 | 1.89 | 0.00 |
| 4 | கனரக வாகன கட்டுமானக் குழுமம் நாமக்கல் மாவட்டம் | 16.53 | 12.82 | 1.86 | 1.86 | 0.00 |
| 5 | ஆயத்த ஆடை குழுமம், திருப்பூர் மாவட்டம் | 16.25 | 8.57 | 3.00 | 4.68 | 0.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | அச்சு மற்றும் அட்டை பெட்டி குழுமம், ஓசூர் கிருஷ்ணகிரி மாவட்டம் | 13.95 | 11.04 | 1.39 | 1.52 | 00.00 |
| 7 | விவசாய உபகரணங்கள் கட்டமைப்பு குழுமம், எலம்பலூர் பெரம்பலூர் மாவட்டம் | 12.19 | 9.31 | 1.22 | 1.26 | 0.40 |
| 8 | நெசவு குழுமம், பெருந்துறை ஈரோடு மாவட்டம் | 18.68 | 9.63 | 1.87 | 7.18 | 0.00 |
| 9 | விசைத்தறி குழுமம், இராசிபுரம், நாமக்கல் மாவட்டம் | 20.09 | 11.99 | 2.51 | 5.59 | 0.00 |
| 10 | வடிவமைப்புக் குழுமம், திருப்பூர் மாவட்டம் | 14.67 | 9.79 | 1.47 | 3.41 | 0.00 |
| 11 | கம்பளி குழுமம் குன்னூர் நீலகிரி மாவட்டம் | 2.84 | 2.27 | 0.28 | 0.28 | 0.00 |
| 12 | விசைத்தறி குழுமம், பல்லடம் திருப்பூர் மாவட்டம் | 17.59 | 11.52 | 1.76 | 4.31 | 0.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 13 | அச்சுக் குழுமம், சேலம் மாவட்டம் | 13.47 | 10.76 | 1.35 | 1.35 | 0.00 |
| 14 | தங்க நகை குழுமம், திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம் | 7.48 | 5.99 | 0.75 | 0.75 | 0.00 |
| 15 | தங்க நகை குழுமம், சென்னை மாவட்டம் | 10.32 | 8.25 | 1.03 | 1.03 | 0.00 |
| | **மொத்தம்** | **207.20** | **139.81** | **24.37** | **40.73** | **2.27** |

## இணைப்பு – 4

## குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசிற்கு பரிந்துரைக்கப்பட்ட பொது வசதி மைய திட்டங்கள் – 8

**(ரூ கோடியில்)**

| வ. எண். | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | ஒன்றிய அரசின் மானியம் | மாநில அரசு மானியம் | சிறப்பு நோக்க அமைப்பின் பங்கு |
|---|---|---|---|---|---|
| 1 | தங்க நகை குழுமம், கோயம்புத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம் | 15.30 | 11.81 | 1.53 | 1.96 |
| 2 | பசுமை ஏலக்காய் குழுமம், தேனி, தேனி மாவட்டம் | 14.26 | 11.28 | 1.43 | 1.55 |
| 3 | தோல் குழுமம், குரோம்பேட்டை, செங்கல்பட்டு மாவட்டம் | 20.00 | 16.00 | 2.00 | 2.00 |
| 4 | அச்சு குழுமம், ஆற்காடு, ராணிபேட்டை மாவட்டம் | 12.45 | 9.37 | 1.41 | 1.67 |
| 5 | அட்டைப் பெட்டி அச்சு குழுமம் திருப்பத்தூர் திருப்பத்தூர் மாவட்டம் | 13.58 | 10.72 | 1.36 | 1.51 |
| 6 | கயிறு குழுமம் திண்டுக்கல், திண்டுக்கல் மாவட்டம் | 18.68 | 14.33 | 1.86 | 2.48 |
| 7 | கயிறு குழுமம் பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம். | 23.73 | 14.00 | 2.00 | 7.73 |
| 8 | துல்லிய கருவி பொறியியல் குழுமம், ஓசூர் | 16.09 | 12.87 | 1.61 | 1.61 |
| | **மொத்தம்** | **134.09** | **100.38** | **13.20** | **20.51** |

## இணைப்பு – 5

## குறுந்தொழில் குழுமங்களுக்கான (CPI) பொது உற்பத்தி உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் முடிவடைந்த திட்டங்கள் – 3

**(ரூ. கோடியில்)**

| வ. எண். | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | மாநில அரசு மானியம் | சிறப்பு நோக்க அமைப்பின் பங்கு |
|---|---|---|---|---|
| 1 | அட்டை பெட்டி குழுமம், கவுன்டம்பாளையம், திருப்பூர் மாவட்டம். | 3.90 | 2.50 | 1.40 |
| 2 | வெள்ளி கொலுசு குழுமம், சிவதாபுரம், சேலம் மாவட்டம். | 2.50 | 1.75 | 0.75 |
| 3 | நெகிழி மறுசுழற்சி குழுமம், அப்பநாயக்கன்பட்டிபுதூர், சூளூர் வட்டம் கோயம்புத்துர் மாவட்டம். | 4.00 | 2.50 | 1.50 |
| | **மொத்தம்** | **10.40** | **6.75** | **3.65** |

## குறுந்தொழில் குழுமங்களுக்கான (CPI) பொது உற்பத்தி உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் நடைமுறையில் உள்ள திட்டங்கள் – 6

**(ரூ. கோடியில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | மாநில அரசு மானியம் | சிறப்பு நோக்க அமைப்பின் பங்கு |
|---|---|---|---|---|
| 1. | பொது வசதி மையம் உருவாக்குதல், ஈரோடு தொழிற்பேட்டை, ஈரோடு மாவட்டம். | 6.52 | 2.33 | 4.19 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | பொது வசதி மையம் உருவாக்குதல், காக்களூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கம், திருவள்ளூர் மாவட்டம். | 4.64 | 2.33 | 2.31* |
| 3. | திருமுடிவாக்கம் தொழிற்பேட்டை பகுதி –I தொழிற்சாலை ஆலைக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், காஞ்சிபுரம் மாவட்டம். | 2.60 | 1.80 | 0.80 |
| 4. | வார்ப்புக் குழுமம், வெள்ளனூர் கோயம்புத்தூர் மாவட்டம். | 4.44 | 2.50 | 1.94 |
| 5. | துல்லிய பொறியியல் குழுமம், மதுக்கரை, கோயம்புத்தூர் மாவட்டம். | 4.76 | 2.50 | 2.26 |
| 6. | தீப்பெட்டி குழுமம், குடியாத்தம். வேலூர் மாவட்டம். | 3.62 | 2.50 | 1.12 |
| | **மொத்தம்** | **26.58** | **13.96** | **12.62** |

* சிறப்பு நோக்க அமைப்பிற்கு பதிலாக சிட்கோவின் பங்களிப்பு

## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

## வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

## கோரிக்கை எண். 44

(ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்குத் தலைப்புகள் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2022-2023 | திருத்திய மதிப்பீடு 2022-2023 | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2023-2024 |
|---|---|---|---|
| 2425-கூட்டுறவு | 0 | 3250 | 0 |
| 2851-கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் | 7685241 | 7601481 | 12735141 |
| 2852-தொழில்கள் | 1185521 | 698218 | 685942 |
| 3451-தலைமைச் செயலகம்-பொருளாதாரப் பணிகள் | 51571 | 62163 | 71311 |
| 4408- உணவுபொருள் சேமிப்பு மற்றும் கிடங்கு வசதி குறித்த மூலதன செலவு | 0 | 0 | 50000 |
| 4851-கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 50002 | 50002 | 50003 |
| 6851-கிராமத் தொழில்கள், சிறு தொழில்களுக்கான கடன்கள் | 142685 | 632928 | 1500001 |
| 6860-நுகர்வோர் தொழில்களுக்கான கடன்கள் | 0 | 313800 | 0 |
| 7610-அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | 1 | 1 | 1 |
| **மொத்தம்** | **9115021** | **9361843** | **15092399** |




மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் 25.08.2022 அன்று "தோள் கொடுப்போம் தொழில்களுக்கு" திருப்பூர் மண்டல மாநாட்டில் "தொழில் தொடங்குவது எப்படி" என்ற கையேடு மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வசதியாக்கல் நிறுவனத்திற்கான புதிய சின்னம் வெளியிடப்பட்டது.






மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25.08.2022 அன்று திருப்பூரில் நடைபெற்ற “தோள் கொடுப்போம் தொழில்களுக்கு” மண்டல மாநாட்டில் கோயம்புத்தூரில் அமைந்துள்ள தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனத்தின் அலுவலகத்தைக் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் 16.09.2022 அன்று “தோள் கொடுப்போம் தொழில்களுக்கு” மதுரை தெற்கு மண்டல மாநாட்டில் வங்கிகள், ட்ரட்ஸ் (TReDS) தளத்திற்கான ரூ.1391 கோடி கடன் உச்ச வரம்பினை அறிவித்தன.



**புத்தொழில் ஆதார மானிய நிதி**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் 31.12.2022 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற விழாவில் 25 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.1.25 கோடி புத்தொழில் ஆதார மானிய நிதிக்கான ஆணைகள் வழங்கப்பட்டது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 16.09.2022 அன்று மதுரையில் நடைபெற்ற MSME-தெற்கு மண்டல மாநாட்டில், EDII-TN நிறுவனத்தின் "பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தினை" தொடங்கி வைத்தார்கள்.



மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் அரசு உயர் அதிகாரிகள் மற்றும் தொழில் முனைவோர்கள் அடங்கிய குழு, 2022 அக்டோபரில் செக் குடியரசு நாட்டிற்கு அரசு முறை பயணம் மேற்கொண்டு அந்நாட்டு தொழில் நிறுவனங்களை பார்வையிட்டு தமிழ்நாட்டிலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பது தொடர்பாக ஆலோசனை மேற்கொண்டார்கள்.





டான்சியின் புதிய காட்சியக விற்பனைக்கூடம் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களால் 8.2.2023 அன்று சென்னை, கிண்டியில் திறந்து வைக்கப்பட்டது.



நீட்ஸ் (NEEDS) திட்டத்தின் கீழ் பயன் பெற்ற வண்ணக்கூரை
தகடுகள் தயாரிக்கும் நிறுவனம், தேனி மாவட்டம்



நீட்ஸ் (NEEDS) திட்டத்தின் கீழ் பயன் பெற்ற உடற்பயிற்சி மையம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்



யுஒய்இஜிபி (UYEGP) திட்டத்தின் கீழ் பயன்பெற்ற ஒரு சூப்பர் மார்க்கெட், பெரம்பலூர் மாவட்டம்



ஊதியப்பட்டியல் மானியத் திட்டத்தின் கீழ் பயன் பெற்ற ஒரு ஆயத்த ஆடை நிறுவனம், காஞ்சிபுரம் மாவட்டம்



**அம்பத்தூர் தொழிற்பேட்டையில் உடனடியாக தொழில் தொடங்குவதற்கு தேவையான வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி தொழில் வளாகம் கட்டும் பணிகள்**

| | | |
|---|---|---|
| திட்ட மதிப்பு | : | ரூ.60.55 கோடி |
| தளங்களின் எண்ணிக்கை | : | 4 |
| கட்டிடப் பரப்பு | : | 1,31,427 ச.அடி |
| தொழிற்கூட அலகுகளின் எண்ணிக்கை | : | 112 |

:



**அம்பத்தூர் தொழிற்பேட்டையில் பணியாளர்கள் தங்கும் விடுதி கட்டும் பணிகள்**

| | | |
|---|---|---|
| திட்ட மதிப்பு | : | ரூ.29.47 கோடி |
| தளங்களின் எண்ணிக்கை | : | 5 |
| கட்டிடப் பரப்பு | : | 1,07,624 ச.அடி |
| பணியாளர்கள் தங்கும் படுக்கை வசதிகளின் எண்ணிக்கை | : | 800 |



**மரக்கலன்கள் குழுமம், கருமாபுரம், சேலம் மாவட்டம்**

குறு, சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சி திட்டம்

திட்ட மதிப்பீடு – ரூ. 1446.33 இலட்சம்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.